பெற்றோர்களுக்கு



T371
KUT

கலாநிதி பி. குடலிகம

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகு

நூலக
வாணைய ... குற்ற
மாகும். இரவல் பெ
வதற்கான ளையும் செவ்
பின்பற்றும கேட்கப்
ளர்.

நூல்களை து
லும். பென் ால்

UNIVERSITY OF PERADENIYA
15-12-1995
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

371
Kur

(Reserve)

பெற்றோர்களுக்கு

With Complements.

28/06/95

கலாநிதி பி. குடலிகம
சிரேஷ்ட விரிவுரையாளர் (கல்விப் பிரிவு)
திறந்த பல்கலைக்கழகம்
நாவல
நுகேகொட.

471502

මහාචාර්ය ඩබ්: ජ්. විශ්වා වර්ණපාල
අධ්‍යාපන නියෝජ්‍ය අමාත්‍ය,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாவது பதிப்பு – 1993
பதிப்புரிமை பெற்றது
கலாநிதி பீ. குடலிகம

UNIVERSITY OF PERADENIYA
15-12-1995
LIBRARY

I.S.B.N. 955 - 95326 - 1 - 8

பதிப்பு

பசுபிக் அச்சகம் பிரைவேட் லிமிரெட்,
267, ஆட்டுப்பட்டித் தெரு,
கொழும்பு – 13.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களுக்கு ஆற்றும் சேவை

இன்று இலங்கை ஒழுக்க நெறியில் எந்தளவுக்கு சீர்கெட்டிருக்கிறது என்பது விவாதத்துக்குரிய விடயமல்ல. நல்லொழுக்கம் இன்று எம்மிடம் இருந்து விடை பெற்றுச் சென்றுள்ளன. பெறுமதிமிக்க சமூகவிழுமியங்கள் வேகமாக சிதைந்து போய்க்கொண்டிருக்கின்றன. அதன் காரணமாக பொதுவாக மனிதனும் தன் மனிதத் தன்மையிலிருந்து விலகிச் செல்வதைக் காணக்கூடியதாக இருப்பது விசனிக்கத்தக்கதாகும்.

இத்தகையதொரு கவலைக்கிடமான காலகட்டத்தில் கலாநிதி திருமதி. பீ. குடலிகம அவர்களினால் எழுதப்பட்ட 'பெற்றோர்களுக்கு' எனும் இச்சிறு நூல் வெளிவருவதைக் காணக்கிடைப்பது வெகு பெரும் பாக்கியமாகும். அந்த நற்பணியில் சிறியளவில் தானும் இவ்வாறு பங்குகொள்ளக் கிடைத்தமையை ஒரு பெரும் பேறெனக் கருதுகிறேன்.

நமது நாடு இன்று முகங்கொடுத்துள்ள கவலைக்கிடமான நிலைமைக்கு எமது பிள்ளைச் செல்வங்களை பெற்று வளர்க்கும் போது எமது மூத்த தலைமுறையினர் கொண்டிருந்து இன்னும் கொண்டிருக்கிற அசிரத்தையே ஒரு காரணம் என்றால் அது முற்றிலும் உண்மையானதாகும். அதற்கு நமது பெற்றோர்களே பிரதான காரணம் என்பதும் அதே போன்று உண்மையானதாகும். ஆகவே எதிர்கால சந்ததியை ஆபத்திலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்கான ஒரு வழி பிள்ளைகளைப்பேணி வளர்ப்பது பற்றி பெற்றோர்களை விழிப்படையச் செய்வதாகும். அது பற்றி அவர்களை விளக்கம் பெறச் செய்ய வேண்டும்.

நூலாசிரியர் திருமதி குடலிகம இச்சிறு நூலை எமக்கு ஆக்கித் தந்திருப்பதன் மூலம் அந்தப் பாரிய நடவடிக்கையில் நேரடியாக பங்கு கொள்கிறார். இந்நூலில் அடங்கியுள்ள கருத்துக்களின் மூலம் பிள்ளைகளைப் பற்றி நாம் கொண்டுள்ள தவறான கருத்துக்களுக்குச் சாவு மணியடிக்கிறார். சரியான கருத்துக்களை எடுத்துரைக்கின்றார். அது மட்டுமல்ல மிக எளிமையாகவும், மனங்கவரக்கூடிய விதமாகவும் அன்றாட வழக்கிலுள்ள மொழியைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையாண்டு வாசகர் மத்தியில் உயர்ந்த விஞ்ஞானக் கருத்துக்களை முன்வைக்கிறார், நூலில் உள்ளடக்கியுள்ள கருத்துக்களைப் போன்றே அவரது எழுத்தாற்றலையும் நாம் மிக உயர்வாக மதிக்கிறோம்.

இந் நூலில் உள்ளடக்கப்பட்டுள்ளவை வேறு நூல்களில் இருந்து 'பச்சையாக' மேற்கோளாக எடுக்கப்பட்டவையல்ல. நூலாசிரியரே அவ்வாறு சொல்கிறார். "பிள்ளைகளின் பிரச்சினைகளைப் பற்றி மேற்கொண்ட கலந்துரையாடல்கள் - நடத்தைகளை அவதானித்ததன் மூலம் விளங்கிக் கொண்ட விடயங்கள்" ஆகியவையே அவை. அவை தான் இதற்கு அடிப்படையாக அமைகின்றன. அதன் காரணமாக இந்நூல் மேலும் கருத்துச் செறிவுள்ளதாக அமைகின்றது என்பதில் ஏதும் சந்தேகமுண்டோ?

இந்நூல் பிள்ளைகளின் சிறந்த எதிர்காலத்தை எதிர்பார்க்கும் எல்லா பெற்றோர்களினதும் உள்ளங் கவர்ந்த துணையாக அமைய வேண்டும். ஆசிரியர்கள் எல்லோரினதும் புத்தகராக்கைகளையும் இந்நூல் அலங்கரிக்கட்டும். பிள்ளைப் பேற்றைக் கனவு காணும் எல்லா இளைஞர்களுக்கும் சுவையூட்டும் கதையாக அமையட்டும்.

நூலாசிரியை அவர்களே, உங்களது இந்த முயற்சி மனித சமுதாயத்துக்கான சேவையாகவும் தேசியப் பணியாகவும் எம் உள்ளங்களில் நின்று நிலவுகின்றது. மேலும் இது போன்ற நூல்களை ஆக்க உங்களுக்கு ஆர்வம் உண்டாகட்டும்.

ஒப்பம்
பேராசிரியர் நந்ததாஸ கோதாகொட
பீடாதிபதி, வைத்திய பீடம்
கொழும்பு பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றோரின் கவனத்துக்கு

பிள்ளைகளைப் பெற்றால் மட்டும் போதாது, அவர்களைச் சமூகத்தில் நற்பிரஜைகளாக்குவதும் நற்பண்புள்ளவர்களாகத் திகழச் செய்வதும் பெற்றோரின் கடமையாகும். பெற்றோர் எவ்வாறு பிள்ளைகளை வளர்க்க வேண்டும், கற்பிக்க வேண்டும் என்னும் விடயங்கள் பற்றி கலாநிதி, திருமதி. பி. குடலிகம அவர்கள் பன்னிரண்டு அத்தியாயங்களில் மிகவும் விளக்கமாக அறிவுரைகள் வழங்கியுள்ளார்கள்.

இந்நூலாசிரியர் நீண்ட காலமாகக் கல்வியுலகில் சேவையாற்றியுள்ளார். எனவே அவரின் கருத்துரைகள் பெற்றோருக்கு மிகவும் பயனுள்ளதாக அமையும். ஒவ்வொரு பெற்றோரும் பாடசாலை அதிபர்களும் இந்நூலை வாங்கிப் பயனடைய வேண்டுமென்று இங்கு குறிப்பிட விரும்புகின்றேன்.

இந்நூலாசிரியர் ஏற்கனவே இந்நூலை சிங்கள மொழியில் அச்சிட்டு வெளியிட்டுள்ளார். தமது அனுபவங்களை தமிழ் பேசும் பெற்றோர்களும் அறிய வேண்டுமென்ற பெருநோக்கோடு இந்நூலைத் தமிழில் மொழிபெயர்ப்பித்து பிரசுரம் செய்துள்ளார். இவருக்கு தமிழ் பேசும் நல்லுலகம் நன்றி செலுத்தக் கடப்பாடுடையது.

வெ. சபாநாயகம்
பிரதிக் கல்விப் பணிப்பாளர் நாயகம் (தமிழ்)
கல்வி, உயர்கல்வி அமைச்சு.

UNIVERSITY OF PERADENIYA
15-12-1995
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
15-12-1995
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றி

பல ஆண்டுகளாக ஆசிரியர்கள், பெற்றோர்கள், பிள்ளைகள் ஆகியோருடன் பிள்ளைகளின் பிரச்சினைகள் பற்றி மேற்கொண்ட கலந்துரையாடல்கள், பிள்ளைகளின் நடத்தையை அவதானித்ததன் மூலம் பெற்றுக்கொண்ட தகவல்கள் ஒரு தாயாக பெற்ற அனுபவம் ஆகியன இத்தகைய எளிமையான ஒரு நூலை எழுத வேண்டுமென்று என்னைத் தூண்டின.

பிள்ளை வளர்ப்பு பற்றி ஏதேனும் முறையான கல்விபெறாத பெற்றோர்களுக்கு இந்நூல் மூலம் ஓர் ஆலோசனை வழங்கள், வழிகாட்டல், கிடைக்குமென்றிருந்தால் அதுவே எனக்கு திருப்தியைத் தருவதாக அமையும். பிள்ளைகளை மென்மேலும் விளங்கிக் கொள்வதற்கு அவர்களுக்கு எத்தகைய கற்றற் சூழல் ஒன்றை வழங்க வேண்டும். அவர்கள் மீது எமக்குள்ள பொறுப்புகள் யாவை, எத்தகைய எதிர்பார்ப்புக்களை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். பாடசாலையுடன் வைத்திருக்க வேண்டிய தொடர்புகள் எத்தகையவை என்பன போன்ற வினாக்களுக்கு விடைகாண முயற்சிக்கும் பெற்றோர்களுக்கு இந்நூல் மூலம் ஒரு விளக்கத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

இந்நூலைத் தயாரிக்கையில் என்னை ஊக்குவித்த சகலருக்கும், சிறந்த கருத்துக்களை தந்துதவிய சகல ஆசிரியர்களுக்கும் பெற்றோர்களுக்கும் முதலில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். பிள்ளைகளை வளர்ப்பது பற்றிய எனக்கு சிறந்த அனுபவத்தைப் பெற்றுத்தந்த நேரஞ்சனா, வித்யா ஆகிய எனது பிள்ளைகள் இருவருக்கும் எனது அன்பும் ஆதரவும் என்றும் உரித்தாகட்டும். இந்நூலை சமர்ப்பிக்கையில் திருமதி டி.எல். ரூபா அமரசேகர அவர்கள் எனக்கு வழங்கிய ஒத்துழைப்பை பெரிதும் மதிக்கிறேன். தட்டச்சில் பதிப்பித்து உதவிய நந்தினி, சியாமா ஆகிய இருவருக்கும் பதிப்பித்தல் வேலைகளை சிறப்பாகச் செய்துதந்த பசுபிக் அச்சகத்தாருக்கும் இதன் நிர்வாகப் பணிப்பாளர் ஜனாப் T. அப்துல் மஜீத் அவர்களுக்கும் எனது நன்றி உரித்தாகட்டும்.

இந்நூலை சிங்களத்திலிருந்து தமிழில் மொழிபெயர்த்து உதவிய ஜனாப் எம். எம். ராஸிக் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். திருவாளர் டி. ராஜேந்திரன் அவர்கள் இத்தமிழ்மொழி பெயர்ப்பை சரிபார்த்தமைக்கு நன்றிகூற கடமைப்பட்டுள்ளேன்.

கலாநிதி. பி. டு டலிங்கம

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளடக்கம்

		பக்கம்
01.	பிள்ளையை விளங்குதல்	10
02.	பிள்ளையின் வளர்ச்சியும் விருத்தியும்	18
03.	பிள்ளைகளின் தேவைகள்	27
04.	உள உணர்வுகள்	39
05.	சுற்றாடல்	45
06.	பெற்றோர் மனப்பாங்கு	61
07.	குடும்ப பழக்க வழக்கங்களும் சம்பிரதாயங்களும்	72
08.	சவால்கள்	74
09.	பரிசும், தண்டனையும்	77
10.	பிள்ளைகளின் எதிர்காலம்	82
11.	பாடசாலையின் எதிர்பார்ப்புகள்	91
12.	எமது கடமை	97

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையை விளங்குதல்

"என்னுடைய தங்கப் பிள்ளை இங்கே வாருங்கள். தங்கம், முத்து, மாணிக்கம் ஆகிவற்றை விடப் பெற்றோர்களுக்குப் பிள்ளை பெறுமதி வாய்ந்ததாகும்.

செல்வங்களுக்குள் எல்லாம் உன்னதமான செல்வம் எமது பிள்ளைகளாகும். அந்தச் செல்வத்தைப் பாதுகாத்துக் கொள்வது எமது தலையாய கடனாகும். ஏனைய எந்த ஒரு பொருளையும் நாம் இழந்துவிட்டால் அவற்றைப் பெற்றுக் கொள்ள முடியும். ஆனால் ஒரு பிள்ளையை இழந்துவிட்டால் அதனைத் திருப்பிப் பெறமுடியாது.

ஒரு குடும்பத்திலே என்றாலும் பிள்ளைகள் வேறுபட்டவர்களே. கை விரல்கள் ஐந்தும் ஒன்றுக்கொன்று வேறுபட்டிருப்பதைப் போனறே ஒரு குடும்பத்திலுள்ள ஐந்து பிள்ளைகளும் ஒருவருக்கொருவர் வித்தியாசமானவராகவே இருப்பர். ஆகவே பிள்ளைகளைப் பெற்று வளர்க்கின்ற பெற்றோர்களாகிய எமது கையில் பெரும் பொறுப்புண்டு.

பிள்ளை ஒரு சிறிய வளர்ந்தவர் அல்ல என்பதை நாம் விளங்கிக் கொள்ள் வேண்டும். பிள்ளைகளைப் பெற்று வளர்க்கும் போது இந்த விளக்கம் மிக முக்கியமானதாகும். உலகிலுள்ள எல்லாச் சமயங்களும் பிள்ளையை ஓர் உன்னத சிருஷ்டியாக கருதுகின்றன. பிள்ளை பொன், பொருள் ஆகிய எல்லாவற்றையும் விட பெறுமதி வாய்ந்ததென்று கல்வித் தத்துவ ஞானி கொம்னியஸ் கூறியுள்ளார். பிள்ளை வளர்ந்தவரை விட வித்தியாசமானவர் என்றும் பிள்ளையின் சுதந்திரத்தை மதிக்க வேண்டுமென்றும் ரூஸோ குறிப்பிட்டுள்ளர். சோஷலிஸ தத்துவத்தினடிப்படையிலும் பிள்ளைக்கு சமூகத்தில் மிக முக்கியமான இடம் கிடைக்கின்றது. குழந்தைப் பருவத்திலிருந்தே குழந்தைகளை வளர்ப்பது அரசாங்கத்தின் பொறுப்பென்று இந்நாடுகளில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. மேலைத்தேய சனநாயக நாடுகளிலும் சிறுவர் கல்வியும் பிள்ளை வளர்ப்பு பற்றி கூடிய முயற்சி எடுக்கப்படுகின்றது. ஐக்கிய நாடுகள் சபை பிள்ளைகளின் சுகாதாரம், பாதுகாப்பு, கல்வி என்பன பற்றி தொடர்ச்சியாக நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழைத்தேய நாடுகளில் புராதன காலம் தொடக்கம் பிள்ளை மதிக்கப்பட்டு வந்தது. இன்று யப்பான், தாய்லாந்து போன்ற ஆசிய நாடுகளில் பிள்ளைகளுக்கு முக்கிய இடம் அளிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் பிள்ளைகளுக்கு வளர்ந்தோராகும் வரை சுகாதாரம், கல்வி வசதிகள் அளிக்கப்பட்டுள்ளன. பாலர் கல்வி தொடக்கம் பல்கலைக்கழகக் கல்வியின் இறுதிவரை இலவசக் கல்வி வாய்ப்பளிக்கப்பட்டிருப்பது விசேடமானதாகும். பிள்ளையின் இயல்பை விளங்குவது மிக முக்கியமாகும். பிள்ளையின் பெறுமதியை அறிந்த நாம் பிள்ளைகளை விளங்குவது மிக முக்கியமாகும். அன்று பிள்ளைகள் பெற்றோரின் ஆதரவில் மட்டுமே வளர்ந்து வந்தார்கள் எனினும் இன்று அந்நிலை மாற்றமடைந்துள்ளது. இன்று பல்வேறு சமூக சக்திகள் பிள்ளைகளின் பழக்க வழக்கங்கள் மனப்பாங்குகள் நடத்தைப் பாங்கு ஆகிவற்றின் மீது தாக்கத்தை ஏற்படுத்துகின்றதைக் காண்கிறோம். பல்வேறு புத்தங்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள், வானொலி, தொலைக்காட்சி விளம்பரங்கள், அறிவித்தல், தோழமைக் குழுக்கள் என்பன இவர்கள் மீது செல்வாக்குச் செலுத்தும் பிரதான காரணிகளாகும். இந்தப் பிள்ளைகள் பெற்றோர்களிடம் மட்டும் கற்றுக் கொள்வதில்லை. தொலைக்காட்சியைப் பார்ப்பதன் மூலம் அவர்கள் கற்றுக்கொள்பவை ஏராளமாகும். மிகச் சிறந்த பெற்றோரின் பிள்ளைகள் கொலைகாரர்களாக ஆகிய சந்தர்ப்பங்களும் உள.

"எனது மகன் ஒரு திருடனாவான் என நான் நினைக்கவில்லை" மகனை திருடுவதற்குத் தூண்டியிருப்பது ஒரு நண்பனாகும் என்று கூறுவதைக் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆகவே பெற்றோர்கள் எதிர்பார்க்காத வகையிலான ஒரு சக்தி பிள்ளையின் மீது தாக்கத்தை ஏற்படுத்துவது தென்படுகின்றது. ஆகவே பிள்ளைகளை வளர்க்கும் போது பெற்றோர்கள் முன்னை விட விழிப்புள்ளவர்களாக இருக்க வேண்டியது காலத்தின் தேவையாகும்.

சிறு விதை பெருமரமாகும் என்று சிறுவர்களுக்கு கற்றுக் கொடுக்கிறோம். சிறு விதை முளைக்க வேண்டுமென்றால் உரிய காலத்தில் நீர், உரம் ஆகியன இடவேண்டும். சிறு முளை பெறு மரமாவதற்கு களைகளை அகற்றிச் சுற்றாடலை மிகச் சிறந்ததாக அமைக்க வேண்டும். கடுமையான காற்று விலங்குகள் ஆகியவற்றிலிருந்து முளையைப் பாதுகாக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளை வளர்க்கும் பெற்றோர்கள் பிள்ளைகள் நன்றாக விளங்கிப் பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்ற வேண்டும். பிள்ளையை பெற்றெடுத்த தினத்திலிருந்தே தாயைப் போன்றே தந்தையும் பிள்ளையின் ஆரோக்கியம், போசாக்கு என்பன பற்றி கவனம் செலுத்த வேண்டும். பிள்ளைகிடைக்கப் பெற முன்னரும், கிடைத்த பின்னரும் தாயின் உள ஆரோக்கியத்தை கவனிப்பது மிக முக்கியமாகும். குடும்பப் பிரச்சினை, பொருளாதாரப் பிரச்சினை, தொழிற் பிரத்தினை அல்லது சில சந்தர்ப்பங்களில் அயலவர்களுடனான பிரச்சினை காரணமாக உள ஆரோக்கியம் பாதிக்கப்படுதல் ஒரு தாய்க்கு எந்த வகையிலும் பொருத்தமானதல்ல. பிள்ளை பிறந்ததிலிருந்தே பிள்ளையின் நோயற்ற வளர்ச்சிக்குத் தேவையான குழலை ஆக்கிக் கொள்ள வேண்டும். பயம், விரக்தி ஆகிய நிலைமைகளிலிருந்து தாயமார்களைப்பாது காத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பது முக்கியமானதாகும்.

ஒரு குழந்தையை ஈன்றெடுத்ததன் பின்னர் தந்தை தாயின் மீது முன்னரை விடக்கூடிய அன்பும் ஆதரவும் கவனமும் செலுத்துவது அவசியமாகும். வீட்டு வேலைகளில் தந்தை தாய்க்கு உதவி புரிகின்ற சந்தர்ப்பங்களுண்டு. அப்போது தாய்க்குத் தன் கடமைகள் இலகுவாகத் தோன்றும். வீட்டு வேளைகளை ஒத்துழைப்புடன் செய்யும் போது களைப்பு ஏற்படமாட்டாது. தாயைச் சந்தோசமாக வைத்துக் கொள்வது தந்தையின் கடமையாகும். தாய்க்கு பயிற்சி, மகிழ்ச்சி, ஓய்வு என்பன அவசியமாகும். இவற்றையறிந்த தந்தையர் தம் நிகழ்ச்சித் திட்டங்களை இதற்கேற்ப மாற்றிக் கொள்வர்.

புராதன காலத்தில் குழந்தையொன்றை பிரசவித்த காலம் தொடக்கம் தாயின் பழக்க வழக்கங்களைப் பற்றி விசேட கவனம் செலுத்தப்பட்டது. உணவு உட்கொள்ளல், குழித்தல், உடைகள், உறக்கம், பயணங்கள் முதலிய எல்லா நடவடிக்கைகள் மீதும் புராதன மக்கள் சில பழக்க வழக்கங்களையும் தடைகளையும் விதித்திருந்தார்கள். தற்கால சமுதாயத்தில் பொருளாதாரத் தேவை காரணமாக ஒரு குழந்தையைப் பெறப்போகும் தாய் அவற்றை எல்லாம் பின்பற்றுவது கஷ்டமாகும். எனினும் போஷணை, சுகாதாரப் பாதுகாப்பு தொடர்பாக தாய் சேம நல அபிவிருத்தி என்பன மத்திய நிலையங்கள் மூலம் நடத்தப்படுகின்றன. பல்வேறு சிகிச்சை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையங்களுக்குச் செல்வதற்காக தாய்மாருக்குச் சந்தர்ப்பமளிகக்ப் பட்டுள்ளது. குழந்தைப் பேற்றுக்கு முன்னர் போசனை மீது கவனம் செலுத்தப்படுகின்றது. குழந்தையை ஈன்றதன் பின்னரும் போசனை, உட்கொள்ளும் உணவு என்பவற்றைப்போலவே சுகநலத்துடன் குழந்தையை வளர்ப்பதும் மிக முக்கியமானதாகும்.

கர்ப்பிணியாயிருக்கும் போதே சுகாதார ஊழியர்களிடம் ஆலோசனை பெறுதல் இன்றியமையாததாகும். குழந்தையொன்று கிடைத்த பின்னர் ஆண், பெண் பேதம் காட்டாது எல்லாப் பிள்ளைகள் மீதும் சமமாக கவனம் செலுத்துவதற்கு தாய்மார் பழக வேண்டும். குழந்தையொன்று பிறக்க முன்னரே பெற்றோர் சுற்றத்தவர் நண்பர்கள் ஆகியோர் பெரும்பாலும் ஒரு ஆண்மகவை எதிர்பார்க்கின்றனர். இம் மனப்பாங்கு குழந்தையின் தாயிடத்தில் பெரும்பாலும் சூழல் மூலம் ஏற்படுத்தப்படுகின்றது. ஒரு மகனை எதிர் பார்த்த சில தந்தையர் ஒரு மகள் கிடைத்துவிட்டால் அந்தக் குழந்தைக்கும் தாய்க்கும் வேறுபாடு காண்பிக்கின்ற சந்தர்ப்பங்களும் உண்டு தாய்க்கு மட்டுமல்ல குழந்தை சொந்தமானது. ஆண் பெண் பேதங்களேதுமின்றி இவ்வுலகில் பிறந்த தமது குழந்தையை அன்போடு ஆதரித்துப் பேணி வளர்த்தல் தாய் தந்தையர் இருவரினதும் கடமையாகும்.

பெண் குழந்தையை விட ஆண் குழந்தைக்கு முக்கியத்துவம் வழங்கச் சில தாய்மார் பழகியிருக்கிறார்கள். ஆண், பெண் என்ற பேதங்களின்றி சமமாக அன்பும் ஆதரவும் வழங்குவது அவர்களது உள ஆரோக்கியம் வளர்வதற்கு உதவியாக அமையும்.

பிள்ளைகளின் விருத்தி பற்றி பெற்றோர்கள் விளங்கியிருப்பது எதிர்காலச் சந்தயினரைப் பொறுத்தவரை மிக முக்கியமானதாகும். பிறந்தவுடன் பிள்ளை அழும். பிறந்த சில மணித்தியாலங்களில் தாயின் பாலை அருந்தும்; நித்திரையில் சிரிக்கும்; பிறந்த ஒரு மாதமளவில் குரலைக் கேட்டும்; சிரிப்பைப் பார்த்தும் எதிர் விளைவைக் காட்டும்; பிறந்த இரண்டு மூன்று வாரங்களில் தாயை அறிந்து கொள்ளும்; சத்தத்தைக் கேட்டதும் திடுக்கிடும். நான்கு மாதங்களில் விருந்தினறுக்கு மத்தியில் உறவினர்களை அறியும்; மிகக் கெதியில் குடும்பத்தினறையும் சகோதர சகோதரிகளையும் அறிந்து கொள்ளும்; அறிமுகமில்லாதவர்களைக் கண்டதும் அழும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழகியவர்களுடன் செல்லமாகக் கொஞ்சுவதுடன் பழக்கமில்லாதவர்களைக் கண்டவுடன் ஒளித்துக்கொள்ளும்; ஒரு வருடத்தை எட்டும் போது புதியவர்களைக் கண்டவுடன் ஏற்படும் பயம் நீங்கிப் போகும் இது படிப்படியாக வீட்டுச் சூழலினால் நடைபெறும். புதியவர்களுக்குப் பிள்ளைகளைக் காட்டுதல், சிரிக்கத் தூண்டுதல், பேசவும், உணவூட்டவும் இடமளித்தல் மூலம் பிள்ளைகளிடம் காணப்படும் ஒதுங்கி வாழும் தன்மை இல்லாமற் போகும். அத்துடன் வயது முதிர்ச்சி ஏற்படும் போதே பேசும் ஆற்றலும் விருத்தியடையும்.

இலங்கையில் பெரும்பாலான பெற்றோர்கள் தம் பிள்ளைகளுக்கு தாய் மொழிச் சொற்களுடன் ஆங்கிலச் சொற்களையும் கற்றுக் கொடுக்கிறார்கள். வலிந்து சொற்களைக் கற்பித்தல் பிள்ளைகளை களைப்படையச் செய்யும், பின்னர் முதிர்ச்சிக்கு ஏற்ப பிள்ளைக்கு சொற்களை கிரகித்துக் கொள்ளும் திறனும் வளரும். இது தொடர்பாக உளவியலாளர்கள் வெளியிட்டுள்ள கருத்துக்கள் முக்கியத்துவம் மிக்கதாகும். நடக்கும் திறனும் பிள்ளை வளர்ச்சியின் ஒரு கட்டத்திலேயே ஏற்படுகின்றது. சிலர் இக்கட்டத்துக்கு முன்னறே நடக்கப் பழகுவர். பிறந்து ஒரு வருட வயதையடையும் போது செயற்கை கருவிகளின் உதவியுடன் நடக்கப் பழக்க முயற்சிக்கும் தாய்மாறும் உளர். உள் உருப்புக்களின் மாற்றத்தின் காரணமாக முதிர்ச்சி எனப்படும் வளர்ச்சி ஏற்படுகின்றது. பிறப்பு வயதுக்கு ஏற்ப முதிர்ச்சியும் வளர்ச்சியும் வேறுபடும். இது ஒரளவுக்கு போசணையிலும் சுகாதாரத்திலும் தங்கியிருந்த போதிலும் பிரதானமாக பரம்பரைக் காரணிகளினதும் இது தங்கியிருக்கின்றதென்பது புலனாகின்றது. ஒத்த இரட்டையர்களுக்கிடையில்கூட வேறுபாடுகளுண்டு. பிள்ளைகளின் செயற்பாடுகளும் ஒவ்வொருவரினது உடல், உள் வேறுபாடுகளுக்கு ஏற்ப நிகழும்.

எனது பிள்ளை இன்னும் பேசுவதில்லை. நான் சாதகம் பார்த்தேன் அதன்படி ஒரு தோசமும் இல்லை என்று சிலர் கூறுவதுண்டு. ஒரு வருடம் முடியும் வரை தனது பிள்ளை ஒரு சொல் பேசாதிருந்தமைக்கு சூழலிலிருந்து அப்பிள்ளைக்குத் தேவையான பழகும் அனுபவம் கிடைக்காமையே காரணம் என்பதைத் தாயார் அறியவில்லை. அதிகாலை நான்கு மணிக்கு தொழிலுக்காக வீட்டைவிட்டு வெளியேறும் தந்தை இரவு பத்து மணியளவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டுக்கு வரும்போது பிள்ளை நித்திரையிலிருக்கும். பிள்ளையுடன் கதைக்கவோ சிரிக்கவோ தந்தைக்குச் சந்தர்ப்பம் இல்லை. தாய் பிள்ளைக்கு உணவூட்டுவதைத் தவிர பிள்ளையுடன் விளையாட, கதைக்க நேரமில்லை. பிள்ளை ஒரு நாளில் பெருமளவு நேரத்தை தனிமையில் கழிக்கிறது. பிள்ளை பேச தாமதமாவதற்கு யார் காரணம்.

பிள்ளையின் காதில் கேட்கும் ஒலி கூட்டம், சொற்கள் பிள்ளைகளுடன் வளர்ந்தோர் செய்யும் கொடுக்கல் வாங்கல்கள் ஆகிய அனைத்தும் பிள்ளையின் மொழியை வளப்படுத்தும். எப்படியாயினும் பேசத்தொடங்குவதற்கு ஒரு காலமுண்டு. எவ்வளவு முயற்சி செய்த போதிலும் இரு மாதக் குழந்தையைப் பேசச் செய்ய முடியாது. பெற்றோர்கள் பொறுமையுடனும் பிள்ளையை வளர்த்தால் உரிய வயதில் பிள்ளை பேசும்படியாக மொழியை விருத்தி செய்து கொள்ளும்.

"எனக்கு தொழிலுக்குச் செல்ல வழியில்லை அதனால் இவரைக் கெதியில் முன் பாடசாலையில் சேர்க்க வேண்டும்."

"இவனுடைய கரைச்சலால் முடியாது எனக்கொரு வேலையைச் செய்ய விடுவதில்லை. இவனைப் பாடசாலையில் சேர்க்க வேண்டும்."

முன் பாடசாலையில் பிள்ளையைச் சேர்க்க வேண்டிய வயதைப்பற்றி பெற்றோர்கள் தெளிவின்றிக் கருமமாற்றுகிறார்கள். பெற்றோர்கள் தொழிலுக்குச் செல்வதால் பிள்ளைகளைப் பாதுகாப்பது இன்று ஒறு பிரச்சினையாகும். கிராமபுறங்களில் ஆயின் பக்கத்து வீட்டிலுள்ளோர் பெரும் பாலும் உறவினர்களாக இருப்பதால் முன் பாடசாலையில் அல்லது பிள்ளை பார்க்குமிடமொன்றில் பிள்ளையை சேர்க்க வேண்டியுள்ளது. வேலையாட்களைத் தேடிக் கொள்ளல், சம்பளம் கொடுத்தல், பராமரித்தல் பொறுப்பு வாய்ந்த நேர்மையானவர்களைத் தேடிக் கொள்வதிலுள்ள சிரமம் என்பன பெரும் பிரச்சினையாகும். அதனால் பெரும்பாலான பெற்றோர்கள் பிள்ளைகளை முன் பாடசாலைக்கு அனுப்புகிறார்கள். இரண்டரை அல்லது மூன்று வயதுடைய பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புவது நல்லது. எனினும் சில தாய்மார் சிறிது மொழியைப் புரியும் வயதில் பிள்ளைகளை முன் பாடசாலைக்கு அனுப்புவர். அத்தகைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகள் முன் பாடசாலைச் சூழலுக்குப் பொருத்தமானவர்களா என்பதைப் பார்க்க வேம்டும். அவ்வயது மட்டத்தில் பிள்ளைகளுக்கு நித்திரை அவசியமாகும். உண்ணல் குளித்தல் போலவே உறங்குவதும் அவர்களது வளர்ச்சிக்கு அவசியமானதாகும். ஆகவே முன் பாடசாலைக்கு அனுப்பும் வயது குறித்து பெற்றோர் நல்ல விளக்கம் பெற்றிருக்க வேண்டும்.

"அம்மா நான் அடுத்த வீட்டுக்குப் போகவா? சியாமாவுடன் விளையாடுவதற்கு"

"இல்லை ஒரு பக்கமும் போவதில்லை. ஏன் வீட்டில் இருக்க முடியாது."

இரண்டரை வயது வரை பிள்ளைகள் தனித்தனியாக விளையாடுவர் சுமார் மூன்று வயதையடைந்தவர்கள் நண்பர் ஒருவர் அல்லது இருவருடன் சேர்ந்து விளையாடுவர். பக்கத்திலுள்ள பிள்ளைகளுடன் சேர்ந்து விளையாட்டுக்காக பொய்ச் சோறு சமைப்பர். பொய் வீடு கட்டுவர். பிள்ளை தாயாராக இல்லாதபோது வலோற்காரமாக முன் பாடசாலைக்கு அனுப்புவது நியாயமானதாவென்று நாம் பெற்றோர்கள் என்ற ரீதியில் சிந்திக்க வேம்டும். பிள்ளைகள் சுதந்திரமாக வீட்டிலிருக்க வேண்டிய காலத்தில் அதிருப்தியுடன் பஸ், புகையிரதம் அல்லது காரியாலங்களில் கட்டுப்பட்டு இருப்பது அவர்களது உடல், உள வளர்ச்சிக்கு எவ்விதத்திலும் பொருத்தமான தல்ல.

பிள்ளை பகற்பொழுதில் முன் பாடசாலையிலிருந்தாலும் சரி வீட்டில் வளர்ந்தோரிடம் இருந்தாலும் சரி மாலையில் வீட்டுக்கு வந்ததும் பிள்ளையின் கதைக்களுக்கு செவிமடுங்கள் அவற்றை மதியுங்கள் வெற்றியை பாராட்டுங்கள். அவரது தோல்விகளைப் பற்றிக் கூறும்போது அவரை தைரியப்படுத்துங்கள், உங்கள் அன்பும் ஆதரவும் பிள்ளைக்கு அவசியமாகும்.

"எனக்கு சரியான களைப்பு போங்க போங்க அம்மாகிட்ட" தந்தைக்கு எவ்வளவு களைப்பாயிருந்த போதிலும் தந்தையின் ஆதரவைப் பெற்றுக் கொள்வதற்கு பிள்ளைக்கு உரிமையுண்டு. தாயைப்போலவே தந்தையும் பிள்ளைக்கு அன்பையும் ஆதரவையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்க வேண்டும். பிள்ளையுடன் ஓய்வு நேரத்தைக் கழிக்க வேண்டும். பிள்ளையின் இயல்பான ஆற்றல்களை விருத்தி செய்து கொள்வதற்கு, உள ஆரோக்கியத்தை பாதுகாத்துக் கொள்வதற்கு தாயும் தந்தையும் இருவரும் ஒருவர் போல் ஒத்துழைத்துக் கருமமாற்றுவது இன்றியமையாததாகும்.

எல்லாச் சமயங்களும் குழந்தையை ஓர் உன்னத படைப்பாக கருதுகின்றன. இந்து, இஸ்லாமிய, கிறித்துவ, பௌத்த சமயங்கள் யாவும் குழந்தையை புனிதமாகக் கருதிகின்றன. பெற்றோர்களாகிய நாம் பிள்ளைகள் பொன், வெள்ளி, முத்து, மாணிக்கம் ஆகியவற்றை விடப் பெறுமதி வாய்ந்ததால் அவர்களைப் பாதுகாக்க வேண்டும் இதன் பொருட்டு எங்களுக்கு நல்ல விளக்கம் இருக்க வேண்டும்.

பெற்றோர்கள் எதிர்நோக்குகின்ற பல்வேறு பிரச்சினைகள் உண்டு. எனினும் அந்தப் பிரச்சினைகள் காரணமாக பிள்ளைகளின் வாழ்க்கையின் பெறுமதியை குறைத்து மதிப்பிட வேண்டாம்.

ஒரு பிள்ளையைப் பெற்றெடுப்பதை விட சரியான வழியில் வழிநடத்துவது கஷ்டமான காரியமாகும். எனினும் பெற்றோர்கள் என்ற வகையில் நாம் அதனைச் செய்தேயாக வேண்டும்.

UNIVERSITY OF PERADENIYA LIBRARY 15-12-1995

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையின் வளர்ச்சியும் விருத்தியும்

பிள்ளையின் வளர்ச்சி பற்றிய கதை மிகச் சுவையான தொன்றாகும். அது ஒரு மனிதனை உறுவாக்கும் கதையாகும்.

பிறப்பின் போது மனிதக் குழந்தையைப் போன்று அப்பாவியான (பலவீனமான) வேறொன்றும் இல்லை. எந்தளவுக்கு அப்பாவியானதென்று கூறுவதாயிந் குழந்தை தாய்ப்பாலைக் குடிப்பதற்கு முலைக்காம்பியானதென்று கூறுவதாயின் குழந்தை தாய்ப்பாலைக் குடிப்பதற்கு முலைக்காம்பினைக்கூட கண்டு பிடித்துக் கொள்ள முடியாத நிலையிலுள்ளது. அதன் வாயை தாயின் முலைக்காம்பின் அருகே மற்றொருவர் கொண்டு செல்ல வேண்டும்.

மனிதக் குழந்தையின் குழந்தைப்பருவமே நீண்டதாகும். ஏனைய உயிரினங்களின் முதிர்ச்சி மிக விரைவாக நிகழ்கின்றது. ஆனால் மனித குழந்தையே கற்பதற்குக் கூடிய திறமையைக் காட்டுகின்றது. பரம்பரையிலிருந்து பெற்றுக் கொள்ளும் திறமை காரணமாக கற்றல் வேகம் அதிகமாகிறது. கற்பதற்கான ஆசையும் கூடுதலாக மனிதக் குழந்தைக்கே உண்டு.

வயது மட்டத்துக்கு ஏற்ப குழந்தைகளுக்கிடையில் சில பொது இயல்புகள் காணப்பட்டாலும் ஒவ்வொரு குழந்தையும் மற்றக் குழந்தையிலிருந்து வேறுபட்டதாகும்.

"பாருங்களேன் இந்தப் பிள்ளைக்கு எதைச் சாப்பிடக் கொடுத்தாலும் வளருவதில்லை."

"அந்த அடுத்த வீட்டு சந்திரன் இவனைவிட வயதிற் குறைந்த வன் இருந்தாலும் அவனது உயரமும் பெருப்பமும்"

இந்த வித்தியாசம் ஏற்படுவதற்கு பிள்ளையின் பரம்பரையும் சூழலும் காரணமாகும். ஒரு தாவரம் நன்றாக வளருவதற்கு அதன் விதை நல்லதாக இருக்க வேண்டியதைப் போலவே அதனை நாட்டும் மண்ணும், அதற்கிடும் நீரும் உரமும் முக்கியமானவையாகும். குழந்தையின் வளர்ச்சிக்கு மரபும் சூழலும் ஆகிய இரண்டும் முக்கியமானதாகும். நல்லதொரு பிள்ளை உருவாதற்கு நல்ல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரம்பரையாயிருக்க வேண்டும். புராதன சமூகத்தில் குறிக்கப்படுகின்ற பொருத்தம் பார்த்தல் என்பது ஒருவருக்கு விவாகத்துக்கும் பொருத்தமான மற்றொருவரைத் தெரிவு செய்து கொடுத்தல் என்பதையே குறிக்கின்றது. நவீன விஞ்ஞான முன்னேற்றம் காரணமாக இரத்தத்தின் தன்மையை ஒப்பிட்டுப் பார்ப்பதன் மூலம் விவாகத்துக்குப் பொருத்தமானவர் தெரிவு செய்யப்படுகிறார். பிறப்பு சிறந்ததாக இருப்பதற்கு இது முக்கியமானதாகும். குழந்தை வளர்ப்புப் பற்றி சமயங்களும் போதித்துள்ளன.

குழந்தைப் பேற்றுக் காலத்தாயின் பழக்க வழக்கங்கள் நடந்து கொள்ள வேண்டிய முறைகள் என்பன புராதன சமூகங்களில் கூட முறையாகப் பேணப்பட்டன.

நவீன சமூகத்தின் சிறு குடும்பம் எனும் எண்ணக்குருவுக்கேற்ப குடும்பக்கட்டுப்பாடு நடைபெறுகிறது. சிலர் குடும்பக் கட்டுப்பாட்டுக்குச் சில பிழையான வழிகளையும் கையாள்கின்றனர். உதாரணமாகக் கூறுவதாயின் மலேரியாத் தடுப்பு வில்லைகளைச் சில தாய்மார் குடும்பக் கட்டுப்பாட்டுக்கும் பயன்படுத்துகின்றனர். குடும்பக் கட்டுப்பாட்டு நிலையத்தினால் வழங்கப்படும் அறிவுறுத்தல்களைப் பின்பற்றுவதைத் தவிர தீங்கு விளைக்கக் கூடிய மருந்துகளைப் பயன்படுத்தக் கூடாது. இதன் காரணமாக வலது குறைந்த பிள்ளைகள், வளர்ச்சி குன்றிய அல்லது குறைபாடுடைய பிள்ளைகள் பிறக்க இடமுண்டு.

குழந்தையைப் பெற்றெடுத்த நேரத்திலிருந்தே ஒரு தாய் கடைப்பிடிக்க வேண்டிய சில விடயங்களுண்டு. அவற்றுள் முக்கியமானதொன்றுதான் உணவின் போசாக்குத் தன்மை பற்றிக் கவனம் செலுத்துவதாகும்.

குழந்தை பிறந்த பின் அதற்குத் தாய்ப்பாலூட்ட வேண்டும். முதல் ஏழு மாத காலத்தில் தாய்ப்பாலைப் போன்று போசாக்குள்ள வேறு ஆகாரம் குழந்தைக்கு இல்லை. சில நாடுகளில் வேலை செய்யும் பெண்களுக்கு ஆறு மாதங்களுக்குத் தொடர்ச்சியாக லீவு வழங்குவது தாய்ப்பாலூட்டுவதற்காகவாகும். தாய்ப்பாலூட்டல் பிள்ளையின் புத்தி வளர்ச்சிக்கும், உடல் வளர்ச்சிக்கும், நோய் தோற்றாதிருப்பதற்கும் காரணமாக அமைகிறது. தாய்ப்பால் குடிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைக்கு நோயைத் தாங்கிப் பிடிக்கும் சக்தி அதிகமானதாகும். தாய்ப்பாலின் முக்கியத்துவத்தை எல்லா வைத்தியர்களும் ஏற்பர். எனினும் சில தாய்மார் தேவைக்கு அதிகமான காலம் அன்பின் காரணணாக தமது பிள்ளைகளுக்குப் பாலூட்டுவர். ஒன்றரை வருடம் ஆன பின்பும் ருழந்தைக்குத் தாய்ப்பாலூட்டும் தாய்மாரும் உளர். ஏழு மாதங்களின் பின் படிப்படியாக தாய்ப்பாலூட்டலை நிறுத்த முடியும். அதற்குப் பதில் வேறு உணவுகளை பிள்ளைக்கு படிப்படியாக அறிமுகப்படுத்த வேண்டும்.

மூன்று மாதங்கள் ஆகின்ற போது தாய்ப்பாலுக்கு மேலதிகமாக வேறு உணவுகளையும் கொடுத்தல் முக்கியமாகும். இலகுவில் சீரணிக்கக்கூடிய பழவகைகள், பப்பாசி போன்ற பழவர்க்கங்களை நன்றாகப் பிசைந்து ஊட்டலாம். தடிமன் இல்லையாயின் செவ்விள நீரையும் கொடுக்கலாம். உரிய வயதிற்குரிய உணவை கொடுக்காத போது போசாக்கின்மை ஒரு பிள்ளையின் வளர்ச்சியில் பாதிப்பை ஏற்படுத்தும். ஆசியாவிலுள்ள குழந்தைகளில் 35% ஆனோர் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளதாக தகவல் வந்துள்ளது..

குழந்தைகளுக்கு உணவூட்டுவதில் ஒரு ஒழுங்கு முறை இருக்க வேண்டும். பழங்கள் போன்றவற்றை நன்றாக கழுவி தோல் நீக்கி பிசைந்து சாறு கொடுத்தலும், இலகுவிற் சீரணிக்கும் உணவு வகைகளைக் கொடுத்தலும் மிக நன்று.

குழந்தைப் பருவத்தில் வளர்ச்சியும் விருத்தியும் ஒன்றாக நிகழ்கின்றன. உயரமும் நிறையும் வளர்வதிலிருந்து அது நடக்கும் விதத்தை விளங்கிக் கொள்ளலாம். பிறப்பின் போது ஒரு பிள்ளை சாதாரணமாக இரண்டு கிலோவுக்கும் நான்கு கிலோவுக்கும் இடைப்பட்டதாகும். ஐந்து வயதில் இந்த நிறை சாதாரண குழந்தையின் இரட்டிப்பாகும் வருட இறுதியில் மும்மடங்காகும். அதிலிருந்து ஒரு வருடத்துக்கு சராசரியாக இரு கிலோகிராம் வீதம் அதிகரிக்கின்றது. முதலாவதாண்டில் தேவையான உணவு முதலியன கிடைக்காவிட்டால் போசாக்கின்மை (மந்த போசனம்) உண்டாகும். அது வளர்ந்த பின் பாதிப்பை ஏற்படுத்தும்.

ஒரு குழந்தையின் விருத்தியைப் பற்றிக் கவனிக்கையில் உடல், இயக்க, புலன்கள் சார்ந்த, சிந்தனை, சமூக, தனியாள் ஆகியவற்றுக்குரிய துறைகளில் விருத்தி ஏற்படுகின்றது. இவையனைத்தும் ஒன்றுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்று தொடர்புற்றதாகும் ஓர் அம்சத்தின் வளர்ச்சியில் ஏற்படும் குறைபாடு மற்ற அம்சத்தை பாதிக்கும். சுக நலமுடைய குழந்தை நன்றாக உணவுண்பது மட்டுமன்றி ஊக்கத்துடன் தன் சுற்றாடலையும் அவதானிக்கும். பொருத்தமான சமூகத்தொடர்பினை ஏற்படுத்திக் கொள்ளும்.

குழந்தையின் உடல் வளர்ச்சிக்கென குறிப்பிட்டதொரு காலம் உண்டு. தலையை நேராக வைத்துக் கொள்ளல், சிரித்தல், பல் முளைத்தல், தவழ்தல், நடத்தல், ஓரிரு தொற்களைக் கதைத்தல், ஆகிய ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு பருவம் உண்டு. எனினும் இவை ஒவ்வொன்றும் குழந்தைக்கு குழந்தை வேறுபடும்.

ஒரு குறிப்பிட்ட குழந்தை இரண்டு மாதத்தில் கருத்தோடு சிரிக்க ஆரம்பிக்கும். மற்றொரு குழந்தை மூன்று மாதத்தில் சிரிக்கும். சில பிள்ளைகள் சில படிமுறைகளைப் பின்பற்றுவதில்லை. தவழாது முழுங்காலில் நிற்கும் குழந்தைகள் ஏராளமுண்டு. முழங்காலில் நிற்காது பிடித்துக் கொண்டு எழுந்திருக்கும் பிள்ளைகளுண்டு. இவ்வேறுபாடுகளுக்குப் பல காரணங்களுண்டு. ஆகவே தாய்மார்கள் என்ற வகையில் நாம் பிள்ளைகளின் நடவடிக்கைகளை ஒப்பிட்டுப்பார்க்காதிருத்தல் நன்று. பிள்ளை உச்சளவுக்கு விருத்தியடைவதற்கு பொருத்தமான சூழலை உருவாக்கிக் கொடுத்தல் எமது கடனாகும்.

குழந்தைப் பருவத்திலிருந்தே குழந்தைக்குப் பாதுகாப்பு வேண்டும். பிறந்த நாளிலிருந்தே இது தேவை. பிறந்த நாளிலிருந்தே தாயிடமிருந்து பாதுகப்பு கிடைக்கிறது. தாய், தந்தை மற்றும் குடும்பத்திலுள்ளவர்கள், மற்றும் வீட்டோடு பழகுவோர் ஆகியோரிடமிருந்து குழந்தைக்குத் தேவையான பாதுகாப்புக் கிடைக்கிறது. பிள்ளை பிறந்த நாளிலிருந்து செயற்படுகிறது. பிள்ளையின் இச் செயற்பாட்டுக்கு உதவுவது அவசியமாகும். அதன் மூலம் குழந்தையின் இயல்பான திறன்கள் வளர்கின்றன. அன்பும் ஆதரவும் குழந்தையின் வளர்ச்சிக்கு இன்றியமையாதனவாகும்.

பிள்ளை மற்றவர்களுடன் இடைத்தொடர்பு கொள்ளும் ஆற்றலை பிறப்பிலேயே பெறுகின்றது. ஆறாம் வாரமளவில் தனது தாயை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றாக விளங்கிக் கொள்கின்றது. தாய் தன்னிடம் வரும்போது மகிழ்ச்சியால் துள்ளும். சுமார் ஆறாம் மாதத்திலிருந்து தாய் மீது விசேட ஆதரவைக் காட்டும். இக் காலத்தில் குழந்தை தாயிடமிருந்து பிரித்தால் குழந்தை கவலையடையும். எட்டாம் மாதமளவில் விரும்பாதவர்களை ஒதுக்கிவிடும்.

முதலாம் வருடத்தில் தனக்குக் கிடைத்த அன்பையும் ஆதரவையும் அடிப்படையாகக் கொண்டு பிற்காலத்தில் மற்றவர்களுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளும். பதினெட்டாம் மாதம் வரை வளர்ந்தோரிடம் மட்டும் தொடர்பு கொள்ள விருப்பம் காட்டும். பின்னர் ஏனைய பிள்ளைகளுடனும் அயலவர்களுடனும் நட்புக் கொள்ளும்.

இரண்டு வயதாகும் போது சுயாதீனமான ஒருவராக வர முயலும். தனது கருத்தை வெளிப்படுத்தவும், தனது உடலைக் கட்டுப்படுத்தவும் தொடங்கும். மூன்றாம் வருடத்திலிருந்து ஆறு வயதாகும் வரை உலகத்தைப் பற்றிக் கற்றுக் கொள்ளும். தனது குழுவில் தான் ஏற்கப்படுவதை விரும்பும். பங்கிட்டுக் கொள்ளல், ஒற்றுமை, உதவி ஒத்தாசை புரிதல், பின்பற்றுதல் தலைமைத்துவத்தை ஏற்றுக் கொள்ளல் ஆகிய அனுபவங்களைப் பெறும். நல்லொழுக்கம், விழுமியங்கள் முதலியன பற்றிய பின்னணியை இரண்டாம் மூன்றாம் வருடங்களுக்கு இடைப்பட்ட காலத்தில் ஏற்படுத்த வேண்டும். நல்ல பழக்கங்களை இவ்வயதிலேயே பழகிக் கொள்ளும். இக்காலத்தில் ஏற்படுத்திக் கொள்ளும் பழக்கங்கள் வளர்ந்தோரான பின்னரும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

குழந்தையின் உடல் வளர்ச்சியைப் போன்றே உள வளர்ச்சியும் மிக முக்கியமாகும். பதினெட்டாம் மாதமளவில் பிள்ளைகள் கற்பனையில் தோன்றியவற்றுக்கு ஏற்றவாறு விளையாடும். உயிரில்லாதவற்றுடன் உயிருள்ளவையென்று நினைத்துக் கதைக்கும், விளையாடும், உதாரணமாக பாவைக்குச் சுகவீனமுற்றிருப்பதாக நினைத்து வைத்தியரிடம் கொண்டு செல்லல், பாவையைக் குளிப்பாட்டுதல், பாலூட்டல், பயணம் கொண்டு செல்லல்.

இப்பருவத்தில் கற்பனையில் உருவகித்து விளையாடுவது ஒரு சாதாரண செயலாகும். உறவினர் ஊருக்குச் செல்லல், கடைபோடுதல், வீடு கட்டுதல், பாடசாலை வகுப்பமைத்து கற்பித்தல்., உணவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமைத்தல், என்பன பிள்ளைகளின் விளையாட்டுக்களில் கூடுதலாகக் காணப்படுகின்றன. மூன்றாம் வயதளவில் கிடைக்கும் அனுபவத்துக்கு ஏற்ப சில நிகழ்வுகள் நடைபெறுவதில்லை என்பதை விளங்குவர்.

சுய விருத்தியை ஏற்படுத்தும் காரணி குழந்தையே என இன்று விஞ்ஞானிகள் நம்புகிறார்கள். குழந்தை பிறந்ததிலிருந்து செயற்பாடுகிறது. ஆராய்கிறது, கற்கிறது, குழந்தையின் செயற்பாடுகளுக்கு சூழல் துலங்கலைக் காட்டுமாயின் குழந்தை சூழலிலிருந்து கூடிய பயனைப் பெற்றுக் கொள்ளும். போசாக்கின்மையால் கஷ்டப்படுகின்ற குழந்தையை விட சுக நலமுடைய பிள்ளை தன் தாயுடன் சிரிக்கும். பேசும், விளையாடும், சமூகத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளும்.

குழந்தையின் விருத்தியில் பின்னூட்டலும் உதவுகின்றது. பிள்ளையின் எல்லாச் செயல்களும் அவதானிக்கப்பட்டு, சரியான செயற்பாடுகள் மதிக்கப்படுமாயின் விருத்தி வேகமடையும். பிள்ளை செய்யும் வேலை மதிக்கப்படுமாயின் அவரது முயற்சி மென்மேலும் அதிகரிக்கும். அவ்வாறு மதிக்கப்படாவிட்டால் உற்சாகம் குன்றும். மொழிவிருத்தயின் போது குழந்தை பல்வேறு (ஒலி) ஓசைகளுடன் பல்வேறு அனுபவங்களை பிரயோகித்துப் பார்க்கின்றது. ஒலி மூலம் பல்வேறு கருத்துக்களை வெளியிடுவதற்கு முயற்சிக்கின்றது. அனுபவத்துக்குச் சந்தர்ப்பம் கிட்டிய அளவுக்கு பிள்ளையின் விருத்தி ஏற்படும். இதற்கு வயதும், வளர்ந்தோரினதும் விசேடமாக தாய் தந்தையினதும் உற்சாகமூட்டலும் முக்கியமானதாகும்.

குழந்தை விருத்தி பற்றி கலந்துரையாடும்போது உடல் வளர்ச்சியும் உளவிருத்தியும் ஏற்படுவது முக்கியமானதாகும். சிறு வயது தொடக்கம் குழந்தைகளுக்கு சுத்தமாக வாழப்பழக்க வேண்டும். உணவருந்த கைகளைக் கழுவுதல், நித்திரைக்கு முன் பல்துலக்கல், இரு கால்களையும் கழுவிக்கொள்ளல், ஆகியவற்றைப் பழக்குவதுடன் முறையாக மலசலகூடங்களைப் பாவிப்பதற்கும் பொருத்தமான வயதிலிருந்தே பழக்க வேண்டும்.

பிள்ளையின் உடல் வளர்ச்சி பற்றியும் நாம் கவனம் செலுத்த வேண்டும். கண்களின் பார்வை குறித்தும், செவிப்புலன் பற்றியும் கவனம் செலுத்துவது மிக முக்கியமாகும். குழந்தைப் பருவத்திலிருந்தே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்பார்வை பற்றிக் கவனிக்க வேண்டும். அடிக்கடி கண்களைச் சிமிட்டுதல், காமாளைக் கண்பார்வை, கண்களிலிருந்து நீர் வடிதல், பீளை கட்டுதல், என்பன பற்றியும் கவனித்தல் அவசியமாகும். அத்தகைய சந்தர்ப்பங்களில் கண் வைத்தியரிடம காட்டலாம். நாட்டு வைத்தியம் செய்வது தவிர்க்கப்படல் வேண்டும். அதேபோன்று செவிப்புலக் குறைபாடுகள் பற்றியும் கவனம் செலுத்துங்கள். சில தாய்மார்கள் செவிப்புலக் குறைபாடுடைய பிள்ளைகளின் காதுகளில் எண்ணெய் ஊற்றுவதுண்டு. இது ஆபத்தானதென்று வைத்தியர்கள் கூறுகிறார்கள். பிள்ளைகளின் கை, கால்கள் வளைந்திருத்தல், உதடு வெடித்தல் கொன்னுதல் ஆகியன பற்றியும் கவனம் செலுத்துவது பெற்றோர்களின் கடமையாகும். குழந்தைகளின் ஆரோக்கியமான உடல் வளர்ச்சிக்கு இயற்கைச் சூழலிலிருந்து கிடைக்கும் வளங்களைப் பயன்படுத்திக் கொள்க. காலைச் சூரியக் கதிர்கள் குழந்தை வளர்ச்சிக்குத் தேவையான உயிர்ச் சத்து 'டி' யைத் தருகின்றது. சுத்தமான காற்றும் அத்தியாவசியமாகும். இருண்ட அறைகளில் பிள்ளைகளை வைத்திருப்பது கூடாது. நன்றாகக் காற்றோட்டமுள்ள அறையில் பிள்ளையை நித்திரை கொள்ளச் செய்யுங்கள். காலையில் வெளியில் விளையாட விடுங்கள். அன்பின் காரணமாக பிள்ளையைத் தூக்கி இடுப்பில் வைத்துக் கொண்டிருப்பது குழந்தைக்கு நல்லதல்ல. சில பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு மணலை மிதிக்க இடங்கொடுப்பது இல்லை. மணலை மிதிக்க இடமளியுங்கள். இயற்கைச் சூழலுடன் பிள்ளைகளை இயைபுபடுத்துவது அவர்களது உடல் உள வளர்ச்சிக்கு உகந்ததாகும். மூன்று மாதம் கடந்த பின் பாயில் படுக்கச் செய்வதால் சுதந்திரமாக கைகளையும், கால்களையும் செயற்படுத்துவதற்கு இடமளிக்கலாம். புரளவும் தவழவும் இது வசதியாகும். பாதுகாப்புக்கும் இது உகந்தது.

குழந்தையின் சுகநலம் பற்றிக் கவனம் செலுத்துவது முக்கியம். குழந்தையின் பாதுகாப்புக்காக முற்காலத்தில் பஞ்சாயுதத்தை அணிவிப்பார்கள். இன்று முக்கூட்டு ஊசியேற்றல், பஞ்சாயுதத்தை அணிவிப்பதைப் போன்றே முக்கியமாகும். குழந்தை சிகிச்சையின் போது குறிப்பிடப்படும் திகதியில் முக்கூட்டு ஊசியேற்றல் ஒரு தாயின் கடமையாகும். உங்கள் நன்மைக்காக சுகாதாரத் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இச்சேவையை பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அது உங்கள் குழந்தைக்கு பூரண பாதுகாப்பை வழங்கும். போலியோ, ஏற்புவலி தடுப்பூசிமருந்து,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொண்டைக்கரப்பன், நெருப்புக்காய்ச்சல், முதலிய பயங்கர நோய்களைத் தடுப்பதற்கு மருநதேற்றிக் கொள்ளல் முக்கியமாகும். உங்களுக்குத் தேவையானவற்றை அறிந்து கொள்வதற்காக சுகாதாரத் திணைக்களத்தின் மூலம் அல்லது உங்கள் குடும்ப வைத்தியர் மூலம் மென்மேலும் விளக்கங்களைப் பெற்றுக் கொள்ளவும்.

தாய்மார்களின் அறியாமை காரணமாக பிள்ளைகள் பூச்சி நோயினால் பாதிக்கப்படுகிறார்கள். நோயுற்ற பின் சிகிச்சை செய்வதைவிட வரமுன் தடுத்துக் கொள்ளதே மேல். பூச்சி மருந்துகளை அடிக்கடிக் கொடுப்பதைவிட பூச்சி மருந்துகளலிருந்து பிள்ளைகளைப் பாதுகாத்துக் கொள்வது நல்லது. தாய்மாரின் அறிவீனம் காரணமாக பல பிள்ளைகள் வைத்தியசாலைகளில் சேர்க்கப்படுகிறார்கள். மலகூடம் சென்ற பின் சவர்க்காரமிட்டுக் கைகளைக் கழுவுமாறு சிறுவயது தொடக்கம் பழக்குங்கள். பாதரட்சைகளை அணிந்து கழிவகற்றச் செல்லவும், திரும்பி வரும்போது கால்களைக் கழுவிவருமாறும் பழக்கவும். குடிக்கும் நீர் பற்றியும் கவனம் செலுத்துங்கள். நீரைக் கொதிக்க வைக்கவும், சுத்தமாக வைத்திருக்கவும். தனித்தனி பாத்திரங்களை வைத்துக் கொள்ளுங்கள். சுத்தமான நீரைக் குடித்தல் மிக முக்கியமாகும். வயிற்றோட்டத்தினால் இறக்கும் குழந்தைகள் மிக அதிகம். பழங்களை நன்றாகக் கழுவி சாப்பிடவும். கீரைகளை சிறிது உப்பு நீர் கலந்த அல்லது கொண்டிஸ் சிறிது கலந்த நீரில் நன்றாகக் கழுவிக் கொளளுங்கள்.

பிள்ளையின் பாதுகாப்பும் முக்கியமாகும். தொட்டிலுக்குப் பக்கத்தில் மண்ணெய் விளக்கு, குப்பிலாம்பு ஆகியவற்றை வைக்க வேண்டாம். பாதுகாப்பான விளக்குகளைப் பாவியுங்கள். மின்சாரம் பயன்படுத்தும் வீடுகளில் தவழ்ந்து செல்லும் அல்லது பிடித்துக் கொண்டு செல்லும் பிள்ளைகளிருந்தால், மின்சார பொருத்தனைகளை மூடிவையுங்கல். அவற்றினுள் விரல்களைப் போடாது தவிர்த்துக் கொள்ளவும். மின் அடுப்பு, வாயு அடுப்பு பாவனை போன்று பாதுகாப்பற்ற விறகு அடுப்பும் பிள்ளைகளுக்கு விபத்தை ஏற்படுத்தலாம். கொதிக்கும் நீருள்ள கேத்தல், சூடான அடுப்பு ஆகியவற்றை பிள்ளைக்கு சமீபமாக வையாதீர்கள். கிருமிநாசினிகளை வீட்டினுள்ளே வைக்க வேண்டாம். வைப்பதாயின் பிள்ளையினால் பிடிக்க முடியாதளவு உயரத்தில் வையுங்கள். மருந்து வில்லைகள்,

471503
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருந்து கலவைகள், திரவங்களையும் உயரமான இடத்தில் எட்டாதவாறு வையுங்கள். ஆசையினால் பிள்ளைகள் வர்ணங்களைக் கொண்ட வில்லைகள், நிற மருந்துத் திரவங்கள் ஆகியவற்றை எடுத்துச் சுவைத்துப் பார்ப்பர். நாகம், விரியன் (புடையன்) மாவில்லன் முதலிய விஷப் பாம்புகளிடமிருநதும் தேள் முதலிய விஷ ஜந்துக்களிலிருந்தும் பாதுகாத்துக் கொள்ளுங்கள். பாதுகாப்பற்ற கிணறு இருப்பின் பாதுகாப்பாக வேலியிடுங்கள். அன்பாக வளர்க்கும் வீட்டு மிருகங்கள், நாய், பூனை, முயல் ஆகியவற்றிலிருந்தும் பிள்ளைகளுக்கு நோய்கள் ஏற்படலாம்.

பிள்ளைகள் வளர்ச்சி பாதுகாப்பு ஆகியனபற்றி பெற்றோர்களாகிய நாம் கூடிய கவனம் செலுத்துவதுடன் பிள்ளைகளை விளங்கிக் கொள்வதற்கா இப்பருவத்தில் விசேடமாகக் கவனம் செலுத்த வேண்டும். பிள்ளைகளை விளங்கிக் கொள்ள பெரும்பாலான பெற்றோர்கள் முயற்சிப்பதில்லை. சிலருக்கு பிள்ளைகளுடன் காலத்தைச் செலவழிப்பதற்கு ஓய்வு கிடைப்பதில்லை. தொழில் அல்லது சமூக உறவுகள், பொழுது போக்கு என்பனவே இதற்குக் காரணமாகும். மற்றும் சிலர் உடல் தேவைகளைப் பூர்த்தி செய்துவிட்டுத் திருப்தியடைவர். "பிள்ளைகளுக்குத் தேவையான யாவற்றையும் நாம் கொடுக்கிறோம்" என்பர். ஆனால் பிள்ளைகளுக்குத் தேவைப்படுவது இந்தப் பொருட்களல்ல. அவற்றுக்குப் பதிலாக அன்பு, இரக்கம், அரவணைப்பு முதலிய உளத்திருப்தி ஏற்படுவதற்கான தொடர்புகளாகும். சிலர் இவற்றைப் பற்றி அறிந்திருந்தாலும் ஆர்வம் காட்டாதிருப்பர். மத்திய கிழக்கு நாடுகளுக்குச் செல்லும் சில தாய்மார் தம் கடமைகளைத் தவறவிடுகின்றனர். ஒரு குடும்பத்தின் ஒற்றுமை பிள்ளைகளின் வளர்ச்சியிலும் பாதுகாப்பிலும் பாதிப்பை ஏற்படுத்துகின்ற பிரதான காரணியாகும். ஆகவே பெற்றோராகிய எமது பிரதான கடமை பிள்ளைகளின் வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் உகந்த சூழலை உருவாக்க எத்தனித்தல் ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளின் தேவைகள்

முந்திய அத்தியாயத்தில் பிள்ளைகளின் தேவைகளைப் பற்றிக் குறிப்பிடப்பட்டது. அந்தத் தேவைகள் யாவையென்று இங்கு நுணுக்கமாகவும் ஒழுங்குமுறையாகவும் ஆராய்வோம்.

பிள்ளைகளின் தேவைகளை உடல், உள, சமூகத் தேவைகள் என மூன்றாக வகுத்துக் கொள்ளலாம்.

உடற் தேவையில் மிக முக்கியமானது உணவாகும். இங்கு நாம் கவனத்திற் கொள்ள வேண்டிய முக்கிய விடயம் பிள்ளையின் வயிற்றை நிரப்புவது மட்டும் போதுமானதல்ல என்பதாகும். சில தாய்மார்கள் பிள்ளைகளின் வயிற்றை நிரப்புவதை மட்டுமே சிந்திக்கிறார்கள். பிள்ளையின் வயதுக்குப் பொருத்தமானதும் பிள்ளையின் வளர்ச்சிக்குத் தேவையானதுமான உணவைக் கொடுப்பதன் முக்கியத்துவத்தைப் பற்றி மறந்துவிடுகிறார்கள். பிள்ளைக்கு இலகுவில் சீரணிக்கக்கூடிய உணவுகளை வழங்க வேண்டும். உதாரணமாக ஆறு மாதம் வரை தாய்ப்பாலூட்டல் அவசியமாகும். தாய்ப் பாலின் முக்கியத்துவம் ஏலவே குறிப்பிடப்பட்டது.

மூன்று மாதம் சென்ற பின்னர் தாய்ப்பாலுடன் மேலதிகமாக நீராகார வகைகளை கொடுக்கலாம். சோற்றுக் கஞ்சி, முட்டை (சிறிதளவு மஞ்சட்கரு) கரட் போன்ற மரக்கறி சூப் ஆகியவற்றைக் கொடுத்தல் பொருத்தமானதென்று வைத்தியர்கள் கூறுகிறார்கள். பிள்ளை வளரும் பருவத்தில் கொடுக்கும் உணவையும் மாற்றுதல் வேண்டும். படிப்படியாக திண்ம உணவுக்குப் பழக்க வேண்டும். நமது முன்னோர் ஏழு மாதத்தில் அல்லது ஒன்பது மாதத்தில் பிள்ளையின் வளர்ச்சிக்கு ஏற்பச் சோறு ஊட்டினார்கள். புதிய உணவு வகைகள் இரண்டை ஒரே முறையில் கொடுக்கக் கூடாது. ஒவ்வொரு வகையையும் வெவ்வேறு நாட்களில் கொடுப்பது உசிதமானது. முட்டை போன்ற உணவை முதலில் ஊட்டும் போது தேக்கரண்டியால் சிறிதளவை முதலில் ஊட்டுக. ஒரு வாரத்துக்கு இருமுறை அல்லது மும்முறை அத்தகைய உணவை வழங்குங்கள். தினமும் ஒரே வகை உணவை ஊட்டும் போது பிள்ளை வெறுப்படைகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைப் பருவத்திலிருந்தே உணவைப் பெறும் முறையையும் பயிற்றுதல் முக்கியமானதாகும். தாயின் மடியிலிருந்து தாய்ப்பாலை உறிஞ்சும் பிள்ளை பின்னர் தாயின் மடியிலேயே கஞ்சி, சூப் ஆகியவற்றை உணவாகப் பெறும். ஓரிடத்திலிருந்து கொண்டு பிள்ளை உணவை உட்கொள்ளப் பழக்குதல் மிக முக்கியமாகும். கையால் உணவுட்கொள்ள முடியுமான வயதையடைந்தவுடன் அவ்வாறு உட்கொள்ளப் பழக்குதல் நல்லது. எப்போதும் சவர்க்காரமிட்டுக் கைகளைக் கழுவச் செய்து உணவை வழங்குங்கள். சிறு வயது தொடக்கம் நல்ல பழக்கங்களை பயிற்றுங்கள். உடற் சுகாதாரத்தைப் பேணுவதற்கு சுத்தம் மிக முக்கியமானதாகும்.

பிள்ளைக்கு உணவூட்டுதல் மட்டுமன்றி தாய் அவ்வுணவைத் தயாரிக்கும் போதும் விசேட கவனம் செலுத்த வேண்டிய ஓரம்சம் மிகச் சுத்தமாக உணவைத் தயாரிப்பதாகும். விஷக்கிருமிகளிலிருந்து பாதுகாப்பு பெறுவதும் மிக முக்கியமாகும். மரக்கறிகள், கீரைகள் பழங்கள் ஆகியவற்றை நன்றாகக் கழுவியே பயன்படுத்த வேண்டும். உணவுப் பாத்திரங்களை மூடி வைத்தல், ஈக்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ளல், விஷ ஐந்துக்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ளல் என்பன முக்கியமானதாகும்.

பல தாய்மார் தம் பிள்ளைகளுக்கு பலவந்தமாக உணவூட்டுவர்
"இங்க வாங்க இந்தச் சோறு கொஞ்சத்தைச்சாப்பிடாவிட்டால் நல்லா இரண்டு பிரம்படி தருவேன்"

"இதுக்குச் சாப்பாடு கொடுக்கப் போனால் எனக்கு அலுத்துப் போயிடுது"

ஏன் இவ்வாறு பலவந்தமாக பிள்ளைகளுக்குச் சோறூட்ட முனைகிறீர்கள். இந்தப் பிள்ளைகள் சாப்பிடாதிருப்பதேன்.

சில சமயம் தாயார் பலவந்தமாக வற்புறுத்திச் சோறூட்டுகின்றமையினாலேயே பிள்ளை உணவை வெருக்க நேரிடலாம். சில சமயம் பிள்ளைக்குத் தேவையான அளவுக்கு மேலதிகமாக உணவூட்டுதலாக இருக்கலாம்.

பிள்ளை சாப்பிட விரும்பும் முறையில் உணவு தயாரிக்கப்படாமை காரணமாகவும் இருக்கலாம். உணவில் நல்ல சத்துப் பொருள்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தால் மட்டும் போதாது. பிள்ளை விரும்பு விதத்தில் அழகும் சுவையும் மணமும் உடையதாகவும் இருக்க வேண்டும். இங்கு உணவு தயாரிக்கும் முறை முக்கியமானதாகும். ஒரே வகையான உணவை ஊட்டாது பல்வகைப்பட்ட உணவுகளை உணவூட்டுதல் வேண்டும். அத்துடன் நிறம், சுவை, குணம் ஆகியன பற்றியும் கவனித்துக் கொள்ளுங்கள். மரக்கறி வகைகளை உண்ண விரும்பாத ஒரு பிள்ளைக்கு கரட், போஞ்சி, கிழங்கு, கோவா, பீட்ரூட் முதலிய சில மரக்கறி வகைகளைக் கொண்டு ஒரு குருவியை அல்லது ஒரு மலரைச் செய்து பீங்கானில் வைத்தால் பிள்ளை அதை மிக வுருப்பத்துடன் சாப்பிடுவதைக் காணலாம்.

உணவென்பது சோறு, மரக்கறிகள், இறைச்சி, மீன் ஆகியவற்றை மட்டும் கொண்டதல்ல என்பதை மறக்கக் கூடாது. நன்றாகக் கழுவிய பழங்களையும் பிள்ளைகளுக்குக் கொடுத்தல் மிக முக்கியமாகும். குழந்தைப் பருவத்தில் செவ்விளநீர் பப்பாசிப்பழச் சாறு, தோடம்பழம், நாரன் ஆகியவற்றின் சாறு ஆகியவற்றையும் இரண்டு வயதாகும் போது ஏனைய பழவர்க்கங்களையும் கொடுக்கலாம். சில பிள்ளைகளுக்கு மூன்று வயதுவருவரை அன்னாசி போன்ற பழங்களைக் கொடுத்தல் பொருத்தமானதன்று.

மரத்தின் கீழே விழுந்துள்ள பழங்களை நன்றாகக் கழுவிப் பாவியுங்கள். வேறு உயிரினங்கள் சாப்பிட்டவற்றைக் கொடுக்க வேண்டாம். றம்புட்டான், வெரலு விதைகள் தொண்டையில் இறுகியதால் பிள்ளைகள் இறந்து போனதும் உண்டு. உணவு கொடுக்கும் போது பாதுகாப்பைக் கருத்திற் கொள்ளுங்கள். காளான் வகைகள், சில கிழங்கு வகைகள், கீரை வகைகள் சில சந்தர்ப்பங்களில் விஷமாகிய செய்திப் பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன. தெரியாத உணவு வகைகளைப் பிள்ளைகளுக்கு ஊட்டாது விடவும். வேலைக்குச் செல்லும் தாய்மார்கள் சிலர் உணவைத் தயாரித்து குளிர்சாதனப் பெட்டியில் வைத்துச் செல்வர். பிள்ளைகளைப் பார்ப்போர் அவ்வுணவைக் கொடுப்பர். குளிர்சாதனப் பெட்டியில் வைத்த உணவை ஒரேயடியாக கொடுக்காமல் குளிர் குறைந்த பின் கொடுங்கள். மீண்டும் சூடாக்குவதானால் அதன் பின் அவற்றை மீண்டும் குளிர்சாதனப் பெட்டியில் வைக்காதீர்கள். பல நாட்களாக குளிர்சாதனப் பெட்டியில் வைத்தவற்றையும், அடிக்கடி வைத்தவற்றையும் பாவிப்பது அவ்வளவு உகந்ததல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளுக்கு உணவு வழங்கும் போது கூடுதலான அன்பின் காரணமாக கூடுதலான இனிப்பைக் கொடுக்கும் பெற்றோரும் இருக்கிறார்கள். இது உகந்ததன்று. சிறு வயதிலேயே நீரழிவு நோய் ஏற்பட இது காரணமாகும். சிலர் நித்திரைக்கு முன்னர் டொபி, சொக்கலட் போன்றவற்றைக் கொடுப்பர். வேலைக்குச் செலலும் சில பெற்றோர் நல்ல பிள்ளையாக இருந்தால் குழந்தைக்கு பின்னேரம் டொபி கொண்டு வருவேன் சொக்லட் கொண்டு வந்து தருவேன் என்று கூறிச் செல்வர். வாக்குறுதியை நிறைவேற்றிய பிள்ளைக்கு டொபி, சொக்லட் முதலியவற்றை தினமும் கொண்டுவந்து கொடுக்கும் பெற்றோர் பிள்ளைகளைக் கூடாத ஒழுக்கத்துக்குப் பழக்குகிறார்கள். நித்திரைக்கு முன் பல்துலக்குமாறு வலியுறுத்த வேண்டும். இனிப்புச் சுவை காரணமாக பிள்ளைகளின் பற்கள் பழுதாவதற்கும், (பற்சூத்தை ஏற்படுதல்) வாய் நோய்கள் ஏற்படுவதற்கும் இடம் உண்டு. பெற்றோரும் பிள்ளை பார்க்கக்கூடிய வகையில் நித்திரைக்கு முன் பல் துலக்குங்கள்.

பிள்ளைகளின் சிறந்த உடல், உளவளர்ச்சிக்கு உதவுவதற்கு அவர்களுக்கு சுதந்திரமாக ஓடியாடி துள்ளிக் குதித்து விளையாட இடமளிக்க வேண்டும். சில வீடுகளில் வீட்டலங்காரத்துக்கு முதலிடம் கொடுக்கப்பட்டுள்ளது. வீட்டுப் பொருட்கள் அலங்காரமாக வைக்கப்பட்டுள்ளன. அதனால் பிள்ளைகளுக்கு சுதந்திரமாக ஓடியாடித் துள்ளிக் குதித்து விளையாட இடம் கிடைப்பதில்லை. தற்காலத்தில் பெரும்பாலான நகர்ப்புறக் குடும்பங்கள் மாடி வீடுகளிலும், அண்டிய கூலியறைகளிலும், சிறு வீடுகளிலும் வசிக்கிறாரகள். இவ்விடங்களில் வாழும் சிறுவர்களுக்கு சுதந்திரமாக விளையாட இடமில்லை. இத்தகைய நகர்ப் பிரதேசங்களில் பூங்காக்கள், விளையாட்டரங்கு, கடற்கரை, திறந்த வெளி ஆகியவற்றுக்கு பிள்ளைகளை அழைத்துச் செல்லல் நல்லது. வார இறுதியிலும் லீவு தினங்களிலும் அவ்வாறு செல்வது பிள்ளையின் இயல்பான தேவையை நிறைவு செய்யும்.

பிள்ளைகள் இயல்பாகவே செயற்படுபவர்கள். பிள்ளை விரும்பியவாறு (பாதுகாப்புடன்) விளையாட இடமளியுங்கள். மணல், நீர் ஆகியவற்றிலும் விளையாட அனுமதியுங்கள். சிலர் இதை ஒரு தொல்லையாகக் கருதுவர். கிராமப் புறங்களிலாயின் சுதந்திரமாகப் பாய்ந்து ஓடி விளையாடுவதற்கு வீட்டு முற்றத்தையும் தோட்டத்தையும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நானென்றால் இவருக்கு மணலைப் பிடிக்க விடுவதில்லை மணலில் விளையாடினால் புழு (பூச்சி) வியாதி உண்டாகும்"

"நண்ணீரைத் தொடவேண்டாம் தடிமனைத் தேடிக்கொள்ள"

மணலில் விளையாடிய பின்னர் கைகளை நன்றாகக் கழுவுங்கள். அப்போது பூச்சி நோய் ஏற்படாது. தண்ணீரைத் தொட்ட மாத்திரத்தில் தடிமன் ஏற்படுவதில்லை. தண்ணீரைத் தொட இடமளிக்காது ஒரு பிள்ளையை வளர்க்க முடியுமா? பிள்ளை இந்தச் சூழலில் வாழ வேண்டும்.

விளையாட்டுப் பொருட்களைத் தெரிவு செய்து கொடுக்கும் போது அவை அவர்களது வயது மட்டத்துக்கு ஏற்றதாக இருத்தல் வேண்டும். சில பெற்றோர்கள் விலை அதிகமான பொருட்களை வாங்கிக் கொடுக்க முயற்சிப்பர். ஆனால் செலவின்றி சூழலிலிருந்தே பல விளையாட்டுப் பொருட்களைப் பெற்றுக் கொள்ளலாம். தென்னை மட்டை மாடு, குரும்பட்டி மெசின், தென்னை மட்டைக் குதிரை, பட்டையில் வைத்து இழுத்துச் செல்லல், மணல் பிட்டுச் சுடுதல், விளையாட்டு வீடு கட்டல் என்பன செலவேதுமின்றி திருப்தியடையக் கூடிய வழிகளாகும். கழிவுப் புடவைத் துண்டுகளினால் பொம்மைகள் செய்து கொடுக்கலாம். இத்தகைய புடவைத் துண்டுகளினால் பல பிராணிகளையும், மிருகங்களையும் செய்து கொடுக்கலாம். அதன் மூலம் கழிவுப் பொருள்களைப் பயனுள்ளவாறு பயன்படுத்திக் கொள்ளலாம்.

சில தாய்மார்கள் ரப்பர் பந்துகளுக்குப் பதிலாக தோடங்காய் ஜம்போலக்காய், எலுமிச்சம்பழம் முதலியவற்றைக் கொடுப்பர். ஆறுவயதுக்கும் பத்துவயதுக்குமிடைப்பட்ட பெண்பிள்ளைகளை புளியங்கொட்டை, அதுபோன்ற வேறு விதைகளைக் கொண்டு செய்த பைகளை மேலே வீசி எறிந்து விளையாடுவர். அதே போன்று எட்டு வயது பன்னிரண்டு வயது பிள்ளைகள் ஊஞ்சலாடுவர். பெரியவர்களுக்கும் இதுவொரு நல்ல அப்பியாசமாகும். பிள்ளைகளின் கை கால் வளர்ச்சிக்கு இத்தகைய பயிற்சிகள் மிக உதவும்.

பிள்ளைகளின் உடல், உள வளர்ச்சிக்குத் தேவையான விளையாட்டுப் பொருட்களை நமது நாட்டுச் சூழலிலிருந்தே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயாரித்துக் கொள்ளலாம். தச்சு மடுவங்களில் வெட்டி வீசப்படுகின்ற மரத் துண்டுகளை சிறிது சீராக ஒப்பனை செய்து கொண்டால் மூன்று ஐந்து வயதுப் பிள்ளைகளுக்கு அவர்களது நிருமாண ஆக்கத்திறனை பரீட்சித்துப் பார்ப்பதற்கு சந்தர்ப்பத்தை அளிக்க முடியும். வீடு, பாலம், கட்டடம், ஆகியவற்றை நிருமாணிப்பதற்குப் பயன்படுத்தலாம். மணல், நீர் முதலிய இயற்கை வளங்களை உபயோகித்து விளையாட இடமளிக்கலாம். இவ்விளையாட்டுக்கள் மூலம் பிள்ளைகளுக்கு மகிழ்ச்சி ஏற்படுகிறது. அத்துடன், ஒத்துழைப்பு, சகஜீவியம், ஒற்றுமை, ஒருமைப்பாடு, பொறுமை, பரஸ்பர உதவிபுரிதல் ஆகியவற்றுக்கான அத்திவாரம் இவ்வாறு விளையாடும் போதே கட்டியெழுப்பப்படுகின்றது.

உளக்கட்டுப்பாட்டுக்கும், உடலாரோக்கியத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்கும் கூட்டாக விளையாடுதல் பயன்தரும். பிள்ளையில் உடல் உள வளர்ச்சிக்கு விளையாட்டு அத்தியாவசியமாகும். சமவயதுச் . சிறுவர்களுடன் விளையாடுவது, சடுகுடு, கள்ளன் பொலிஸ் விளையாட்டு, கிளித்தட்டு, நொண்டியடித்தல், பந்தயவோட்டம், முதலிய விளையாட்டுக்களின் மூலம் பிள்ளைகளுக்கிடையில் ஒத்துழைப்பு வளருகின்றது. சிந்தனை சக்தி விருத்திக்கும், உடல் வளர்ச்சிக்கும் கூட இவ்விளையாட்டுக்கள் உதவும்.

உங்கள் பிள்ளையின் உடல், உள விருத்திக்கு உதவும் மற்றொரு அம்சம் நித்திரையாகும். எல்லாருக்கும் ஓய்வு தேவை. குழந்தைப் பருவத்தில் கூடுதலான நேரத்தை தூக்கத்தில் கழிக்கிறது. ஆனால் குழந்தையை வற்புறுத்தித் தூங்க வைத்தல் கூடாது. பெற்றோருக்கு எவ்வளவுதான் வேலைகளிருந்த போதிலும் பிள்ளையின் இந்த இயல்பான தேவைக்கு வசதி செய்து கொடுத்தல் மிக முக்கியமாகும். காலையில் எட்டு மணிக்கு முன்னர் பாடசாலைக்குச் செல்லும் பிள்ளையை அலுவலகத்துக்கு அழைத்துச் சென்று மாலையில் நாலரை மணிக்கு வேலை முடித்து வீடு திரும்பும் போது கூடவே அழைத்துவரும் பெற்றோரும் ஏராளம். மக்கள் நிரம்பி வழியும் பொது வாகனங்களிலே நெரிசலுக்குட்பட்டு வீட்டுக்கு வரும் இப்பிள்ளைகள் சோர்ந்து போயிருப்பர், இவர்களுக்குத் தேவையான ஓய்வும் நித்திரையும் கிடைக்கின்றனவா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையைப் பார்த்துக் கொள்வதற்கு ஒருவரும் இல்லாத பெற்றோர்களுக்காக குழந்தை பராமரிப்பு நிலையங்கள், குழந்தை நிலையங்கள் முதலியன சில கைத்தொழிற்சாலைகள், அலுவலகங்கள் ஆகியவற்றுடன் இணைந்து காணப்படுகின்றன. ஆனால் விருத்தியடைந்த நாடுகளிற் போன்று இத்தகைய வசதிகள் நம் நாட்டில் இல்லை. மேலே நாடுகளிலும் கீழைத்தேய யப்பான் போன்ற நாடுகளிலும் இத்தகைய சிறுவர் நிலையங்கள் உள்ளன. ரஷ்யாவிலும் குழந்தைகளைப் பாதுகாத்துப் பார்த்துக் கொள்வதற்கு கூடிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது. எமது நாட்டிலும் துரித கைத்தொழிலாக்கம் நடைபெறுகிறது. சுதந்திர வர்த்தக வலயங்கள் ஆகியவற்றுக்கு அண்மையில் பராமரிப்பு நிலையங்கள் அத்தியாவசியமாக உள்ளன.

தற்காலத்தில் பிள்ளைகளைப் பாதுகாத்துப் பார்த்துக் கொள்வதற்காக வசதிகள் குறைவு. கருக்குடும்பம் (சிறு குடும்பம்) தோன்றியுள்ளதால் பெற்றோர்களுக்கும பிள்ளைகளுக்கும் மட்டும் கட்டுப்பட்டதாகவே குடும்பம் உள்ளது. விரிவான குடும்பம் உள்ள கிராமப் பகுதிகளிலாயின் பாட்டி, பாட்டன், மாமா, மாமி, சிற்றப்பன், சிற்றன்னை, மற்றும் அயற் சுற்றத்தாரும் உளர். பிள்ளைகளைப் பார்த்துக் கொள்வதற்கு அவர்களது ஒத்துழைப்பு குறைவின்றி கிடைக்கிறது. எனினும் நகர்ப்புறங்களிலும், உப நகரங்களிலும் பெற்றோர்கள் தொழிலுக்குச் செல்லும் போது சிறுபிள்ளைகளைக் கவனித்துக் கொள்ளும் பிரச்சினையொன்று உருவாகின்றது. பொருளாதாரக் காரணியால் வேலையாட்களை வைத்துக் கொள்வதும் கஸ்டமானது. பல சந்தர்ப்பங்களில் பிள்ளைகள் வேலைக்காரர்களினால் கெடுக்கப்படுகிறார்கள். அதனால் ஏற்படும் விரக்தி அதிகமாகும். பத்திரிகைச்செய்திகள் இவ்வாறு பாதிக்கப்பட்ட பிள்ளைகளைப் பற்றி எடுத்துக் கூறுகின்றன. சில தாய்மார்கள் வெளிநாட்டு தீனாரைச் சம்பாதிப்பதற்காக வெளிநாடுகளுக்குச் செல்கிறார்கள். குழந்தைகள், பிள்ளைகள் பாலர், இளைஞர்களை மற்றவர் பொறுப்பில் விட்டுச் செல்வதால் அவரகள் அளவிளந்த கஷ்டங்களுக்குள்ளாகிறார்கள். தாய் தந்தையரின் அன்பு கிடைக்காத பிள்ளைகள் கெட்ட நடத்தைகளுக்கு தூண்டப்படுகிறார்கள். முரண்டு பிடிப்பர், சமூகத்துக்குப் பயனுள்ளவர்களாக ஆகவேண்டுமாயின் பிள்ளைகளுக்கு பெற்றோர் அன்பும் ஆதரவும் அரவணைப்பும் கிடைக்க வேண்டியது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றியமையாததாகும். போதைப் பொருட்களுக்கு அடிமையாவதும், தற்கொலை புரிந்து கொள்வோரும் அத்தகைய அன்பும் கிடைக்காகதவர்களாகும்.

ஒரு பிள்ளையின் சிறந்த வளர்ச்சிக்கு வயிற்றுக்கு மட்டுமன்றி உளத்துக்கும் உணவு ஊட்டப்பட வேண்டும். தாய்,, தந்தையரின் அன்பு பிள்ளையின் உளத்துக்கு உணவாகிறது. பிள்ளையின் வெற்றியை மதித்தல், பிள்ளையின் துலங்கலை அங்கீகரித்தல் என்பன பிள்ளையின் உள ஆரோக்கியத்தைச் சீராக்குவதற்குக் காரணமாகும்.

"நல்லது மிக நன்று", "பார்க்க அழகாயிருக்கு", "நல்ல அழகாயிருக்கு" மீண்டும் செய்யுங்கள்.

பிள்ளையின் நல்ல நடத்தைகளுக்கும் வெற்றிகளுக்கும் பெற்றோர்களிடமிருந்தும் மூத்தோரிடமிருந்தும் நல்ல அங்கீகாரமும் கணிப்புக்களும் கிடைக்கும் போது பிள்ளைக்கு பெரும் மகிழ்ச்சி ஏற்படுகின்றது.

பெற்றோர்களின் அன்பு கூடுதலாகக் கிடைத்த அளவுக்கு பிள்ளை சாதாரண மனிதனாகின்றார். குரங்குக் குட்டிகளினூடாகச் செய்யப்பட்ட உளவியல் பரிசோதனைகள் மூலமும் இவ்வுண்மை நிரூபிக்கப்பட்டுள்ளது. அதன்படி முதல் ஐந்தாண்டுக் காலத்தில் கிடைக்கும் அன்பும் ஆதரவும் கவனிப்பும் பாதுகாப்பும் பிள்ளையின் ஆளுமையைத் தீர்மானிக்கின்றது.

பெற்றோரின் அன்பைப் பெறாத பிள்ளைகள் உளச்சிக்கலுக்குள்ளாகின்றனர். வளர்ந்தோரான பின் சமபால் தொடர்பு, காம முரண்பாடுகளுக்கு உட்பட்டவர்களாக ஆகின்றனர். பதினொரு, பன்னிரண்டு வயதாகும் போது பிள்ளைகளின் உடலில் ஏற்படும் வேறுபாடு காரணமாக கூடிய வெட்கத்துக்குமாளாவார்கள். இப்பருவத்தில் சமவயதுப் பிள்ளைகளுடன் பழகவிட வேண்டும். எனினும் யாரோடு, எவ்வாறு பழகுகிறார்கள் என்பதைப் பற்றி பெற்றோர் அவதானமாயிருக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையின் விவேக விருத்தி பற்றி பெற்றோர் ஆகிய நாம் மிகக் கவனமாக இருக்க வேண்டும். சுவையான உணவையும், நல்ல உடைகளையும் வழங்குதல் மட்டும் போதாது. பிள்ளை அடிக்கடி புதுப்புது அம்சங்களைச் செய்து பார்க்க விரும்பும். இயல்பான திறமைகளை வளர்த்துக் கொள்ள சங்கீதம், நடனம், சித்திரம் முதலிய திறமைகளை வளர்த்துக் கொள்ள இடமளிக்க வேண்டும். பழைய காலத்தில் வீடுகளில் பாட்டி, பாட்டன், ஆகியோர் சிறு பிள்ளைகளுடன் உட்கார்ந்து கதை சொன்னார்கள்,, தாலாட்டுப் பாடினார்கள்,, விடுகதைகள் சொன்னார்கள், பாடல்களைப் பாடினார்கள். இவற்றின் காரணமாக பிள்ளைகளுக்குத் தம்மைப்பற்றி தன்னம்பிக்கை உண்டாகின்றது.

பிள்ளைகளின் புத்தி விருத்திக்கு அவர்கள் கேட்கின்ற பல்வேறு வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.

அது என்ன? அந்தச் சத்தம் ஏன் வருகிறது? புகைவண்டி முன்னே செல்கையில் மரங்கள் பின்னே செல்வது ஏன்?

இத்தகைய வினாக்களுக்கு பெற்றோர் அளிக்கும் விடை மிக முக்கியமானதாகும். சிலர் இந்த வினாக்களுக்கு விடையளிக்காது தவிர்த்துக் கொள்கின்றனர். பிள்ளைகளை அமைதியாக இருக்கச் செய்வர். அது தவறாகும். சில புத்திசாதுரியமுள்ள பெற்றோர் இவற்றுக்கு விடை வழங்குவர். தனக்கு எவ்வளவு தான் பிரச்சினைகள் இருந்தாலும் புத்தியுள்ள பெற்றோர் விடையளிப்பர். பெருக்கெடுத்து ஓடும் நீரோட்டத்துடன் புதிய ஊற்று நீரும் சேர்ந்து கொண்டாற்போன்று வினாக்களுக்குக் கொடுக்கும் விடை காரணமாக பிள்ளைகளின் அறிவு விருத்தியாகும்.

வீட்டில் போன்று பாடசாலையிலும் இவ்வூக்குவித்தல் முக்கியமாகும். வீடு ஒரு சிறு பாடசாலையாகும். பிள்ளைக்கும் எங்களுக்குப் போன்று சுதந்திரம் அவசியமாகும். அவரை சிறைக் கைதியாக்காதீர்கள், சுதந்திரமாகச் சிந்திக்கவும் ஈடுபடவும் இடமளிக்க வேண்டும். அவரைப் பற்றி கவனமாக இருப்பதுடன் அவருடைய ஆளுமை வளர்ச்சிக்கு இடமளியுங்கள். நமது நாட்டில் வாழும் பிள்ளைகளின் தேவைகளுக்கிடையில் இன்று தெற்றெனத் தென்படும் தேவை பாதுகாப்புத் தேவையாகும்.

UNIVERSITY OF PERADENIYA 15-12-1995 LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றுபோல சிறுவர்களுக்கு ஆபத்து நிறைந்த காலம் முன்னொருபோதும் இருக்கவில்லை. இன்று பாதைகளிலே பிள்ளைகள் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். பிறக்க இருக்கின்ற பிள்ளை பிறந்த பின்னர் தன் தாயினாலேயே கொலை செய்யப்படும் சந்தர்ப்பங்களும் உண்டு. தாயாரோடு முரண்பட்ட தகப்பனால் கொலை செய்யப்பட்ட பிள்ளைகளும் உள்ளனர். தீ, மற்றும் விலங்குகள் ஆகியவற்றிலிருந்து பிள்ளைகளை பாதுகாத்துக் கொள்வதே போன்று மனிதர்களிடமிருந்தும் பாதுகாத்துக்கொள்ளும் காலம் தற்போது வந்துள்ளது. காமக் குற்றச் செயல்களுக்கு சிறுவர்களைப் பயன்படுத்தி சிறுவர்களைக் கொலை செய்யும் காலமாதலால் பிள்ளைகள் மீது பெற்றோர் அன்பு செலுதிக் கொள்ளல் அவசியமாகும். தொழிலுக்குச் செல்வதனால் அல்லது பயணம் செல்லும் போது சிறுவர்களை உரிய மூத்தோரின் பாதுகாப்பு அல்லாது தனியாக வீட்டில் விட்டுச் செல்லக்கூடாது. மாமாமார், சிற்றப்பன்மார், பாட்டன் ஆகியோரினால் கெடுக்கப்பட்ட பிள்ளைகள் பற்றியும் பத்திரிகைகளில் செய்திகள் பிரசுரமாகின்றன. இந்நிலை பற்றி பெற்றோர் விழிப்புடன் நடந்து கொள்வதுடன் இந்நிலைமைகளுக்குத் தம் பிள்ளைகள் உட்படாது பாதுகாத்துக் கொள்ளல் பெற்றோர்களின் கடமையாகும்.

பாலியல் குற்றவாளிகளின் எண்ணிக்கையும் வரவர அதிகரிக்கின்றது. கொள்ளையிடல், கொலை செய்தல், களவெடுத்தல், போதைப் பொருட் பாவனை, பாலியல் குற்றச் செயல்கள் ஆகியவற்றைச் செய்யும் பாரிய குற்றவாளிகள் பற்றியும் ஆராய்ந்து பார்க்க வேண்டும். சில பிள்ளைகள் கூடா நண்பர்களுடன் சேர்வதால் இந்நிலைமைக் குள்ளாகின்றனர். சிலர் தொலைக்காட்சிகளில் பார்க்கும் பல்வேறு நிகழ்வுகளையும் நடத்தைகளையும் உதாரணமாகக் கொண்டு பின்பற்றுவதால் இத்தீய பழக்கங்களுக்கு அடிமையாகின்றனர். பதின்மூன்று வயதுச் சிறுவன் அதே வயது சிறுமியை ஒரு கூராயுதத்தால் குத்திக்கொலை செய்யுமளவுக்கு எமது பிள்ளைகள் இன்று கொடுமையாளர்களாக மாறியுள்ளனர். இவற்றுக்குப் பதில் கூற வேண்டியவர் யார்?

பிள்ளைகளுடன் பழகுகின்றவர்களைப் பற்றி அவதானத்துட னிருப்பதன் மூலம் பல கூடா நடத்தைகளிலிருந்து பிள்ளைகளைப் பாதுகாத்துக் கொள்ளலாம். பிள்ளையின் நண்பர்கள் யாவர் என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றோர் நன்றாக அறிந்திருக்க வேண்டும். பிள்ளைகள் போய் வருகின்ற இடங்கள் யாவற்றையும் தாயும் தகப்பனும் அறிந்திருப்பார்களாயின் பதின் மூன்று பதின்னான்கு வயதுப் பிள்ளைகள் சும்மா சுற்றித்திரிய மாட்டார்கள்.

பிள்ளைகள் வாசிக்கும் புத்தகங்களை பெற்றோர் அறிவார்களாயின் அவற்றைத் தெரிவு செய்து கொடுத்தல் தம் கடமையென்று கருதினால் தவறு செய்வதற்குப் பதிலாகத் தண்டனை வழங்குவதனை விட விளககம் பெறச் செய்தால் இந்நிலைமைகளிலிருந்து பிள்ளைகளைப் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

தொலைக் காட்சியில் காட்டப்படும் பொல்லாத கொலைகள் மோசடிகள், கொள்ளையிடல், முதலியன பிள்ளையின் மனதில் புகுவதைத் தடுப்பதற்கும் ஏதேனுமொரு விதத்தில் வழியமைத்துக் கொள்ள வேண்டும். தேவையான நிகழ்ச்சித் திட்டங்களை மட்டும் சிறுவர்களுக்கு தெரிவு செய்து விளங்கப்படுத்திக் கொடுத்து பார்க்கச் செய்வதனால் பொருத்தமற்ற நிகழ்ச்சிகளை பார்ப்பதை விட்டும் தடுத்துக் கொள்ளலாம்.

பிள்ளை பாடசாலைக்குச் செல்வதானால் பாடச;ாலை ஆசிரியருடன் அடிக்கடி கலந்துரையாடுவதன் மூலம் பிள்ளைகள் மோசமான வழியிற் செல்வதைத் தடுத்துக் கொள்ளலாம். இதன் படி பார்க்கையில் பிள்ளைகளின் பாதுகாப்புத் தேவை இன்று மிகப் பொறுப்புவாய்ந்த ஒரு நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பதால் பெற்றோர் இதுபற்றி கூடிய கவனம் செலுத்த வேண்டும் என்பதைக் கூற வேண்டும்.

பிள்ளைக்கு உணவு மட்டுமா தேவை! இல்லை புத்தி பூர்வமான செயல்களைச் செய்வதற்கு சுதந்திரம், அன்பு, இரக்கம், பாதுகாப்பு என்பனவும் மிக அவசியமாகும். சமூகப் பிராணியாக வாழ்வதற்குத் தேவையான சமூகத் திறன்களைப் பெற்றுக் கொள்ளச் சந்தர்ப்பமும் தேவை.

சிறுவர் உரிமைகள் பற்றிய சட்டம் சிறுவரின் தேவைகள் யாவையென்று நன்றாகத் தெளிவுபடுத்தியுள்ளது. முறையான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி எல்லாச் சிறுவர்களுக்கும் வழங்கப்படவேண்டும். குடும்பத்தில் ஏற்படும் சமூக, பொருளாதாரபிரச்சினைகள் காரணமாக பிள்ளைக்கு உரிய கல்வியைப் பெற்றுக் கொடுக்காதிருப்பது குற்றமாகும். சிறுவர்களுக்கு விளையாடுவதற்கும், களிப்படைவதற்கும் இடமளிக்காது வேலையாட்களாக தொழிற்சாலைகளில் ஈடுபடுத்துவது ஒரு குற்றமாகும்.

பிள்ளைகளை வளர்க்கும் போது பெற்றோரது தேவைகளையும் விட பிள்ளைகளின் தேவைகளில் கவனம் செலுத்துவது மிக முக்கியம் என்பது இப்பொழுது உங்களுக்குப் புலனாகியிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம் சிறுவர் பாடசாலை

"அமலன் நிமலனுக்கு பலமாக ஒரு அடி கொடுத்தான். நிமலன் அழுகிறான்"

"எனக்கு தண்ணீரைப் பிடிக்க முடியாது. நான் தண்ணீருக்குப் பயம்" குமாரி ஆசிரியரிடம் கவலையோடு கூறுகிறாள்.

பாத்திமா பாவையைத் தூக்கிக் கொண்டு பாவை எனது பபா என்று சொல்லி அள்ளி அணைத்துக் கொள்கிறாள்.

இச்சந்தர்ப்பங்கள் யாவற்றிலும் உள உணர்வுகள் வெளிப்படுத்தப்படுவதைக் காணலாம். பயம், கோபம், அன்பு, கருணை முதலிய பண்புகளை உள உணர்வுகள் என்று கூறலாம். பிள்ளைகள் மிகச் சிறு பராயம் தொடக்கம் இவ்வுணர்வுகளை வெளிப்படுத்துவதைக் காணலாம். சூழலுடன் மோதுவதனாலும் சமூகத்தில் வாழும் போதும் இவ்வாறு உள உணர்வுகள் வெளிப்படுத்தப்படுகின்றன. சில உள உணர்வுகள் தனி நபருக்கும் சமூகத்துக்கும் தீங்கு பயப்பவை. வேறு சில தனிநபருக்கும் சமூகத்துக்கும் நன்மை பயப்பன. பெற்றோர்களாகிய நாம் கூடாத உள உணர்வுகளைத் தவிர்க்கவும், உகந்த உள உணர்வுகளைத் தோற்றுவிக்கவும் கூடியதாக வீட்டுச்சூழலை அமைத்துக் கொள்ள வேண்டும்.

பிள்ளை பிறக்கும் போதே எந்தவொரு உள உணர்வையும் கொண்டு வருவதில்லை. எல்லா உள உணர்வுகளும் சூழலிலிருந்து பெற்றுக் கொள்வனவாகும். பிறந்த பினனர் பிள்ளை பெறுகின்ற அனுபவங்களுக்கேற்ப பிள்ளைகளிடம் ஒவ்வொரு உணர்வும் பிள்ளையிடம் ஏற்படுகின்றது. பிறக்கும் போது பிள்ளை முகங்கொடுக்க நேரும் நிலை கூட பிள்ளையிடம் பின்னொரு காலத்தில் சில உள உணர்வுகள் ஏற்படக் காரணமாகின்றன என்று உளவியலாளர்கள் கருதுகின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிற்சில காரணங்களினாலேயே பிள்ளைகளிடம் உள உணர்வுகள் தோன்றுகின்றன. ஓர் உள உணர்வு ஏற்பட்டவிடத்து பிள்ளை வெளிப்படுத்தும் நடத்தையில் விசேட தன்மை காணப்படும். அன்பு வரும்போது அம்மாவிடம் நெருங்கி அம்மாவின் முகத்தை முத்தமிடும். கோபம் வந்த போது கையிலுள்ள தேநீர்க் கோப்பையை, உணவுப் பாத்திரத்தை, விளையாட்டுப்பொருளை கீழே போடும். சில பிள்ளைகள் தமது அம்மாவைக் கடிப்பர். நிலத்தில் உருளுதல், தலையை நிலத்தில் அடிப்பர், கையிலிருக்கும் ஏதேனும் பொருளால் நாய்க்கு அல்லது பூனைக்கு அடிக்கும். இத்தகைய நடத்தைகள் பலவற்றை நாம் பார்த்துள்ளோம். பெற்றோர் அவதானித்துள்ள இந்த நிகழ்வுகளை பெற்றோர் நன்றாக விளங்குவது பிள்ளைகளின் ஆளுமை வளர்ச்சிக்கு மிக முக்கியமானதாகும்.

பிள்ளைகளிடம் கோபமும், எதிர்ப்புணர்வும் ஏற்படுவதற்கு பிரதான காரணம் பிள்ளைகளுக்கும் பெற்றோருக்குமிடையில் காணப்படும் தொடர்பின் பலவீனமாகும். பிள்ளைகளின் உடலியற் தேவைகள் உணவு, உடை, விளையாட்டு என்பனவும் அன்பு, சுதந்திரம் போன்ற உளத் தேவைகளும் நிறைவேறாவிட்டால் பெற்றொர்களிடம் தானும் கோபப்படுவர். சிறுவர்கள் சிறு வயது தொடக்கம் சுதந்திரமாக சில வேலைகளைச செய்ய விரும்புவர். தேவைக்கதிகமாக பிள்ளைகளை கட்டுப்படுத்தி வைத்து பிள்ளைகளைத் திருத்த முயற்சிப்பதால் இந்நிலை ஏற்படலாம். தத்தெடுத்து வளர்க்கும் பிள்ளைகள், தாய் தந்தை இருவரையும் இழந்த பிள்ளைகள், ஆகியோரிடம் கோபம் அதிகமாகும். அவர்களுக்குத் தேவையான அன்பு, ஆதரவு, இரக்கம், அனுதாபம் பெற்றோரிடமிருந்து கிடைப்பதில்லை. இங்கு பெற்றோருக்கிடையில் எவ்வளவுதான் கருத்து வேறுபாடுகள் இருந்த போதிலும், மோதல்கள் இருந்த போதிலும் அவற்றையெல்லாம் பொறுத்துக் கொண்டு ஒரு குடும்பமாக நன்றாக வாழ்வது பிள்ளைகளுக்கு மத்தியில் பாதகமான உள உணர்வுகள் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கு உதவும். சில பெற்றோர் குடும்ப பொருளாதாரத்தை விருத்தி செய்து கொள்வதற்காக வெளிநாட்டுத் தொழில்களுக்குச் செல்கின்றார்கள். இங்கு பிள்ளைகளுக்காக எவ்வளவு தான் பணத்தை அனுப்பிய போதிலும் அவற்றால் பிள்ளைகளுக்குத் தேவையான அன்பையும் ஆதரவையும் வழங்க முடியாது. பிள்ளைகளின் செயல்களை மதிப்பதற்கு பெற்றோர் வீடுகளில் இருக்க வேண்டும். அவர்களது வெற்றியைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றோர்களைக் கொண்டு அங்கீகரித்துக் கொள்வது ஒவ்வொரு பிள்ளையினதும் தேவையாகும். ஆகவே பிள்ளைகள் பெற்றோர்களுடனேயே வளர்வது முக்கியமாகும். மிகச் சிறு வயதில் புட்டிப் பால் ஊட்டுவதை விட தாய்ப்பால் ஊட்டுதல் மிக முக்கியமானதாகும். ஆறு மாதங்களுக்காவது தாய்ப்பாலூட்ட முடியுமாயின் பிள்ளைக்கு அதன்மூலம் கிடைக்கும் அன்பு மிக முக்கியமானதாகும்.

பிள்ளைகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளின் போது அவர்களுக்கு உதவுவதும் பெற்றோரின் கடமையாகும். பிள்ளைகளைப் போலல்லாது குமரப் பருவத்தில் பிள்ளைகள் பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கிறார்கள். அப்பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கக் கூடியதாக பிள்ளைகளிடம் தன்னம்பிக்கையை வளர்ப்பது அத்தியாவதியமாகும். சில சமயங்களில் பிள்ளைகள் கடுமையான பிரச்சினைகளுக்கு உள்ளாகிறார்கள். பெற்றோரின் உதவியை அப்போது அவர்கள் நாடுவார்கள். சில பெற்றோர்கள் தம்பிள்ளைகளிடம் பழிவாங்குவதற்கு பிள்ளைகளுக்கு எந்த உதவியும் செய்யமாட்டார்கள். அது பிழையாகும். பிள்ளைகளிடைய வாழ்க்கைப் பிரச்சினைகளில் பெற்றோர்கள் வாழ்நாள் முழுவதிலும் தேவையான உதவிகளை வழங்க வேண்டும். பிள்ளைகளின் எல்லாப் பிரச்சினைகளையும் பெற்றோரே தீர்க்க வேண்டுமென்பது இதன் கருத்தல்ல.

மிகச் சிறு குழந்தைப் பருவத்திலிருந்தே பிள்ளைகள் பெற்றோரின் மனப்பாங்கு, கருத்துக்கள், அபிப்பிராயங்கள் ஆகியவற்றினடிப்படையில் பிள்ளை சூழலில் வாழத் தயாராகின்றனர். அன்பும் ஆதரவும் ஒற்றுமையும் நிலவுகின்ற உறுதியான வீடு சமூகமயமாக்கப்பட்ட ஆளுமை வளர்ச்சியுடைய பிள்ளைகள் வளர உதவுகின்றது. பிள்ளைக்குப் பெற்றோர் இருவரினதும் அன்பு தேவை. பெரும்பாலான பெற்றோரின் கருத்து மிகச் சிறு குழந்தைப் பருவத்தில் தாயின் அன்பும் ஆதரவும் மட்டும் போதும் என்பதாகும். அது தவறு. பிள்ளைக்கு தந்தையின் அன்பும் ஆதரவும் கூட மிக அவசியமாகும். எவ்வளவு தான் உத்தியோக வேலைகள், கடமைகள் இருந்த போதும் தந்தை பிள்ளையுடன் சிரிப்பதற்கு, பேசுவதற்கு, தூக்கி இடுக்கிக் கொள்வதற்கு, அன்பு செலுத்துவதற்கு ஒரு நேரத்தை ஒதுக்கிக் கொள்ள வேண்டும். சில குடும்பங்களில் சின்னப்பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தையைப் புறக்கணிப்பர். தந்தையை ஓர் எதிரி போன்று நோக்குவர். தந்தை வீட்டுக்கு வரும்போது பிள்ளை வீட்டில் செயற்படாது இருப்பர். ஒன்றாக உட்கார்ந்து சாப்பிட அழைத்தாலும் பங்குபற்ற மாட்டார்கள். தந்தை மீது அன்பு, இரக்கம் ஆகிய உகப்பான உணர்வுகளுக்குப் பதிலாக பயம், கோபம் முதலிய உகப்பற்ற உள உணர்வுகளைக் கொண்டிருப்பர்.

சிறு வயதிலிருந்தே பாதுகாப்பாக இருக்கின்றோம் என்ற உணர்வு பிள்ளைகளுக்கு இருக்க வேண்டும். அப்போது தான் பிள்ளை நன்றாக வளரும். சில குடும்பங்களில் தந்தைமார் குடிபோதையில் மாலையில் வீட்டுக்கு வந்த பின் தாயாருடன் சண்டை சச்சரவில் ஈடுபடுதல் ஒரு சாதாரண நிகழ்வாகும். அத்தகைய ஒரு குடும்பத்தில் வாழும் சிறு பிள்ளைகளிடம் பயமும், அச்சமும் அதனால் ஏற்படும். பாதுகாப்பற்ற எண்ணத்தை தந்தையே ஏற்படுத்துகிறார். ஆயுதங்களினால் காயப்படுத்திக் கொள்ளும் சந்தர்ப்பங்களும் உண்டு. இதைக் காணும் சிறு பிள்ளை பயத்தால் நடுங்கும். அத்தகைய பிள்ளைகளின் மொழிவிருத்தியும், சமூக வளர்ச்சியும் தடைப்படும். வெட்கம், நாணம் , திருப்தி, விரக்தி என்பன பிள்ளைகளிடம் ஏற்படுவதற்கு இத்தகைய சூழ்நிலைகள் காரணமாகின்றன. சில பிள்ளைகளிடம் முரண்டுத்தனம் ஏற்படும். தந்தையிடம் பழிவாங்கச் செய்யக்கூட இப்பிள்ளைகளைத் தூண்டக்கூடிய உள உணர்வுகள் பெற்றோர்களாலேயே பிள்ளைகளிடம் ஏற்படுத்தப்படலாம். மதுபானப் பாவனை காரணமாக குடும்ப ஒற்றுமை சிதைந்து போகும். பிள்ளைகளிடம் பொருத்தமற்ற உள உணர்வுகளை ஏற்படுத்தும். சமூக மயமாக்கமடைந்த வளர்ந்தோர் உருவாவது தடைப்படும்.

ஆரம்ப வயதுப் பிள்ளைகளிடம் இன்று கோபம் எனும் உணர்வு ஆட்சி செய்கின்றது. இதற்குக் காரணம் கல்வியைப் பற்றி பெற்றோரிடம் அநாவசியமான ஒரு உற்சாகம் ஏற்பட்டிருப்பதாகும். பிள்ளைகளை வலோற்காரமாகப்பரீட்சைகளுக்கு பயிற்றுவிக்கும் போது அவர்களிடம் சமூகமயமாக்கம் தளர்ச்சியடையும். சில குடும்பங்களின் பிள்ளைகள் தாயை வெறுப்பர். தாயைப் பொருத்தமற்ற சொற்களால் விழித்தல், தாயாருடைய விருப்பங்களுக்கேற்ப எந்த வேலையையும் செய்யாதிருத்தல், உணவைக் கூட ஒதுக்கித் தள்ளல் ஆகியவற்றைக் காணமுடிகிறது. இத்தகைய நிலைமைகள் எதிர் காலத்தில் இதைவிடப் பாரதூரமாக தாக்கத்தை ஏற்படுத்தும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுமை சிறுவயது தொடக்கம் பழக்க வேண்டும். சில சமயங்களில் பிள்ளைகளுக்குத் தேவையான எல்லாவற்றையும் பெற்றோரால் வழங்க முடியாது. தமது வருமானத்திற்கு ஏற்ப கொடுக்கக் கூடிய ஓரளவுண்டு. இந் நிலைமை பிள்ளைகளுக்கு சிறு வயது தொடக்கம் விளங்கப்படுத்திக் கொடுப்பது பெற்றோரின் கடமையாகும். அநாவசியமான போட்டியை பிள்ளைகளிடம் ஏற்படுத்தாது, கிடைத்ததைக் கொண்டு திருப்தியுடையும் வண்ணம் அவர்களைப் பயிற்றுவிக்க முடியுமானால் பிற்காலத்தில் அதிருப்தியடைதல் போன்ற உள உணர்வுகள் ஏற்படுவதையும் தோல்வி மனப்பாங்கு ஏற்படுவதையும் குறைத்துக் கொள்ளலாம்.

சில பிள்ளைகளிடத்தில் ஆக்கிரமிப்புத் தன்மை, முரட்டுத் தன்மை என்பன உடலியற் பலவீனம் காரணமாகவும் ஏற்படலாம். போஷாக்கின்மை, புலக்குறைபாடுகள், உடற்குறைபாடு காரணமாக இரத்தவோட்டத்தில் ஒரு மாற்றம் அல்லது கோளங்களின் செயற்பாட்டிலேற்படும் மாற்றம் என்பன காரணமாகவும் அவ்வாறு ஏற்பட இடமுண்டு. அந்நிலைமை பிள்ளையிடம் காணப்படுமாயின் உடனே வைத்திய ஆலோசனை பெற்பட வேண்டும். பிரச்சினையை விளங்கிக் கொள்ளாது சிகிச்சை செய்வதால் பயனில்லை.

பொறுமை, அன்பு, கருணை, இரக்கம் என்பன ஏற்படக்கூடிய வகையில் பிள்ளைகளை வளர்க்க பெற்றோர் முயற்சிப்பார்களாயின் நன்று. குடும்ப அங்கத்தவர்களை மட்டுமன்றி அயலவர்களையும், மிருகங்களையும் கூட அவ்வாறு கவனிப்பதற்கு பழக்குவது பிள்ளைகளிடம் விழுமியங்களை ஏற்படுத்தும் செயலாகும்.

அன்பு மிகச் சிறந்த உள உணர்வாகும். பெற்றோரிடமிருந்து அன்பைப் பெறும் பிள்ளை பெற்றோர்களையும், சகோதர சகோதரிகளையும், நண்பர்களையும், அயலவர்களையும் ஆதரிக்கும். குழந்தைப் பருவத்தில் பெற்றோர் ஆதரவு கிடைக்காத பிள்ளை வளர்ந்தவனான பின் மணமானபோதிலும் வெற்றிகரமான குடும்ப வாழ்க்கையைக் கழிக்க முடியாத ஒரு நபராக இருக்கலாம் என்பது சிக்மன்ட் புரோய்டின் கருத்தாகும். அன்பு பற்றிய எண்ணம் அவரிடம் இருந்தால் மட்டுமே பாடசாலைக்குச் செல்லும் வயதில் நண்பர்கள் ஏற்படுத்திக் கொள்ளவும் நல்ல தொடர்பை வைத்துக் கொள்ளவும் அவருக்குத் திறமை உண்டாகும். நல்ல பண்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளம் இருக்கும் ஒருவருக்கு மட்டுமே மற்றவர் மீது அன்பு செலுத்த முடியும்.

சாதி, இன, சமய பேதங்களைக் கவனியாது சமாதானமாக வாழக் கூடிய சமூக அங்கத்தவர்களாக பிள்ளைகளை உருவாக்குவது தான் இலங்கைக்குத் தேவைப்படுகின்றது. இந்தச் சிறு தீவிலுள்ள வளங்கள் வரையறைக்குட்பட்டதாக இருப்பதால் அதனை ஒற்றுமையாக பங்கிட்டுக் கொண்டு பொறுமையோடு கருமமாற்றக்கூடிய சமூகமயமாக்கமடைந்த ஒரு குழுவினரைத் தோற்றுவிப்பதற்கு எல்லாப் பெற்றோர்களும் இயன்றளவு முயற்சியெடுக்க வேண்டும். உற்சாகமாகக் கற்று பிறப்பின் போது கொண்டு வந்த ஆற்றல்களை விருத்தி செய்து கொண்டு சமூகத்துக்குச் சேவை செய்யக்கூடிய பிறர்நலன் விரும்பும் மக்கள் எமக்குத் தேவையாகும். அதற்காக மனிதத் தன்மையை விருத்தி செய்யக்கூடிய ஒரே முறை அன்பு, இரக்கம் முதலிய நலல உணர்வுகளைச் சிறு பிள்ளைக் காலம் முதலே பிள்ளைகள் மத்தியில் ஏற்படுத்துவதாகும். அதனை வீட்டில் ஆரம்பியுங்கள், பாடசாலையினூடாகவும் அதனை விருத்தி செய்தால் தொடர்பாடல் ஊடகங்கள் மூலமாகவும், சமூகத்தினூடாகவும் அதனையே வளர்த்தால் விழுமியங்களினால் நிரம்பப் பெற்ற ஒரு சமுதாயம் உருவாகும்.

சமூகத்தினூடாகவும் நியாயம் நிறைவேற வேண்டும். இளைஞரிடம் காணப்படும் விரக்திக்கு இதுவே பிரதான காரணியாகும். விசேடமாக மூத்தோர் நியாயமாக நடந்து கொள்ள வேண்டும். தற்போது சமூகத்தில் நிலவுகின்ற சிற்சில விரக்தி நிலைமைகளைக் கட்டுப்படுத்திக் கொள்வதற்கு பெற்றோரின் இந்தச் செய்கைகள் பெருமளவுக்குத் துணை புரியும்.

அன்பு, அனுதாபம், கருணை ஆகியவற்றை விளைவிப்போம். பயம், கோபம், பொறாமை ஆகியவற்றை பிள்ளைகளிடமிருந்து நீக்குவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நான் என்றால் மரத்தின் கீழேயுள்ள கொப்புகள் அனைத்தையும் வெட்டிவிடுவேன்" நிஸாம் "கொப்புகளில் ஏறுகின்றான்."

"முற்றத்துக்குப் போக வேண்டாம். ஊத்தைகள் எல்லாம் மிதித்துக் கொண்டு வீட்டுக்குள்ளே வருவதற்கு".

"தோட்டத்துக்குள் குருவிகள் வருவது எனக்கு விருப்பமில்லை" அவைகள் பழங்களை எல்லாம் சாப்பிட்டுவிட்டுப் போகின்றன. ஒரு காயைத்தானும் பழுக்க விட்டிருக்கின்றதா, பாருங்கள்! பழுக்க விடுவதே இல்லை."

தோட்டத்துக்குள்ளே வருகின்ற கிளி, வீட்டுக் குருவி, புறா, காகம் ஆகியவற்றின் மூலம் பிள்ளை தன் புலன்களுடாக ஏராளமான அனுபவங்களைப் பெறுகின்றன. சுவரிலே வரிசையாக அங்குமிங்கும் போகின்ற சிற்றெறும்புக் கூட்டத்தை இமை கொட்டாமல் பார்த்திருக்கின்ற பிள்ளை அதன் மூலம் கற்கின்றது. "ஞாவ்", "ஞாவ்" என்று தாயிடம் உணவு கேட்கின்ற "கிட்டி"யின் நடத்தையையும் அப்பா வீட்டுக்கு வரும் வேளையில் வாலை ஆட்டிக் கொண்டு ஓடி வருகின்ற "டொம்"யின் செயலையும் பிள்ளை விளங்கிக் கொள்ள முயற்சிக்கின்றது.

தோட்டத்திலுள்ள மாமரத்தின் கொப்புகளிலே பிள்ளை தொங்கி விளையாட விரும்புவது ஏன்? பிள்ளையின் கால்களின் வளர்ச்சிக்கு அவை அவசியமா? அது விரும்பத்தக்கதா?

பிள்ளை சூழலிலே வாழ்கின்றது. எந்த ஒரு பிள்ளையும் சூழலிலிருந்து விலகி வாழ முடியாது பிள்ளை சூழலிலே இருந்து பலவற்றையும் கற்கின்றது. பிள்ளை பிறந்த நாளிலிருந்தே சூழலிலே அனுபவங்களைப் பெற்றுக் கொள்ள ஆரம்பிக்கின்றது. பிள்ளையினுடைய உள வளரச்சிக்கும் சமூக வளர்ச்சிக்கும் சுற்றாடல் பெரும் துணை புரிகின்றது.

பிள்ளை வாழ்கின்ற வீட்டிலுள்ள இடவசதி வீடு அமைந்திருக்கின்ற இடம், தோட்டம், மரம், செடி கொடிகளுக்குப் பக்கத்தில் இருக்கின்ற வீடு வாசல்கள், நதிகள், ஏரிகள், கால்வாய்கள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புற்றரைகள், போக்குவரத்து வாகன வசதிகள் இல்லாமை, இருக்கின்றமை முதலிய யாவும் பிள்ளையின் மீது செல்வாக்குச் செலுத்துகின்றன.

வீட்டிலுள்ள குடும்ப அங்கத்தவர்கள், வீட்டுக்கு அடிக்கடி வருகின்ற அயல் வீட்டினைச் சேர்ந்தவர்கள், அலங்கார மீன்கள், வீட்டிலுள்ள பொருள்கள், உபகரணங்கள், தோட்டத்தில் இருக்கின்ற மரங்கள், செடிகொடிகள் ஆகியன பிள்ளையினுடைய அறிவையும் அனுபவத்தையும் வளர்க்கின்றன.

சில பெற்றோர்கள் தாம் வாழும் சூழல் எப்படிப்பட்டது, அந்தச் சூழல் பிள்ளையின் மீது எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்துகின்றது? என்பன பற்றி விளக்கம் இல்லாது செயல்படுகின்ற சந்தர்ப்பங்களும் உள்ளன.

தான் வாழும் வீடு கள்வர்களிடமிருந்தும், எதிரிகளிடமிருந்தும் நெருப்பில் இருந்தும் பாதுகாப்பான ஓர் இடமாக இருப்பது பிள்ளைக்குப் பாதுகாப்பான ஓர் உணர்வை ஏற்படுத்தும். வெள்ளப் பெருக்கிற்கு உட்படுகின்ற இடங்களில் வாழ்கின்ற பிள்ளைகளிடத்தில் பாதுகாப்பற்ற உணர்வு ஏற்படும். யானை, புலி, கரடி முதலியன வாழ்கின்ற வனங்களுக்குப் பக்கத்திலே வாழும் பிள்ளைகளுக்கும் ஒரு பாதுகாப்பற்ற எண்ணமே உண்டாகும். தொடர்ந்து யுத்தம், கலவரங்கள் நடைபெறும் இடங்களில் வசிக்கின்ற குடும்பங்களின் பிள்ளைகள் மத்தியில் தொடர்ந்தும் ஒரு விரக்தி நிலை ஏற்படும். குரோதம், கோபம், வஞ்சனை போன்ற எண்ணங்கள் இவர்களிடம் ஏற்படுவது இயல்பாகும்.

வீட்டுச் சூழலும் பிள்ளைக்குப் பொருத்தமான சூழலாக இருக்க வேண்டும். வீடு பிள்ளையின் இராசதானியமாகும். அங்கு ஆட்சி செய்வதற்குப் பிள்ளைக்கு இடம் கொடுக்க வேண்டும். இதனாற் கருதப்படுவது பிள்ளை நினைத்தவாறு செயற்படுவதற்கு இடமளிப்பதல்ல. பெற்றோராகிய நாம் பிள்ளையின் சுதந்திரம் வளர்வதற்குத் தேவையான சூழலை வீட்டினுள்ளே ஆயத்தம் செய்து கொடுக்க முற்பட வேண்டும். வீட்டினுள்ளே இருக்கும் பொருள்கள் கட்டில், மேசை, கதிரை, முதலியவற்றையும் பிள்ளைக்குத் தேவையான முறையில் அமைத்துக் கொடுக்க முடியுமாயின் மிக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உகந்ததாகும். சில பெற்றோர்கள் அலங்காரப் பொருளகள் பலவற்றை கொள்வனவு செய்து கொண்டு வந்து வீட்டை நிரப்புவர். பிள்ளை துள்ளிக் குதித்து விளையாட இது பாதிப்பாக அமைகிறது. புத்தியுள்ள பெற்றோர் இதனால் அத்தியாவசியமான பொருட்களை மட்டுமே சேகரிப்பர்.

பிள்ளையை ஒரு தொட்டிலில் அல்லது ஒரு கட்டிலில் வைத்தாலும் மூன்று மாதங்களளவில் புரளுவதற்கும், தவழ்ந்தும் செல்ல தொடங்கும் போதும் நிலத்தில் பாயில் போட்டு வைப்பது மிகச் சிறந்ததாகும். சில தாய்மார் பிள்ளையை கட்டிலில், கதிரையில் வைத்து விட்டுத் தம் கருமத்தில் ஈடுபடுவர்.

பாதுகாப்பற்ற விதமாக இவ்வாறு வைப்பதனால் விழுந்து பல விபத்துக்களுக்குள்ளாகலாம். இவ்வயதில் பிள்ளைகளுக்குப் பாதுகாப்பை வழங்குவது பெற்றோரின் கடமையாகும். இலங்கையில் பழங் கிராமங்களில் வீடுகளில் பிள்ளைகளை நிலத்தில் பாயில் நித்திரை செய்வித்தல் இந்த வகையில் உகந்த செயலாகும். பிள்ளை முழங்காலில் பிடித்துக் கொண்டு எழும்பும் காலத்தில் சுதந்திரமாக நடமாடக்கூடியவாறு வீட்டுச் சூழலை அமைப்பது நல்லது. பிள்ளையின் சுதந்திரமான நடத்தைக்கு இடைஞ்சல் ஏற்படா வண்ணம் விருந்தினர் அறைத் தளபாடங்கள், கணாப்பு, டிபோய், ராக்கை, முதலியவற்றை சுவருக்கு அண்மையில் வைத்து பிள்ளைக்கு ஓடியாடி விளைடாட இடமளியுங்கள். சில வீடுகளில் பிளள்ளைகளுக்கு விருந்தினர் அறை தடைசெய்யப்பட்ட பகுதியாகும். அத்தகைய வீடுகளில் வசிக்கும் பிள்ளைகள் சிறைக் கைதிகளாவர். பிள்ளையின் ஆத்ம சக்தி ஏற்படுவதற்கும் உடல், உள வளர்ச்சி ஏற்படுவதற்கும் இது தடையாகும். வீடு பிள்ளைக்குச் சுதந்திரமான இடமாக அமைதல் வேண்டும். பிள்ளை செயற்திறனுள்ள ஒருவராக வருவதற்கு அதற்குத் தேவையான சூழல் வீட்டில் கிடைக்க வேண்டும்.

உங்கள் பிளளைக்குச் சுதந்திரம் தேவை. எனினும் அது எல்லையற்ற சுதந்திரமாக இருக்கக் கூடாது. குழந்தைப் பருவத்தில் கை, கால்களை அசைத்து உதைத்து சுதந்திரமாக உடலை செயற்படுத்த இடமளிக்க வேண்டும். நிலத்தில் ஒரு பாயில் தூங்கச் செய்ததன் பின் அப்பிள்ளை விழித்துக் கொண்டதும் சுதந்திரமாக விளைடாட இடம் கிடைக்கிறது. குறுகிய தொட்டிலில் தூங்கச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யும் பிள்ளைக்கு இச் சுதந்திரம் கட்டுப்படுத்தப்படுகின்றது. துள்ளிக் குதித்து ஓடியாடி விளையாடும் போதும் பாதுகாப்புடன் அவ்வாறு செய்வதற்கு இடம் கொடுக்க வேண்டும்.

பெரும்பாலான தாய்மார்கள் தம் பிள்ளை மீதுள்ள அன்பின் காரணமாக ஹா! ஹா! ஓட வேண்டாம். மேலே ஏற வேண்டாம் என்று சொல்லுகிறார்கள். பிள்ளை ஓடவும் பாயவும் இடமளியுங்கள். இதற்கிடையில் அவர்களுக்கு பாதுகாப்பளியுங்கள். பிள்ளைக்குச் சுதந்திரமாக விளையாட இடமளியுங்கள். பிள்ளை வளருவதற்கு அது அத்தியாவசியமானதாகும்.

சிறு வயதில் பிள்ளைகள் ஏதேனும் விளையாட்டுப் பொருளொன்றை எடுத்து விளையாடுவது ஒரு சிறு நேரத்திற்காகும். பின்னர் அதை வீசிவிட்டு வேறொன்றில் கவனம் செலுத்தும். இது பிள்ளைகளின் இயல்பாகும். அச்சந்தர்ப்பத்தில் பிள்ளையைத் தண்டிக்க வேண்டாம்.

வீட்டினுள்ளே மட்டுமன்றி முற்றத்திலும் சுதந்திரமாக நடமாட இடம் அளிக்க வேண்டும். தான் வாழும் சூழலை பிள்ளை அறிந்து கொளவது அவசியமாகும். குழந்தைப் பருவத்திலிருந்தே காலை வேளையில் வெளியே கொண்டு செல்ல வேண்டும். பனிபட இடம் கொடுக்க வேண்டாம். காலை குளிர் கடுமையானது, காலை வெயில் கூடாது முதலிய தவறான கருத்துக்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். மழையில்லாத தெளிவான நாளில் காலையில் பிள்ளையை திறந்த வெளிக்குக் கொண்டு செல்வது மிக நன்று. பிள்ளைகளுக்கு நல்ல காற்றோட்டத்தைப் பெற்றுக் கொடுப்பது அத்தியாவசியமாகும். ஒரு மாதமாகின்ற போது குழந்தை நீலவானம், முகில்கள், செடிகொடிகள், பிராணிகள் ஆகியவற்றைப் பார்க்கும். வீட்டில் உள்ளவர்களை அறிந்து கொள்ளும். மூன்றாம் மாதத்தில் மலர்கள், பறவைகள், விலங்குகள், வண்ணத்துப் பூச்சி முதலியவற்றைப் பார்க்கும். நான்கு ஐந்து மாதங்களளவில் பல சத்தங்களை அறிந்து கொள்ளும். குருவிகளின் ஒலி, வாகனங்களின் ஒலி ஆகியவற்றுக்கு செவிமடுக்கும் பிள்ளை பாய்ந்து நடமாட ஆரம்பிக்கும்போது முற்றத்திலுள்ள மரங்கள் மலர்கள், பழங்கள், குருவிகள், விலங்குகள் ஆகியவற்றையும் அயலவர்களையும் அறிந்து கொள்ளும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசு 'உம்பா' 'உம்பா' என்று தன் கன்றை அழைக்கின்றதென்பதை பிள்ளை விளங்கும். உயிரற்ற மரம், மலர்கள் கூட உயிருள்ளவை எனக் கருதி அவற்றோடு பேசும். இக்காலத்தில் மண்ணில் விளையாட விரும்பும் மணற்சோறு சமைத்தல், கோம்பிட்டுச்சமைத்தல் ஆகியவற்றுக்கு இடமளித்தல் நல்லது. சுத்தமான கடல் மண்; அல்லது ஆற்று மண் ஒரு குவியலை வீட்டு முற்றத்தின் ஒரு பகுதியில் குவியுங்கள். பிள்ளை விரும்பியவாறு மண்விளையாட இடமளியுங்கல், மண் விளையாடிய பின்னர் கைகளை சுத்தம் செய்விக்கவும். ஒரு பிள்ளைக்குத் தேவையான விதத்தில் காலைத் தூக்கி இடமளியுங்கள். இத்தகைய நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தினால் பிள்ளை முரண்டு பிடிக்கும். பிள்ளையின் உடல் வளர்ச்சி பாதிக்கப்படும். பிள்ளையின் வளர்ச்சிக்கு மகிழ்ச்சி அவசியமானதாகும். இச் செயல்களினூடாக பிள்ளைகள் மகிழ்ச்சியடைகிறார்கள். சூழலிலிருந்து பிள்ளை விவேகம் தொடர்பான அனுபவங்களைப் பெற்றுக்கொள்ளும். புல்லை நாட்டி அதன் மேல் பிள்ளை கால்களைத் தூக்கி வைத்து நடக்க விடுங்கள். மரம்செடி கொடிகள் பழங்கள், குருவிகள் ஆகியவற்றின் பெயர்களைச் சொல்லிக் கொடுத்து அவற்றை அறிந்து கொள்ளச் செய்யுங்கள். குழந்தைப் பருவத்தில் பிள்ளையின் இந்திரியங்களின் (புலனுறுப்புக்கள்) விருத்திக்கு செயற்பாடு அனுபவங்கள் அவசியமாகும். பிள்ளையின் கையிலகப்படும், கண்களுக்குப் புலப்படும், செவிகளுக்கு கேட்கும் எல்லாப் பொருட்களும் பிள்ளையின் புத்தி வளர்ச்சிக்கு உறுதுணையாகும்.

வீட்டையும் சுற்றாடலையும் பிள்ளையின் சுதந்திரமான வளர்ச்சிக்குத் தேவையானபடி தயாரிக்க வேண்டும். வீடு சுத்தமான காற்றைப் பெறுமாறு அமைக்க வேண்டும். அதிகாலையிலேயே கதவு யன்னல்களைத் திறந்து வைக்கவும். அதனால் அதிகாலையில் சுத்தமான காற்றைச் சுவாசிக்கும் சந்தர்ப்பமும் பிள்ளைகளுக்குக் கிடைக்கும். அநாவசியமாக கதவு யன்னல்கள் மூடப்படும் வகையில் திரையிடாதீர்கள். வீட்டினுள்ளே சுத்தமான காற்றும் சூரிய வெளிச்சமும் கிடைக்கும் வகையில் வீட்டை அமைத்துக் கொள்ளுங்கள். கடுமையான சூரிய ஒளியிலுருந்தும் பிள்ளைகளைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

பெற்றோர்கள் என்ற வகையில் நாம் வீட்டுச் சூழலை பிள்ளை விரும்பும் விதத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். பிள்ளையின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடல் வளர்ச்சிக்கும். உள வளர்ச்சிக்கும் உகந்த சூழல் பிள்ளை விரும்பக்கூடிய விதத்தில் இருக்க வேண்டியதுடன் கல்வித் துறையிலும் உகந்ததொரு சூழல் இருக்க வேண்டும். நகர்ப்புற உயர் வகுப்பைச் சேர்ந்த சில வீடுகளில் பிள்ளையின் உறங்கும் அறை கீழ்த்தட்டி லிருக்கும். பெற்றோரின் உறங்கலறை மேல்த் தட்டிலிருக்கும். பிள்ளை கூடுதலான நேரத்தைக் கழிப்பதும், உறங்குவதும் கூட வேலையாட்களுடனாகும். இரவு காலத்தில் பெற்றோர்கள் பிள்ளைகளுடன் நெருங்கியிருப்பது அவசியம். பிள்ளை பாதுகாப்பை எதிர் நோக்குகின்றது. இதனால் பெற்றோரின் உறங்கு அறைக்குச் சமீபமாக பிள்ளையின் உறங்கலைறையும் இருத்தல் மிக நன்று. இந்த வகையில் கிராமப்புற வீடுகளில் பிள்ளைகள் பெற்றோருக்கு சமீபமாக உறங்குதல் அவர்களது பாதுகாப்பு பற்றிய எண்ணக்கருவை உறுதிப்படுத்தக் காரணமாகிறது. ஏதேனுமொரு காரணத்தினால் தாய் பிள்ளைக்குப் பக்கத்தில் உறங்க முடியாவிட்டால் மிக நெருங்கிய உறவினரொருவர் பிள்ளையோடு உறங்குதல் பிள்ளைக்கு விரும்பத்தக்கதாகும்.

பௌதிகச் சூழல் விரும்பத்தக்கதாக இருக்க வேண்டுவது மட்டுமன்றி ஆன்மீகச் சூழலும் விரும்பத்தக்கதாக இருக்க வேண்டும். வீட்டுச் சமூகச் சூழலும் பிள்ளைக்கு உகந்ததாதல் வேண்டும். குடும்ப அங்கத்தவர்கள் நல்ல சொற்களைப் பேசுதல், நன்னடத்தை, முகமன் கூறுதல், ஒருவர் மற்றவருடன் அன்பாகப் பேசுதல், பொறுமை மற்றவர் கருத்தை மதித்தல் ஒத்துழைத்தல் என்பன மிக முக்கியமானவையாகும். மகிழ்ச்சி பிள்ளையின் புத்திவிருத்தியின் மீது கூடிய செல்வாக்கைச் செலுத்துகின்றது. வீட்டிலுள்ளவர்கள் அடிக்கடி சண்டை சச்சரவிலீடுபடுகின்றவர்களாயின் பிள்ளைகளின் நடத்தையும் அதனடிப்படையிலேயே அமையும்.

ஒரு கதையில் கசாப்புக் கடையில் வளர்நதகிளி வெட்டு, கொட்டு என்று கெட்ட பேச்சைப் பேசுவதற்கும் ஈவிரக்கமின்றி நடப்பதற்கும், பழகியதுடன், முனிவருடன் வளர்ந்த கிளி மிகவும் சாந்தமாக, பண்பட்ட சொற்களைப் பேசுவதற்கும் அன்பாக பழகவும் பழக்கப்பட்டிருந்தது என்றும் கூறக் கேட்டுள்ளோம். இதனடிப்படையில் பார்க்கும் போது ஒரு பிள்ளைக்கு சிறந்த சமூகச் சூழலைப் பெற்றுக் கொடுக்க பெற்றோர்களாகிய நாம் முயற்சிக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியவர்களைப் பின்பற்றுதல் பிள்ளைகளின் பழக்கமாகும். பெற்றோர்கள் சொல்லும் செய்யும் எல்லாவற்றையும் அவர்கள் பின்பற்றுகிறார்கள். வீட்டிலுள்ள வேலைக்காரர்களை விளிக்கின்ற போது நீ, எடு, போ, வா, தா, என்று பேசுவதைக் கேட்ட பிள்ளைகள் கொச்சைப் பேச்சினால் 'வா' 'போ' 'தா' என்று சொல்கின்ற போது அவற்றைக் கேட்டு தாய்மார்கள் ஆச்சரியப்படுகிறார்கள். சில தாய்மார்கள் கோபப்பட்டு பிள்ளையைத் தண்டிப்பார். குற்றவாளி பிள்ளையல்ல பெற்றோர்கள் என்பதை வலியுறுத்த வேண்டும். பிள்ளைகளின் முன்னால் நடத்தை, கதைத்தல், பேசுதல் என்பன மிகக் கவனமாகச் செய்தல் வேண்டும். பிள்ளை பெற்றோர்களிடமிருந்து ஏராளமானவற்றைக் கற்றுக் கொள்கின்றது.

சிறு வயதிலிருந்து பின்பற்றுவதனால் பழக்கப்படுகின்ற பழக்க வழக்கங்கள் பிள்ளை வளர்ந்தவனான பின்னரும் செல்வாக்குச் செலுத்துகின்றதென்பது தெரிகிறது. நல்ல பழக்கங்களைப் பழக்குவதும், அத்துடன் பின்பற்றுவதற்கு சந்தர்ப்பமளித்தலும் சிறு வயது தொடக்கம் ஆரம்பிக்கப்பட வேண்டும். உணவு உட்கொள்ள முன் சவர்க்காரமிட்டுக் கைகளை அலம்புதல், நித்திரைக்கு முன்னர் பல்துலக்கல், கால்களைக் கழுவிக் கொள்ளல் சுத்தமான ஆடை அணிதல், உணவு, தன்னைச் சுத்தமாக வைத்துக் கொள்ளல் என்பனவற்றைச் சிறுவயது முதல் பழக்க வேண்டும். பிள்ளைக்கு இந்நற்பழக்கங்களை பயிற்றுவித்தால் வளர்ந்தவரான பின்னரும் அதனைப் பின்பற்றுவர். உணவு மேசைப் பழக்க வழக்கங்களையும் சிறுவயது முதலே வழங்குதல் நல்லது. குடும்பத்திலுள்ள எல்லோரும் ஒரு வேளை உணவை (இரவு) யாவது ஒரே மேசையில் அமர்ந்து உட்கொள்வதாக இருந்தால் பிள்ளை உணவு உட்கொள்ளும் முறையை கற்றுக் கொள்ளும். சில கிராமங்களில் வீடுகளில் ஒரு பாயைப் விரித்து எல்லோரும் அதில் உட்கார்ந்து உணவு உட்கொள்வர். பெற்றோர்களுக்கும் பிள்ளைகளுக்குமிடையில் நல்ல உறவும் தொடர்பும் ஏற்படுவதற்கு இது காரணமாகின்றது. உள்ளங்கை முழுவதும் தோற்றிக் கொள்ளல், விரல்களை நக்குதல் என்பன பிழையென்பதை சிறு வயது தொடக்கம் சொல்லிக் கொடுத்தல் நன்று. அப்போது அவர்கள் வளர்ந்தோரான பின் இந்தப் பிழைகளைச் செய்யாதிருப்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவையான உணவொன்று கிடைத்தவுடன் பங்கிட்டுச் சாப்பிடுவதும் சிறு வயது தொடக்கம் பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டிய நற்பழக்கமாகும். பழங்கள், கீரைகள், மரக்கறிகள் ஆகியவற்றை மதித்தலும் சிறு வயது தொடக்கம் பழகவேண்டிய நல்ல அம்சங்மாகும். குடும்பத்திலுள்ள ஏனைய சகோதர சகோதரிகளுடன் பங்கிட்டுக் கொள்வதன் மூலம் சமூகத்தில் வாழ்வதற்குப் பழக்கப்படுகின்றார்கள். சுவையற்ற விதமாக உணவுகளைத் தயாரித்தல், பிள்ளைக்குத் தேவையான அளவைவிட அதிகமாக உணவை வழங்குதல் என்பன சில பெற்றோர்கள் செய்யும் தவறுகளாகும்.

சுயநல கருத்துக்களை பிள்ளைகளிடம் ஊட்டுபவர்களும் மூத்தவர்களேயாகும். சிறு வயதில் பிள்ளைகள் திறந்த மனதுடையவர்களாவர். வளர்ந்தோர் அவர்களிடம் பல உபாயங்களைப் பழக்குகிறார்கள். பிள்ளைகளுக்கு முன்னால் நடந்து கொள்ளும் முறை பற்றி நாம் கவனமாக இருக்க வேண்டும். தனக்குக் கிடைத்த ஒன்றைப் பங்கிட்டுச் சாப்பிடுதல் பங்கிட்டுப் பயன்படுத்துதல், ஒன்றாக விளையாடுதல் என்பவற்றைச் சிறு வயது முதல் பழக்க வேண்டும். வீட்டில் வளர்க்கும் செல்லப் பிராணிகள் மீது அன்பும் ஆதரவும் காட்டுவதனால் பிள்ளைகள் அன்புடையவர்களாகிறார்கள். செல்லப் பிராணிகளுக்கு உணவூட்டுதல், அவற்றைக் குளிப்பாட்டுதல், உண்ணிகளைக் களைந்து சுத்தப்படுத்துதல், அவைகள் மீது செல்லம் காட்டுதல் என்பன பிள்ளைகளின் உள்ளங்களில் இரக்க சிந்தையைத் தோற்றுவிக்கும்.

பிராணிகள் மீது காட்டும் அன்பினாலும் இரக்கத்தாலும் உள்ளம் பண்படுகின்றது. தடித்த, இறுக்கமான தன்மைகள் அற்றுப் போய் உள்ளத்தில் மென்மையான குணங்கள் ஏற்படும். செல்லப் பிராணிகளை வளர்க்கும் போது அவற்றின் சுகாதார நிலைமை பற்றியும் கவனம் செலுத்துங்கள். அவற்றைச் சுத்தமாக வைத்திருப்பதற்குத் தேவையான மருந்து முதலியவற்றைப் பெற்றுத் தருதலைப் பற்றியும் கவனம் செலுத்துங்கள்.

சுற்றயலிலுள்ள பிள்ளைகளுடன் விளையாடுதல் அவர்களுடன் பழங்களையும் இனிப்புக்களையும் பங்கிட்டுண்ணல் என்பவற்றின் மூலம் சகஜீவனம், ஒற்றுமை முதலிய குணங்கள் ஏற்படும். எட்டு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்னிரண்டு வயது மட்டத்தை அடையும் போது சமவயது நண்பர் குழாத்துடன் பழகுதல் ஒரு பிள்ளைக்குத் தேவை. அயலிலுள்ள பிள்ளைகளுடன் விளையாட இடமளிக்க வேண்டும். தனிமையில் வளரும் பிள்ளை சுயநல நோக்குடையதாக இருக்கும். அதனால் பிள்ளைக்கு சுற்றயலிலுள்ள பிள்ளைகளுடன் சேர்வதற்கு இடமளியுங்கள்.

சில பெற்றோர்கள் பிள்ளைகளின் வாழ்க்கையை வீடு அளவுக்கு மட்டும் கட்டுப்படுத்துவர். சிறு பிராயத்தில் பிள்ளைகளை எந்தவொரு விழாவுக்கோ வெளிப் பயணங்களுக்கோ உறவினர் நண்பர்களைப் பார்ப்பதற்கோ அழைத்துச் செல்லாமைக்குக் காரணம் தாம் அசௌகரியங்களுக்குள்ளாக நேரிடும் என்பதனாலாகும். பால் மறக்கும் பருவத்திலும் பிள்ளை நடக்கும் காலத்திலும் அவ்வாறே. குழந்தைப் பாடசாலைக்குச் செல்லும் வயதிலாயின் பிள்ளைகளைப் பயணங்களில் அழைத்துச் செல்வர். பாடசாலையிற் சேர்த்த பின்னர் படிக்கட்டும் என்று சொல்லி வீட்டில் விட்டுச் செல்வர். ஐந்தாம் ஆண்டு புலமைப் பரீட்சைக்குத் தோற்றும் காலம் ஒரு பிள்ளைக்கு மிகுந்த போட்டிக்குரியதாகும். இக்காலத்தில் பிள்ளைகளுக்கு புலமைப் பரீட்சை வகுப்புக்களுக்கு மேலதிகமாக ஒரு வாழ்க்கை இல்லை. அதன் பின் பதினொராம் ஆண்டு வரை ஒரே போட்டிதான். க.பொ.த.ப. (சா.த.) க்கும் க.பொ.த.ப. (உ.த.) பரீட்சைக்கும் இடையில் அகப்படும் மாணவர்கள் சமூகத்துடன் உறவாடும் சந்தர்ப்பத்தை மிகக் குறைவாகவே பெறுகிறார்கள். இதனால் இடைக்கிடையாயினும் மகிழ்ச்சிக்குரிய நிகழ்ச்சிகளுக்குப் பிளளைகளை அழைத்துச் செல்லுங்கள். ஒரு திருமண வைபவம் ஒரு விழா ஒரு பிறந்த தின வீடு, ஒரு சுந்தூரி போன்றவற்றில் பிள்ளைகளைப் பங்கு பற்றச செய்யுங்கள். கிறிஸ்தவ குடும்பங்களிலாயின் பௌதீஸ்மம் பெறும் தினத்தில் குடும்பத்திலுள்ள எல்லோரும் உறவினர் நண்பர்கள் ஒன்று சேருவர். விழாக்களுக்கும் பிள்ளைகளை அழைத்துச் செல்வதால் அவர்களது சமூக உறவு விரிவடைகின்றது. அப்போதுதான் சிறுவர்களுக்கு தமது பழக்க வழக்கங்களை அறிந்து கொள்ளும் சந்தர்ப்பம் ஏற்படுகின்றது.

கிராமப்புற மாணவர்களுக்கென நன்கமைந்த இயற்கைச்

UNIVERSITY OF PERADENIYA
15-12-1995
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழல் இருக்கின்றது. ஆறு, சிற்றாறு, ஓடை, மலை, வனம் மலைச்சரிவுகள் என்பன பிள்ளைகளின் அறிவையும் அனுபவத்தையும் வளர்க்கும். இவ்விடங்களைப் பிள்ளைகளை அழைத்துச் செல்லுங்கள். இயற்கைக் காட்சிகளிலிருந்து பெறக்கூடிய பயன்களை பெற்றுக் கொள்ள இடமளியுங்கள். நதி, குளம், ஆறுகளில் நீந்தி விளையாட அனுமதியுங்கள். வெள்ளாமை வெட்டும் போது வயலில் உழும் போது பாடப்படும் கவிகளைக் கேட்க விடுங்கள். காட்டில் வாழும் நரி, முயல், காட்டுப் பூனை, போன்ற மிருகங்களையும், கிளி, மைனா, காட்டுக்கோழி, ஆந்தை, குருவிகள் முதலியவற்றையும் இனங்காண இடமளியுங்கள். பெரியோர் பாதுகாப்புடன் அவற்றின் சத்தங்களைக் கேட்கவும், இனங்காணவும் சந்தர்ப்பமளிக்க வேண்டும்.

பெற்றோர் என்ற வகையில் எமது கலாசாரத்தைப் பாதுகாப்பதற்காக எமது பிள்ளைகளை சமூக நடவடிக்கைகள், சமய நடவடிக்கைகள் ஆகியவற்றில் பங்கு பற்றச் செய்வது எமது கடமையாகும். பன்சாலை, பள்ளி, கோவில் முதலிய வணக்கத் தலங்களுக்கு அவர்களை அழைத்துச் செல்ல வேண்டும். சமய விழாக்களில் பங்கு பற்றுதலும் முக்கியமாகும். சமய, கலாசார நடவடிக்கைகளில் பிள்ளைகளைப் பங்குபற்றுவித்தல் மிக முக்கியமானதாகும்.

பிள்ளைகளின் நன்மைக்காக வளர்ந்தோருடன் உரிய முறையில் பழகவிடுங்கள். பாட்டன், பாட்டி, முதலியோரது உறவு மிகவும் பயன் தருவதாகும். கிராமப்புறங்களில் பாட்டன் பாட்டி ஆகியோரிடமிருந்து கதைகள், விடுகதைகள், புதிர்கள், கிராமக் கவிதைகள் ஆகியவற்றைக் கற்றுக் கொள்ளும் சந்தர்ப்பமுள்ள பிள்ளைகள் இன்றும் இருக்கின்றார்கள். எமது வரலாற்றை நாம் இவர்களிடமிருந்தே கற்றுக் கொள்கிறோம். வீரக் கதைகளைச் சொல்லித் தருவோரும் இந்த பாட்டன், பாட்டிமார்களாகும். இந்த முதியோரது உறவு பிள்ளைகளின் உளவளர்ச்சிக்குப் பெரிதும் உதவுகிறது.

மூத்தோரை வணங்குதலும் கௌரவித்தலும் பிள்ளைகளுக்கு வீட்டுச் சூழலிலிருந்து பயிற்றுவிக்கப்பட வேண்டும். அது பாடசாலை மூலம் கற்றுக்கொள்ள வேண்டிய ஒரு பழக்கமல்ல. உணர்வோடு வணங்குதல் முக்கியமாகும். எமது சமூகத்திலிருந்து நற்பழக்கங்கள் தற்போது மறைந்து போய்க் கொண்டிருக்கின்றன. வணக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலுத்துவதற்குப் பதிலாக 'டடா பாய்' என்று சொல்ல பிள்ளைகள் பழக்கப்படுகிறார்கள். வணக்கத்துக்குப் பதிலாகக் கைகளை ஆட்டுவதற்குப் பழக்கும் தாய்மாரும் உள்ளனர். எமது பழைய சமூகத்தில் நிலவிய நற்பழக்கங்களை மரத்துக்குத் தோலும் தோலுக்கு மரமும் போன்று நமது பிள்ளைகளின் உள்ளத்தில் பதியச் செய்ய வேண்டும். இதனைச் செய்யக் கூடிய மிகச் சிறந்த இடம் பாடசாலையும் வீடுமேயாகும். எல்லாப் பிள்ளைகளினதும் முதல் பாடசாலை வீடாகும் என்பதை மறக்கக்கூடாது. கொஞ்சமாக பருவத்திலிருந்தே இரு கைகளையும் கூப்பி வணங்கப்பழக்குதல் சிறந்ததாகும். அது ஓர் இயந்திரமயமான வணக்கமாக அன்றி உணர்வோடு செய்யக்கூடிய ஒன்றாதல் முக்கியமாகும். முதியோரைக் கௌரவித்தல் சிறுவயது தொடக்கம் பழக்குதல் தற்காலத்தில் மிக முக்கியமாகும். முதியோர் இல்லங்களை அமைப்பதற்குப் பதிலாக இத்தகைய நற்குணங்களை பிள்ளைகளின் உள்ளங்களில் வளர்ப்பது மிக முக்கியமாகும்.

வீட்டுச் சூழலில் நடந்து கொள்ளக்கூடிய முன்மாதிரிகள் உண்டு. தகப்பன் புகை பிடிப்பவராக இருந்தால் தாய் கர்ப்பிணியாக இருக்கையிலேயே புகையை நுகர்வதால் பிறக்காத குழந்தையைக் கூட அது பாதிக்கின்றது. அது போன்ற பிள்ளைகளைக் கடைக்கனுப்பி புகைத்தற் பொருட்களை எடுப்பிக்கும் தந்தைமாரும் உள்ளனர். இதனால் பிள்ளைகளும் புகை பிடிக்கப் பழக்கப்படுகின்றார்கள். உலகம் முழுவதிலுமுள்ள வைத்தியர்களின் அபிப்பிராயம் புகைபிடித்தல் சுகாதாரத்துக்கு தீங்கு விளைவிக்கும் என்பதாகும். பிள்ளைகளின் நன்மையைக் கருதியாவது புகை பிடித்தலைக் கைவிடுவதற்குப் பெற்றோர் முயற்சிப்பது பொருத்தமாகும். மதுபானம் அருந்துவதையும் வீட்டுச் சூழலிலிருந்து தவிர்க்க வேண்டும். சில தந்தையர் மதுபானம் பாவிப்பதோடு சிறு பிள்ளைகளுக்கும் சுவைத்துப் பார்க்க கொடுப்பர். அந்தப் பிள்ளை பெரியவனாக வளர்ந்ததும் மதுபானத்துக்கே அடிமையாகிவிடு கின்றான். மதுபானம் அருந்தும் பழக்கமுடைய தந்தையர், பிள்ளைகளுக்கு முன்னால் அதனைத் தவிர்த்துக் கொள்ளலாம். மகிழ்ச்சிகரமான விருந்துகளின் போது மதுபானத்தை விருந்தோம்பும் போது ஏற்படும் பேச்சுக்களையும், நடத்தைகளையும், பிள்ளைகள் பின்பற்றுகிறார்கள் என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ந்தோர், கூடா ஒழுக்கங்களைத் தவிர்த்திருத்தல் வேண்டும். வீட்டிலே பொழுது போக்குக்காக காட்ஸ் விளையாடுகிறவர்கள் சில சமயங்களில் பணத்துக்கு பந்தயம் பிடிப்பார்கள். பிள்ளைகள் இயல்பாகவே சூதுக்கு பழக்கப்படுகிறார்கள். சில பெற்றோர் பிள்ளைகளைக் கொண்டே பந்தயத் தாள்களை எடுப்பிப்பர். பிள்ளையும் வழியில் பந்தயத் தாளை வாசித்துக் கொண்டு வருகிறான். இவ்வாறு அறியாமலே பிள்ளைகள் மதுபானம், சூது பந்தயம் பிடித்தல், புகைபிடித்தல் முதலியவற்றுக்கு பழக்கும் தந்தைமார் உள்ளனர். இந்தக் கெட்ட பழக்கங்களை வீட்டிலேயே பழகியுள்ளனர். இல்லாவிட்டால் சுற்றயலிலிருந்தாகும். பெற்றோர், மற்றும் வீட்டிலுள்ள சகோதர சகோதரிகளின் நடத்தைகளைச் சிறுவர்கள் பின்பற்றுவர்.

வீட்டுச் சூழல் பிள்ளையின் உடல் வளர்ச்சிக்குப் போலவே மன வளர்ச்சிக்கும் உகந்ததாதல் வேண்டும் பல புத்தகங்களைக் கொண்ட புத்தி விருத்திக்கு உகந்த சூழலில் வளரும் பிள்ளைக்கும் அவ்வாறில்லாத ஒரு சூழலில் வளரும் பிள்ளைக்குமிடையில் புத்திவிருத்தி மட்டத்தில் வித்தியாசமுண்டு. மொழி வளர்ச்சியைப் பொறுத்தவரையிலும் விசேடமாக நல்லதொரு சஊழலில் வளரும் பிள்ளைக்கும் அவ்வாறில்லாத ஒரு பிள்ளைக்குமிடையில் பெரும் வேறுபாடு ஏற்படலாம். கூடுதலான குடும்ப அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பத்திலுள்ள பிள்ளைகளின் மொழி வளர்ச்சி குறைந்த குடும்ப அங்கத்தவர்களைக் கொண்ட பிள்ளையின் மொழி வளர்ச்சியைவிடச் சிறந்ததாக இருக்கும். அங்கத்தவர்களுடன் அடிக்கடி பேசுவது மிக முக்கியமாகும்.

வீட்டுச் சூழல் பிள்ளையின் சிறந்த வளர்ச்சிக்கு உகப்பானதாக அமைதல் மிக முக்கியமாகும். மாசுறுதல் பற்றியும் எமது கவனம் செலுத்தப்படுதல் வேண்டும். தற்காலத்தில் பல வீடுகளில் வானொலிப் பெட்டி, தொலைக்காட்சி என்பன கூடுதலான சதத்துடன் போடப்படுகின்றன. அநாவசியமான முறையில் பயன்படுத்துவதால் ஒலி மாசுறுதல் ஏற்படுகின்றது. அதன் காரணமாக செவிடாதல், அரைகுறையாகச் செவிடாதல் தானும் ஏற்படலாம்.. சிறுவர்களினதும், குழந்தைகளினதும் செவிப்புலன்களை இவை பாரதூரமாகப் பாதிக்கின்றன. ஆகவே வானொலிக் கருவியைத் தேவைக்கதிகமாக சத்தமாக பாவித்தல் பொருத்தமற்றது. அத்தகைய கூடுதலான சப்தமுடைய இடங்களுக்கு குழந்தைகளை எடுத்துச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லக் கூடாது. வானொலியில் ஒலிபரபபாகும் நல்ல பாடல்களைக் கேட்க பிளாளைகளுக்கு இடமளிக்க வேண்டும்.

தொலைக்காட்சிக்கு அண்மையில் இருந்து கொண்டு சிறு பிள்ளையையும் இடுப்பில் வைத்தவாறு தொலைக்காட்சியைப் பார்க்கும் தாய்மாரும் உளர். இதனால் பிள்ளைகளின் பார்வை பாதிக்கப்படும். தொலைக் காட்சி பார்க்கையில் அதனருகே இருந்து கொண்டு பார்த்தல் கூடாது. தொடர்ச்சியாகப்பல மணித்தியாலங்கள் பார்ப்பதும் கூடாது. பிள்ளைகளின் கண்பார்வை பற்றியும் கவனம் செலுத்துதல் தகும். ஐக்கிய அமெரிக்கா போன்ற நாடுகளில் தொலைக்காட்சி பார்ப்பதால் தம் கண் பார்வைகளை பலவீனமடையச்செய்து கொண்டவர்களைப் பற்றிய செய்திகளைக் கேள்விப்படுகிறோம். சிறு வயதில் ஏற்படும் பழக்கங்களைத் தவிர்த்தல் கஷ்டமானதாகும். இதற்கு ஒரே நடவடிக்கை தொலைக்காட்சியைப் பார்ப்பதைக் குறைப்பதாகும். தேவையான நிகழ்ச்சிகளை மட்டும் பார்க்க அனுமதிக்க வேண்டும். ஐக்கிய அவெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் பல பிள்ளைகள் தம் பாடசாலை வேலைகளைப் புறக்கணித்துவிட்டு தொலைக்காட்சி பார்ப்பதாக அறிகிறோம். எமது நாட்டிலும் பிள்ளைகள் இந்நிலைமைக்குள்ளாகின்ற நாள் நெருங்கி வந்துகொண்டிருக்கிறதென தென்படுகின்றது. தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் பறறி பெற்றோருக்கு நல்ல விளக்கம் இருத்தல் வேண்டும். தொலைக்காட்சியும் இலங்கைப் பிள்ளைகளுக்குப் பொருத்தமான நிகழ்ச்சிகளை பிள்ளைகள் சார்பாகத் தயாரிக்க வேண்டும். வயது வந்தோருக்கு மட்டும் பொருத்தமான நிகழ்ச்சிகளை பிள்ளைகள் நித்திரை செய்தபின் ஒலிபரப்ப வேண்டும்.

பிள்ளைகள் சில கெட்ட பழக்கங்களை சில வயதுவந்தவர் களிடமிருந்து பெற்றுக் கொள்கின்றனர். நகம் கடித்தல், கால்களை ஆட்டுதல், தனிக்காலில் நிற்றல், முதலியன வயது வந்தவர்களினூடாக பழகிக் கொள்ளும் கூடா ஒழுக்கங்களாகும்.

அடுத்தவர் பொருள்களை அனுமதியின்றி எடுத்தல், மலர், மலர்ச்செடி, பழங்கள் ஆகியவற்றை சொல்லாது எடுத்தல், பறித்துக் கொண்டு ஓடுதல், களவெடுத்தல், பெறுமதியான பொருள்களை களவெடுத்தல் என்பன பெரும்பாலும் வளர்ந்தோரூடாக பெறும் துர்ப்பழக்கங்களாகும். மற்றவர்களுடைய பொருள்களை மதிப்பதுடன் பாதுகாத்தலும் சிறுவயது முதல் பழக்க வேண்டிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நற்பழக்கங்களாகும். கூடாத முறையில் கேலி செய்தல், விளையாட்டாக கூடாதவற்றைக் கதைத்தல் ஆகியவற்றை சிறுவர்களுக்கு முன்னால் செய்யக்கூடாது. நல்லது கெட்டது என்பதையறியாத பிள்ளைகள் இவற்றைப் பின்பற்றுகிறார்கள். சிறு வயதில் ஏற்படுத்திக் கொள்ளும் பழக்கங்களை பெரியவரான பின் நீக்குதல் கஷ்டமாகும். ஆகவே பெற்றோர் முன்மாதிரியாக நடத்தல் வேண்டும். எச்சரிக்கையை விட முன்மாதிரி சிறந்ததாகும்.

சூழல் மூலம் பிள்ளைகள் ஆரோக்கியமான உள்ளங்களைப் பெற்றுக் கொள்ள முடியும். வீட்டுக்கு அருகிலுள்ள வயல்வெளி, தோட்டம், திறந்த வெளி, விளையாட்டு மைதானம், கடற்கரை, வீட்டுத் தோட்டம், பழத்தோட்டம், மரக்கறித் தோட்டம், ஆகிய இடங்களுக்கு பிள்ளைகளை அழைத்துச் செல்லுங்கள். அண்மையிலுள்ள இடமாயின் நடக்கும் காலத்தில் நடந்தே அழைத்துச் செல்லுங்கள். சூழலை அண்டிய இடங்களைப் பற்றிய அனுபவங்களைப் பெற்றுக் கொடுங்கள். அதன் மூலம் பிள்ளைக்கு ஒரு விநோதமும் மகிழ்ச்சியும் ஏற்படுகின்றது. கடற்கரைக்குச் செல்லும் பிள்ளை மண்ணோடும் நீரோடும் விளையாடுகின்றது. படகு, கப்பல், மீன்வலை, வள்ளம், மீன் பிடித்தல், மீனவர் வீடுகள் ஆகியவற்றைக் காண்பர். அவனது அனுபவம் இதனால் விரிவடைகின்றது. பிள்ளைக்குச் சுதந்திரமாக நடக்கவும் விளையாடவும் இடமளியுங்கள். இதற்கு இடையில் பாதுகாப்பிலும் கவனமாயிருங்கள். சூழல் மூலம் பிள்ளை விரிவான அனுபவத்தைப் பெற்றுக் கொள்கிறது.

வீட்டினுள்ளே போன்று வீட்டுக்கு வெளியிலும் பிள்ளை கேட்கும் வினாக்களுக்கு விடையளியுங்கள். அவர்களது வளர்ச்சிக்கு அது அத்தியாவசியமானதாகும். வீட்டினுள்ளேயிருக்கும் பொருள்கள், சூழல், மூலம் பல்வேறு அமிசங்களைப் பற்றிக் கவனம் செலுத்தும் பிள்ளை கேட்கும் வினாக்களுக்கு விடையளிக்காது விலகிச் செல்லும் பெற்றோர்கள் உளர். பிள்ளையின் புத்தியை சிந்தனையைப் பக்குவப்படுத்துவதற்கு அவன் கேட்கும் வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். விடையளிப்பதன் மூலம் மென்மேலும் வினாக்களைக் கேட்க பிள்ளை தூண்டப்படும்.

வீட்டையும், சூழலையும் விளங்கிக் கொள்வதற்குப் பிள்ளையை உற்சாகப்படுத்துங்கள். வளர்ச்சியடைந்த நாடுகளில் பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலவற்றையும் அவதானிக்கிறார்கள். அதன் மூலம் பலவற்றைக் கற்றுக் கொள்கிறார்கள். பாடசாலை விடுமுறைக் காலங்களில் கிராம ஓடைகள், ஆறுகள் குளங்களில் குளித்தும், காடுகளில் தேடியும், மரங்களில் ஏறியும் பல்வேறு அனுபவங்களைப் பெறும் பிள்ளைகள் நம் நாட்டிலும் உள்ளனர். வீட்டினுள் ஒரே விதமான வாழ்க்கையை கடத்துபவர்கள் எதிலும் ஆர்வம் செலுத்தமாட்டார்கள். பெரும் பாலும் அத்தகையவர்கள் விரக்தியோடும், கவலையோடும் வாழ்கிறார்கள்.

அண்மைச் சுற்றாடல் பற்றிய பிள்ளையின் கண்டுபிடிக்கும் ஆற்றல்களை வளர இடமளியுங்கள், விசாரித்தறிவதற்கும், கண்டுபிடிப்பதற்கும் இடமளியுங்கள். சுற்றாடலைப் பற்றிய உண்மைகளை ஆராய்ந்து விளங்கிக் கொள்வதற்கு இடமளியுங்கள். நேரடியான அனுபவத்தைப் பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பத்தை வழங்குங்கள். பெற்றோர்கள் என்ற வகையில் நாம் பிள்ளைகளுக்குச் செய்ய வேண்டிய கடமை பார்த்து அவதானித்து விளங்கிக் கொள்ள இடமளித்தலாகும்.

சூழலை அலங்காரமாக வைத்துக் கொள்ளச் சிறுவயது தொடக்கம் பிள்ளைகளைப் பழக்க வேண்டும். வீட்டினுள்ளே மட்டுமன்றி வீட்டுத் தோட்டத்தையும் அழகாக வைத்திருக்க வேண்டும் எனும் எண்ணத்தை அவர்கள் உள்ளத்தில் ஏற்படுத்துதல் நன்று. குப்பை கூழங்களை கண்ட நின்ற இடங்களில் போடாது உரிய பாத்திரத்தில் மட்டுமே போடப்பழக்க வேண்டும். வீட்டிலும் தோட்டத்திலும் எல்லாப் பொருட்களையும் அவ்வவ்விடங்களில் வைக்கப் பழக்க வேண்டும். கூட்டுமாறு, தும்புக்கட்டை, மண்வெட்டி, துடைப்பம் முதலியவற்றை உரிய இடத்தில் வைக்கப் பழக்குங்கள். தந்தையின் பொருள்கள், தாயாரின் பொருள்கள், மாமியின் பொருள்கள் முதலியன ஒவ்வொன்றையும் உரிய இடத்தில் பாதுகாப்பாக வைக்க வேண்டும். தனது விளையாட்டுப் பொருள்களைப்போல மற்றவர்களது உபகரணங்களையும் மதிக்க வேண்டும். இந்தக் குணங்களை சிறு வயது தொடக்கம் பிள்ளைகளின மனதில் துளிர்க்கச் செய்யத் தூண்டுதல் வேண்டும். (சூழலிலிருந்து கிடைக்கும் பல்வேறு இயற்கை வளங்களைத் தன்திறமைக்கேற்ப பல்வேறு விதமாக பயன்படுத்துவதன் மூலம் சூழலை மாற்றியமைக்கும் திறனைப் பிள்ளை பெற்றுள்ளது. சில மரங்களின் காய்கறிகளினால் குருவிகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பறக்கவிடுதல், குரும்பட்டி மெசின், காய் வண்டு, ரப்பர் விதை மாலை, பப்பாசி மரக்குழாயைத் தண்டினால் சவர்க்காரக் குமிழ் அனுப்புதல், பட்டம் விடுதல், கடதாசித்தோணி செய்து தண்ணீரில் மிதக்க விடுதல், வாழைத்தண்டினால் வள்ளங்களைச் செய்து வைத்தல், வெட்ட வெளியில் பந்து விளையாடுதல், பறவை இறகுகளைத் திரட்டுதல், முதலியன அத்தகைய சில விளையாட்டுக்களாகும்.

கடற்கரையில் சிப்பி ஓடுகளைச் சேகரித்து அவற்றினால் பல்வேறு பொருள்களைச் செய்தல் சிறந்த ஆக்க வேலைப்பாடுகளாகும். சூழலிலிருந்து இத்தகைய ஆக்கங்களைச் செய்ய முற்படும் பிள்ளைகள் மூத்தவர்கள் என்ற வகையில் நாம் ஊக்குவிக்க வேண்டும்.

பிள்ளைக்கு அனுபவங்களைப் பெற்றுக் கொள்ளக்கூடிய விதத்தில் வீட்டுச் சூழலை அமைத்தல் பற்றி பெற்றோர் ஊற்சாகங்கொள்வார்களானால் தாய்மாரின் கடமை மிக இலகுவாகிவிடும். ஓய்வான நேரங்களில் சூழலைப் பார்க்கப் பிள்ளையை அழைத்துச் செல்தல், தந்தையின் கடமையாகும். பிள்ளை கேட்கும் வினாக்களுக்கு விடைகளையும் அவரால் வழங்க முடியும். வீட்டைப் பற்றியும் சூழலைப் பற்றியும் தந்தை காட்டும் முன்மாதிரி சிறந்த முன்மாதிரியாக அமையும்.

மனித வாழ்க்கைக்கு சூழல் அத்தியாவசியமானதாகும். அது மனிதனுக்கு நன்மை பயப்பது. அது பிள்ளைக்கும் மிகவும் நல்லது. அதை அழகுபடுத்துவதும், பாதுகாப்பதும் வளர்ந்தோரின் கடமையாகும். சிறு பிள்ளைக்கு உகந்த விதத்தில் சூழலை அமைத்துக் கொடுப்பதில் வளர்ந்தோராகிய நாம் முன்னைவிட ஆர்வம் காட்ட வேண்டும்.

UNIVERSITY OF PERADENIYA LIBRARY 15-12-1995

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1 5 -12- 1995

பெற்றோர் மனப்பாங்கு

எமது மாபெரும் செல்வம் பிள்ளைகளாகும். அதனை எல்லாப் பெற்றோர்களும் தமது பிள்ளைகளின் எதிர்காலத்தைப் பற்றி பெரும் எதிர்பார்ப்புக்களைக் கொண்டுள்ளனர். இந்த ஆசைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காகப் பல்வேறு நடவடிக்கைகளை எடுக்கின்றனர். இங்கு பெற்றோர் மனப்பாங்கு முக்கியமானதாகும்.

கல்வி தொடர்பாக பெற்றோரின் மனப்பாங்கு பெரும்பாலும் வரவேற்கத்தக்கவையாகும். பெரும்பாலான பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு முறையான கல்வியைப் பெற்றுக்கொடுப்பது முக்கியம் என்பதை உணர்ந்துள்ளனர் பிள்ளை பிறக்கு முன்னரே பிள்ளையின் கல்வியைப் பற்றிக் கதைக்கின்ற பெற்றோர்கள் உளர். எனினும் கற்றல் என்றால் என்ன என்பதைப் பற்றி விளங்கிக் கொண்ட பெற்றோர்கள் எத்தனை பேர்? பெற்றோரிடமிருந்தும், குடும்பத்தவர்களிடமிருந்தும் சுற்றத்தவர்களிடமிருந்தும், பொருள்கள் அல்லது மிருகங்கள் மூலமும் பெறும் அனுபவங்கள் கூட கல்வியுடன் தொடர்புபட்டவையே. பிள்ளை வாழ்வதற்குத் தேவையான அறிவைப் பெரும்பாலும் இதன் மூலம் பெறுவர். பிள்ளைக்குத் தேவையான பாடசாலை மூலமும், வழங்கப்படும் நூல்கள் மூலமும் வழங்கப்படும் முறையான அறிவுமட்டுமல்ல. கற்றல் என்பதன் மூலம் அதைவிட விரிவான கல்வியை எதிர்பார்க்க வேண்டும். அனுபவத்தினாலும், சமூகத்தினூடாகவும் பெறப்படும் கல்வியே மிகச் சிறந்த கல்வியாகும்.

இன்று பெரும்பாலான பெற்றோர்கள் பாடசாலை பற்றி உற்சாகம் காட்டுவதற்குக் காரணம் கற்றல் பாடசாலை மூலம் மட்டுமே நடைபெறுகின்றதென்று கருதுவதாகும்.

இன்று கூடுதலான பெற்றோர்கள் பிள்ளையைப் பாடசாலைக்கு அனுப்புவதற்கு மேலாக பொருத்தமான பாடசாலை எது என்று விசாரிக்கிறார்கள். பெரும்பாலானோர் கிட்டிய பாடசாலையை விட தூரத்திலுள்ள பாடசாலை சிறந்தது என்று எண்ணுகிறார்கள். பிள்ளை பிறந்த நாளிலிருந்து பாடசாலையில் சேர்க்கும் நாள் வரை பெரும் போட்டிக்கு முகங்கொடுக்கின்றது. பிரசித்தமான பாடசாலையொன்றுக்கு பிள்ளையைச் சேர்ப்பதற்காக பெறறோர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வேறு பிரயத்தனங்களை எடுக்கின்றார்கள். பிரசித்த பாடசாலைக்குப் பக்கத்தில் குடியிருப்பேன் என்பதைக் காட்டுவதற்கு தற்காலிக வதிவிடம் பற்றிய ஆவணங்களைக் காட்டுகிறார்கள்.

சிறு பிள்ளைகள் பக்கத்திலுள்ள பாடசாலைக்குச் செல்வதால் நன்மையடைகிறது. பிள்ளை உடல், உள ரீதியாக உளைச்சலுக்குள்ளாகத் தேவையில்லை. தூரப் பாடசாலையை விட கிட்டிய பாடசாலை சிறந்தது. சிலர் பிரசித்த பாடசாலைக்குப் பக்கத்தில் குடியேறுவர். அண்மையிலுள்ள வீட்டை வாடகைக்கு எடுப்பர். சில வேளை குத்தகைக்கு எடுப்பர். நிரந்தர வதிவிடத்தை உறுதிப்படுத்துவதற்காக ஆவணங்களைத் தயாரித்துக் கொள்வர். கிட்டிய பாடசாலைக்குச் செல்வதால் பிள்ளையின் உடல் ஆரோக்கியமும் உள ஆரோக்கியமும் பாதுகாக்கப்படுவதற்கு காரணமாகிறது. சமூக அந்தஸ்தைக் கருதிச் சிலர் பெரிய பிரசித்த பாடசாலையிற் பிள்ளைகளைச் சேர்ப்பர்.. கிட்டிய பாடசாலைக்குச் செல்வதால் பல நன்மைகள் உண்டு. அவற்றுள் பிரதானமானது பிள்ளையின் உடல் உள முன்னேற்றத்துக்கு உதவுவதாகும்.

சீனாவில் பெற்றோர்கள் தம் பிள்ளைகளைப் பாடசாலையில் சேர்க்கும் போது கிட்டிய பாடசாலையைத் தெரிவர். தூரப் பாடசாலைக்குச் செல்கையில் பிள்ளை களைத்துப் போவதால் பிள்ளையின் இயல்பான திறன்களை வளர்த்துக்கொள்ள சந்தர்ப்பம் கிட்டுவதில்லை. களைப்பு காரணமாக பிள்ளையில் கல்வி நடவடிக்கைகள் கூட பாதிக்கப்பட நேரிடும் சந்தர்ப்பங்களுண்டு. பொருத்தமற்ற சமூக நிலைமைக்குள்ளாவதாலும் சில மாணவருக்கு பாடசாலைக்கு ஏற்றவாறு இயைபுபடுத்திக் கொள்வது கஷ்டமாகும்.

பாடசாலை சமூகத்தின் ஓர் உப அலகாகும். சில பாடசாலைகளின் பிள்ளைகள் நல்லவர்கள். மற்றொரு பாடசாலையின் பிள்ளைகள் கூடாதவர்கள். அந்தப் பாடசாலைப் பிள்ளைகளின் பெறுபேறு நன்று என்ற கருத்து சில பெற்றோர்களிடம் உண்டு. பாடசாலை சமூகத்திலிருந்து தோன்றியதொன்றாகும். ஆகவே குறிப்பிட்ட பாடசாலை நல்லது என்றும் மற்றொன்று கூடாதது என்றும்,, எனது பிள்ளை நல்லவன் என்றும் கருத்துக்களை உருவாக்கிக் கொள்வது தவறானதாகும். சில ஏழைப் பிள்ளைகளிடம் மிகச் சிறந்த விழுமியங்கள் உண்டு. பொறுமை. கிடைத்ததொரு பொருளைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகிர்ந்து கொள்ளுதல் ஒழுக்கம் கீழ்ப்படிதல், கிடைத்ததைக் கொண்டு திருப்தியடைதல் முதலிய நல்ல பண்புகள் கிராமப்புற ஏழைப்பிள்ளைகளிடம் பெரும் பாலும் காணக்கிடைப்பதாகும். நகர்ப்புறங்களில் சந்தடிமிக்க சுற்றாடல் காரணமாகவும், போட்டிப் பொருளாதாரப் பாங்கு காரணமாகவும் பெரும்பாலும் பிள்ளைகள் பெருமளவுக்கு அச்சூழலுடன் இணைந்த பழக்க வழக்கங்களை யுடையவர்களாக இருப்பர்.

சில பெற்றோர் நல்ல பிரமாண்டமான கட்டடங்களைக் கொண்ட கம்பீரத் தோற்றமுடைய பாடசாலைகளில் பிள்ளைகளைச் சேர்க்க முற்படுவர். வெளியலங்காரங்களான விளையாட்டரங்கு, விஞ்ஞான ஆய்வுகூடம் ஆகியவற்றுக்கேற்ப பாடசாலையை மதிப்பிடுவது தவறாகும். சிறிய பாடசாலையாயினும் நல்ல பண்புகளைப் பயிற்றுவிக்கின்ற இடமாக அது இருந்தால் அதுவே இன்றைய சமுதாயத்துக்கு மிக உகந்ததாகும். கூடுதலான பிரசித்தமில்லா விட்டாலும் நல்ல பாடசாலையென்று சொல்வதற்கு அப்பாடசாலை நல்ல பிரசைகளை உருவாக்க வேண்டும். சிலர் பாடசாலைகளைத் தெரிவது கிறிக்கட் விளையாட்டுக்கு ஏற்பவாகும். அல்லது பரீட்சைப் பெறுபேறுகளினடிப்படையிலாகும். நாட்டுக்கு நல்ல பிரசைகளை உருவாக்குதல் என்பதற்கு ஏற்பவன்று.

சில பெற்றோர்கள் ஆசிரியர்களை அநாவசியமாக விமர்சிப்பர். ஆசிரியர்கள் பிள்ளைகளை நல்வழியில் இட்டுச் செல்வதற்காகவே அவர்களைத் தண்டிப்பர். பிள்ளைகள் மீது ஆசிரியர்கள் காட்டும் கவனம் அன்பு, ஆதரவு, இரக்கம் அளவிறந்ததாகும். எனினும் சில பெற்றோர்கள் இதனைப் பொருட்டாக கருதுகிறார்களில்லை. ஆசிரியர்களுடைய பெறுமதியைக் குறைமதிப்புச் செய்கிறார்கள். பெற்றோர்களுக்கும் ஆசிரியர்களுக்குமிடையிலான தொடர்பு மிக முக்கியமானதாகும். அத்தொடர்பு அன்னியோன்னியமாக விருந்தால் பிள்ளைகளின் பிரச்சினைகளைப் பற்றி கலந்துரையாடுதல் இலகுவாக அமையும். வீட்டுக்கும் பாடசாலைக்குமிடையிலான தொடர்பு மாணவர்களின் நன்மைகளுக்காக அத்தியாவசியமானவையாகும். பல சந்தர்ப்பங்களில் பெற்றோர்களுக்கும் பிள்ளைகளுக்குமிடையிலான பிரச்சினைகள் பற்றிப் பாடசாலை ஆசிரியர்களுக்குத் தெரியாது. வகுப்பறையில் பாடத்தில் கவனம் செலுத்தாத மாணவர்களுக்கு வீட்டில் பொருளாதாரப் பிரச்சினை பெற்றோருக்கிடையிலான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோதல் அல்லது இது போன்ற வேறு பிரச்சினைகள் இருக்கக் கூடும். இதனால் பெற்றொருக்கும், ஆசிரியர்களுக்குமிடையில் அன்னியோன்னியத் தொடர்பு இருத்தல் மிக முக்கியமாகும். பாடசாலை பிள்ளைகளிடமிருந்து எதிர்பார்க்கின்றவற்றைப் பற்றிய விளக்கம் பெற்றோர்களிடமும் இருக்க வேண்டியது அவசியமாகும். பிள்ளைகள் பாடசாலையில் நடந்து கொள்ளும் முறை, கற்கும் முறை ஆகியனபற்றியும் ஆசிரியர்களிடமும் விசாரித்துப் பார்க்க வேண்டும். பாடசாலைப் பாடவிதானம் பற்றி பெற்றோர் காட்டும் மனப்பாங்கும் முக்கியமானதாகும்.

பிள்ளைக்குப் பாட்டும் நடிப்பும் தேவையில்லை. எனது பிள்ளைக்கு கொஞ்சம் ஆங்கிலம் படிப்பிக்கத்தான் தேவை.

எனக்கு எனது மகளை கிறிக்கட் குழுவில் எப்படியாவது சேர்த்துக் கொள்ள வேண்டும். "என்னால் முடியாமற் போனதை எனது மகனுக்காவது பெற்றுக் கொடுப்பது எனது ஆசை"

சிறு பராயத்தில் பிள்ளைகள் சங்கீதத்தையும், நடனத்தையும் இரசிப்பர். சிலமாத வயதுடைய பிள்ளைகள் கூட சங்கீதத்துக்கு செவிமடுப்பர். எட்டு பத்து மாதங்களில் கை, கால்களை அங்கும் இங்குமாக அசைத்து நடனமாடுவர். சிறு பராயத்தில் சங்கீதம் நடனம் முதலிய அழகியற் கலைகள் மீது அவர்களை ஈடுபடுத்துவது பெற்றோர்களின் கடமையாகும். மன வளர்ச்சிக்கு சங்கீதம் தேவை. ஆன்மீக ஒழுக்கத்துக்கு சங்கீதம் மிக உதவுகின்றது. நடனமும் உடலாரோக்கியத்துக்குப் போலவே உளப் பக்குவத்துக்கும் உதவுகின்றது. சித்திரம் வரையும் ஆற்றல் சிறுவர்களுக்கு இயல்பாகவே உண்டு. கரிக்கட்டியொன்று ஒரு பென்சில், ஒரு வெண்கட்டி ஆகியவற்றை எடுத்து எல்லாவிடங்களிலும் சித்திரம் வரையும் பிள்ளைகளை நாம் பார்த்திருக்கிறோம். உருவங்களை வரைவதற்கு நாம் உதவியாக இருக்க வேண்டும்.

"ஹ, ஹா சுவர்களில் கீற வேண்டாம், நிலத்தில் கீற வேண்டாம்" என்று மட்டுப்படுத்துவதை விட நாம் கீறுவதற்கு ஒரு பலகையை (கரும்பலகையாகவே இருக்க வேண்டியதில்லை) பாதுகாப்புள்ளதாக அமைத்துக் கொடுத்தல் ஆகும். அப்போது பிள்ளைகள் சுவர்களில் அல்லது நிலத்தில் கீறமாட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன் பாடசாலைப்பருவம் ஆகின்ற போது பிள்ளைகளுக்குச் சித்திரம் வரைவதற்கு கடதாசி தாள்கள், வெண்கட்டி, வர்ணப்பெட்டி, ஆகியவற்றை வழங்க வேண்டும். அப்போது பிள்ளைகள் தமக்கு விரும்பியவாறு சுதந்திரமாக வரைவார்கள். மேலும் வெவ்வேறு உருவங்களை வரைவதற்கும் வசதிகளைச் செய்து கொடுக்கவும். அவர்களுடைய சித்திரங்களைப் பிழை திருத்தம் செய்வதன் மூலம் அவர்களது ஆக்கத்திறனை அழித்துவிட வேண்டாம். இதற்கென பணங்கொடுத்து பொருட்களை வாங்க வேண்டியதில்லை. ஒரு கிணறு அல்லது குழி தோண்டிய இடத்திலிருந்து பெற்ற களிமண், வெண்களியாயினும் நன்று. பிள்ளைகள், களிமண் ஆகியவற்றை தண்ணீரில் குழைத்து விளையாட விரும்பிகிறார்கள். அதற்கு அவர்களுக்கு இடமளித்து சந்தர்ப்பத்தை உருவாக்கிக் கொடுங்கள். பெற்றோர்களாகிய நாம் பிளளைகளின் சமூகத் திறன்கள் யாவை என்பதை இனமறிந்து அவற்றை விருத்தி செய்ய வழிகாட்ட வேண்டும். கூடுதலான பணத்தைச் செலவுசெய்து பிரபல்யமான சித்திர வகுப்புகள் நடன வகுப்புகள், ஆகியவற்றுக்கு அனுப்பத் தேவையில்லை. உலகத்தில் தலை சிறந்த சங்கீதக் கலைஞர்களும், சித்திரக் கலைஞர்களுளும் அத்தகைய வகுப்புகளுக்குச் சென்று தான் பிரசித்தி பெற்றார்கள் எந்றில்லை. சுற்றாடலிலிருந்து பெற்றுக்கொண்ட பலவிதமான பொருள்களும், வீட்டில் வழங்கப்படும் உற்சாகமும் பிள்ளைகளின் இயல்பான திறன்களை வளர்க்க மிக முக்கியமானவையாகும்.

பிள்ளைகளுக்கு நண்பர்கள் தேவை. சிறு குழந்தைகள் கூட வளர்ந்தவர்களை விட சமவயதுக் குழந்தைகளைக் கண்டால் அவர்களுடன் சிரிப்பார்கள். பலவிதமாக சத்தமிட்டுக் கதைப்பார்கள். இரண்டரை மூன்று வயதாகின்ற போது அயல்வீட்டுப் பிள்ளைகளுடன் சேர்வார்கள். ஒழித்து விளையாடுதல், ஆடு பிடித்தல் முதலிய விளையாட்டுக்களில் ஈடுபடுவர். ஐந்து, ஆறு வயதாகின்ற போது பந்தயம் பிடிப்பர். கள்ளனும்-பொலிஸ்காரனும் விளையாடுவார்கள். கிராமங்களிலாயினும், நகரங்களிலாயினும் பிள்ளைகள் சம வயதுப் பிள்ளைகளுடன் சேர்ந்து விளையாடுவதை நாம் காண்கிறோம். சில பெற்றோர்கள் தமது பிள்ளைகள் கெட்டுப் போவார்கள் என்று சமவயதுப் பிள்ளைகளுடன் சேர்வதைத் தடுக்கிறார்கள். பிள்ளை சமூக இணக்கமாதல் வேண்டும். நாம் வாழும் சமூகத்தில் ஒருவராக வாழ வேண்டுமாயின் சிறு வயது தொடக்கம் சமூகத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனையவர்களுடன் சந்தோசமாக வாழப் படித்துக் கொள்ள வேண்டும். அ.யலிலுள்ள பிள்ளைகளுடன் சேர்ந்து விளையாடும்போது விழிப்பாயிருத்தல் வேண்டும் சில சமயங்களில் அப்பிள்ளைகளிடமிருந்து கூடாத பழக்க வழக்கங்களைக் கற்றுக் கொள்கிறார்களா என்பதைப் பற்றி நாம் கவனமாயிருத்தல் வேண்டும். அயலில் வாழ்கின்ற எல்லாப் ப்ள்ளைகளும் கெட்டவர்களென நினைக்காதீர்கள். உங்களது பிள்ளையைப் போன்ற வேறு நல்ல பிள்ளைகளும் இருக்கிறார்கள்.

வீடு வாசல்கள் எவ்வளவு சிறிதாக இருந்தாலும் அவற்றைச் சுத்த மாக வைத்திருக்க எல்லாப் பெற்றோர்களும் விரும்புகிறார்கள். ஒழுங்கையும் அழகையும் அளவுக்கதிகமாகப் பேணும் பெற்றோர்கல் சிறு பிள்ளைகளுக்கு வீட்டில் சந்தோஷமாக வாழ்வதற்குள்ள சந்தர்ப்பத்தை இல்லாமற் செய்கின்ற நிலைமைகளும் உண்டு. சுதந்திரமாக வீட்டில் ஓடியாடி விளையாடுவதற்கு, கதிரையின் மேல் ஏறுவதற்கு, விளையாட்டுப் பொருள்களை அங்குமிங்கும் கொண்டு போவதற்கு இடமளிக்கப்படாத போது பிள்ளைக்கு வீடு ஓர் இடைஞ்சலாகிறது. பிள்ளைக்குப் பேசுவதற்கு, பாடுவதற்கு, சத்தமிடுவதர்கு, தடுமாறுவதற்கு வீட்டுச் சூழலில் இடமிருக்க வேண்டும். சிறு பிள்ளையின் கையினால் தண்ணிர் கொஞ்சம் தவறுவதலாக நிலத்தில் சிந்தப்பட்டாலும் பிள்ளையைக் தண்டிக்கும் பெற்றோரும் உளர். வளர்ந்தவர்களுக்கு வீட்டை ஒழுங்காக வைத்துக் கொள்வது முக்கியம். எனினும் பிள்ளைக்கு பிள்ளையின் கண்களால் பார்க்கும் போது சுதந்திரம் முக்கியம். அவர்களுக்கு சுதந்திரமாக வாழக்கூடிய சூழல் இருந்தால் மட்டுமே வீடு பெறுமதிமிக்க ஓரிடமாகத் தோன்றும். வீட்டை ஒழுங்கமைப்பது வளர்ந்தோருடைய தேவையின் படி மட்டுமேயல்ல என்பதை நினைவில் கொள்ளுங்கள். பிள்ளைகளுக்காகவே வீடு.

தோட்டத்தில் ஒரு பூச்சாடியிலிருந்து ஒரு பூவைப் பறித்ததற்காக பிள்ளைக்கு அடிக்கின்ற போது அந்தப் பிள்ளையிடம் காணப்படும் ஆசை, ஆர்வம் காரணமாகத்தான் அவ்வாறு செய்ததென்பதை அறியமாட்டோம். ஒரு மலரின் நிறம், மணம், இதழ் ஆகிவற்றை பார்க்கும் ஆசை காரணணாக பிடுங்கியிருக்கக்கூடும். தாய் அல்லது தந்தையுடைய அறிவீனம் காரணமாக பிள்ளை அநாவசியமாகத் தண்டனை பெறுகிறது. சிறுவர் பாடசாலை சம வயதுப் பிள்ளைகள் ஒந்ரு சேரும் இடமாகும். ஆண் பெண் வேருபாட்டை அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருதுவதில்லை. இவ்வாறு சமவயதுப் பிள்ளைகள் ஒன்று சேர்வதால் ஒற்றுமையாக வேலை செய்யும் கற்றுக் கொள்கிறார்கள். ஆம், பெண் என்ற அடிப்படையில் நண்பர்களைத் தெரிவு செய்து கொடுக்க முற்படுதலும் அவ்வளவு பொருத்தமானதன்று.

பாடசாலைக்குச் செல்லும் வயதில் சம வயதுப் பிள்ளைகளுடன் விளையாடுவது மட்டுமல்ல, பாடுதல் நாடகம் நடாத்தல், கூட்டாக விளையாட்டுக்களில் ஈடுபடல் முதலிய பல வேளைகளில் ஈடுபடுவர். சமயபாட வகுப்பு, ஞாயிறு பாடசாலை முதலியனவும் பிள்ளைகள் ஒற்றுமையாக வேலை செய்யப்பயிற்றுவிக்கும் இடங்களாகும் சமூக வளர்ச்சிக்கும் நண்பர்களுடன் சேர்ந்து செய்யும் வேலைகள் உதவுகின்றன.

15-12-1995

ஆரம்ப வகுப்புக் காலத்தின் பின்னரும் பல பிள்ளைகள் சிறு வயதில் நட்பாகவிருந்த நண்பர்கள் நண்பியர்களுடன் தொடர்ந்து நட்பை பேணிவருவர். வீட்டுக்குப் போகும் நண்பர், நண்பியர்களைப் பற்றிக் கூடுதலான கவனம் செலுத்தல் வேண்டும். எனினும் தேவையற்ற தடைகளை விதித்தல் பொருத்த மானதல்ல. யாரோடு நட்புக் கொள்ள வேண்டும் யாரோடு நட்புக் கொள்ளக் கூடாது என்பது பற்றி அவர்களுக்கு விளக்கம் கொடுப்பது நல்லது. வீட்டுக்கு வந்த ஒரு நண்பருக்கு கிராமப்புறத்து வீடொன்றில் தானும் ஒரு (இளநீர்) குரும்பையை வெட்டிக் கொடுத்து ஆதரிக்கும் பழக்கம் உண்டு. சந்தர்ப்பத்திற்கு ஏற்ப வசதிக்கேற்றவாறு உபசரிப்பது பெற்றோரின் கடமையாகும். இதனால் பிள்ளைகள் சமூகத்தில் வாழப் பழக்கப்படுகிறார்கள். மற்றவர்களுக்கு கிரமத்தை ஏற்படுத்தாதிருக்கவும், நண்பர்களை ஆதரிக்கவும், இது உதவுகிறது. இளைஞர்களுக்கு தமது நண்பர்களை வீட்டுக்கு அழைத்து வர அனுமதிக்காத போது, அவர்களைச் சந்திக்க வெளியே செல்வார்கள். கடைத் தெரு, மதகு, பஸ் நிறுத்துமிடம் புகையிரத நிலையம் முதலிய இடங்களில் சந்தித்துக் கொள்வார்கள். போதைப் பொருள் பாவனை, புகை பிடித்தல், மதுபானம் ஆகிவற்றை பழகுவதற்கு இது காரணமாக அமையும். அதனால் வீட்டில் நண்பர்களுடன் சந்தோசமாக மகிழ்ச்சியாகவும் பழக இடமளியுங்கள்.

படிப்பிற்கு பாதகமில்லாத வகையில் அந்த வயதுக் குழுவினருடன் பழக இடமளியுங்கள் கிராமப் புறங்களிலாயின் பிள்ளைகள் ஒன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்து ஆறு, நதி, குளம் குட்டைகளில் பாய்ந்து குளிப்பர். சிறு காடுகளில் ஊடாடுவர். திறந்த வெளிகளில் சென்று விளையாடுவர். கூச்சலிட்டு விளையாடுவர். இது உடல் வளர்ச்சிக்குப் போலவே உள வளர்ச்சிக்கும் உகந்ததாகும். நகர்ப்புறங்களில் இவ்வாறு விளையாடுவதற்கான சந்தர்ப்பங்கள் குறைவாகும் எனினும் முடுக்குகளில் வாழும் பிள்ளைகளும் பாதைகளில் இறங்கி விளையாடுவர். பிள்ளைகளுக்கு ஒரு நாளில் ஒரு குறிப்பிட்ட நேரத்துக்கு இவ்வாறு விளையாட, பாய்ந்து, கடந்து பழக இடமளித்தல் நன்று.

சிறு வயது தொடக்கம் ஒரு நேரகுசிக்கு ஏற்ப வேலை செய்யப் பழக்குதல் தான் இதற்கு நல்லது. அப்போது விளையாடுவதற்கு நேரத்தை ஒதுக்கலாம். இன்றுள்ள போட்டி முறையிலமைந்த சமூக பொருளாதார அமைப்பு காரணமாக இது அத்தியாவசியமாகும். ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரீட்சைக்காக முதலாம் ஆண்டிலிருந்தே பிள்ளைகள் பயிற்றப்படுகிறார்கள். பிள்ளைகளுக்கு அநாவசியமான சுமையைக் கொடுத்தல் கூடாது. ரூஸோ போன்று பூரண சுதந்திரம் கொடுக்கப்படாது விட்டாலும் எமது பிள்ளைகளுக்கு சுதந்திரமாக வளர்வதற்கு ஒரு சூழலை நாம் தயாரித்துக் கொடுத்தல் வேண்டும்.

பிள்ளை பெறும் வெற்றி குறித்து சில பெற்றோர்கள் காட்டும் மனப்பாங்கு பிள்ளையின் நன்மைக்கு ஆதாரமாவதில்லை. உங்கள் பிள்ளை ஒரு குழுவின் அங்கத்தவராக பாலர் பாடசாலையில் படிக்கிறார். உங்கள் பிள்ளை அக்குழுவிலுள்ள எல்லாப் பிள்ளைகளையும் தோற்கடித்துவிட வேண்டும் என்று நீங்கள் நினைக்கக்கூடும். எனினும் பிள்ளை இயற்கையாகவே கொண்டுள்ள திறன்கள் வேறுபட்டவையாகும். எனினும் அப்பிள்ளைக்கு நெருங்கக்கூடிய நிலை வேறு பட்டதாகும். வகுப்பில் உங்கள் பிள்ளையால் அடையக்கூடிய உண்மையான நிலையை நீங்கள் விளங்கிக் கொள்ளுங்கள் அவரால் அடைய முடியாததை செய்ய முடியாத வெற்றியைப் பற்றி நீங்கள் அலுத்துக் கொள்ள முற்பட்டால் பிள்ளை பின்தங்க வேண்டிய நிலை ஏற்படும்.

ஓரளவு போட்டி மனப்பான்மை பிள்ளையிடம் ஏற்படுதல் உற்சாகத்தை ஏற்படுத்த காரணமாக அமையலாம். பொறாமை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோபம், வைராக்கியம் என்பன பிள்ளையிடம் ஏற்படுவதற்கு அநாசியமான போட்டி காரணமாகிறது. சமவயதுப் பிள்ளைகளுடன் தொடர்பு கொள்ளல் சம்பந்தமாக கவனித்துப் பார்க்கையில் உல்லாசச் சுற்றுலாக்கள், யாத்திரைகள், ஆகியவற்றுடன் பிள்ளைகளையும் அழைத்துச் செல்லல் சிறந்ததாகும். அப்போது பிள்ளைகள் சமூகத்துக்கு பழக்கப்படுகிறார்கள். மகிழ்வூட்டும் விழாக்கள், திருமண வைபவங்கள், பிறந்ததின விழா, சமய விழாக்கள், ஊர்வலங்கள் அன்னதானம் வழங்கள் நண்பர்களுக்கு ஒன்று சேர்ந்து வேலை செய்ய சந்தர்ப்பம் உருவாகும். மரணச் சடங்கு போன்ற துக்ககர மான சந்தர்ப்பங்களிலும் கூட ஒன்றாகச் சேர்ந்து வேலை செய்ய சந்தர்ப்பம் வழங்குதல் நன்று. இந்த சமூக நடவடிக்கைகள் காரணமாக பிள்ளைகளுக்கு வளர்ந்தோருடன் சேர்ந்து சில சில பொறுப்புக்களை ஏற்று நிறைவேற்றச் சந்தர்ப்பம் கிட்டும்.

இவற்றுக்கேற்ப பெற்றோர்களாகிய எம்மிடம் பெரும் பொறுப்பும் கடமையும் உண்டு

கற்றோர் சபையின் முன் ஆசனத்தில்
வீற்றிருக்கும் ஞானத்தை தம் பிள்ளைகளுக்குப்
பெற்றுக் கொடுத்தலே பெற்றோரால் கொடுக்கப்பட
வேண்டிய குறைவற்ற செல்வம்.

எனும் கூற்று பிள்ளைகளை நாம் சமூகத்தில் வாழப்பழக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றது. கல்வி என்று கருதப்படுவது புத்தகங்களையும் பத்திரிகைகளையும் படிப்பதை மட்டுமல்ல நற்பிரசையாக நாடட்டுக்குப் பாரமின்றி வாழப் பயிற்றுவிப்பதாகும் சமயச் சூழலின் ஊடாக நல்ல கல்வியைப் பெற்றுக் கொடுப்பதும் நல்லொழுக்கத்தால் நிரம்பப்பெற்ற நன்னடத்தை யுடையவர்களை உருவாக்குவதும் எமது கடமையாகும். தற்போதைய சமூகத்தில் காணப்படும் சிக்கார்ந்த தன்மையை விளங்கிக் கொண்டு பெற்றோர்கள் முன்னைவிட பிள்ளைகளின் நடத்தையை விருத்தி செய்ய கவனமெடுத்தல் வேண்டும்.

உடலை வருத்தி வேளை செய்யும் விவசாயி, தொழிலாளி ஆகியோரின் பெறுமதியை பிள்ளைகளுக்கு உணர்த்துங்கள். வேலை செய்வதற்கான கருத்தை எல்லாப் பிள்ளைகளுக்கு மத்தியிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்டாக்க முடியுமானால் மட்டுமே நமது நாட்டை நாம் முன்னேற்றலாம். தொழிலாளியும் விவசாயியும் நாட்டுக்காக உழைப்பதை பிள்ளை மதிக்கக் கூடியவனாதல் வேண்டும்.

மினுங்கும் ஆடை ஆபரணங்கள் மீது சிறு பிள்ளைகளிடம் ஆசையை ஊட்டும் பெற்றோரும் உளர். இதன் காரணமாக களவெடுக்கத் தூண்டப்பட்ட சில சந்தர்ப்பங்களும் உண்டு. பாடசாலைக்குச் செல்லும் சிறுவர்களுக்கு ஆடை அணிகளை அணிவித்து தனது சமூக அந்தஸ்தைக் காட்ட முற்படுதால் பிள்ளைகளுக்கு இடையில் கோபம், குரோதம், பொறாமை ஏற்படுகின்றன. சமூகத்தைப் பிரித்துப் பிளவு படுத்துவதற்குப் பதிலாக சமூகத்தை ஒன்றிணைப்பதற்குத் தேவையான மனப்பாங்கை பிள்ளைகளுக்கு மத்தியில் ஏற்படுத்த வேண்டும். நல்ல பாடசாலைக்குப் பிள்ளையை அனுப்புவது மட்டும் போதியதல்ல என்பதை பெற்றோர் மனதிலிருத்த வேண்டும். இலங்கையில் பிரசித்து பெற்ற பாடசாலைகளுக்குச் சென்ற பிள்ளைகள் கூட பரீட்சை அல்லது விளையாட்டு துறைகளில் எவ்வித வெற்றியும் பெறாது போதைப் பொருள்களுக்கு அடிமையாகிய சந்தர்ப்பங்களுமுண்டு. கஷ்டமான பிரதேசங்களில் அவ்வளவு பிரசித்தமாற்ற பாடசாலைகளில் படித்த பிள்ளைகள் பரீட்சைகளில் உயர்தரமாக சித்தியடைவதும் விளைட்டுத் துறையில் வெற்றிகள் ஈட்டுவதும் பற்றி கேள்விப்படுகிறோம். பெற்றோரது பொறுப்பு என்றும் அவதானத்தோடிருப்பதாகும். ஒரு பிள்ளையை பாடாசாலையில் சேர்த்து விடுவது மட்டும் போதாது. பாடசாலையில் பிள்ளையின் நடத்தை பற்றியும் விசாரித்தறிய வேண்டும். அப்போது பிள்ளையைப் பற்றி நல்ல விளக்கத்தை பெற முடியும்.

ஆரம்பப் பாடசாலையில் படிக்கும் இடத்திலிருந்து ஆசிரியர் பெற்றோர் தொடர்புக் குறிப்புப் புத்தகம் பற்றியும் கவனம் செலுத்துங்கள். ஆசிரியர் பிள்ளையைப் பற்றி நல்விளக்கம் பெற்றது இந்த குறிப்புப் புத்தகத்தினூடாகவாகும். உங்களது தேவைகள், உங்கள் பிரச்சினைகள் உங்கள் எதிர் பார்ப்புக்கள் ஆகிவற்றை ஆசிரியர்களிடம் கூறுவதற்கு இக் குறிப்புப் புத்தகத்தைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். பிள்ளையின் கல்வியைப் பற்றி தாய் மட்டுமல்ல தகப்பனும் அவ்வாறே கவனமெடுக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்காலத்தில் பரம்பரை இடைவெளி பற்றி எங்கும் பேசப்படுகின்றது. சிறு வயது தொடக்கம், பிள்ளைகளுக்கும் பெற்றோர்களுக்கு மிடையில் தொடர்பு இருந்திருத்தால் இவ்வேறுபாடு ஏற்படாது. பிள்ளை வயதால் வளரும் போதே இடைவெளி மிக அகன்றதாகிவிடுகின்றது.

பெற்றோர்களே, முத்து, மாணிக்கம், பொன் போன்ற உங்கள் பிள்ளைகளை உங்கள் கண்களைப் போன்று பேணிப்பாதுகாத்துக் கொள்ளுங்கள். நல்லொழுக்கம் எனும் விலை மதிக்க வொண்ணாத முத்து மாலையை அவர்கள் கழுத்திலே அணிவியுங்கள். கற்றல் தொடர்பாக நல்ல மனப்பாங்குகளைத் தவிர தேவையற்ற போட்டியை பிள்ளைகளிடம் ஏற்படுத்தாதீர்கள். சமூகத்தின் மீது பொறாமைப்படாத சமூக அபிவிருத்திக்கு ஒத்துழைப்பு வழங்கக் கூடிய ஒரு மகனை ஒரு மகளை உருவாக்குங்கள். பிள்ளையை வளர்க்க வேண்டியது தாய் மட்டுமல்ல. அது தகப்பனது பொறுப்புமாகும். தாயின் மனப்பாங்கும் கருத்துக்குளும் போன்றே தகப்பனது மனப்பாங்கும் கருத்துக்களும் பிள்ளையை வளர்க்கும் முறையில் செல்வாக்குச் செலுத்துகின்றது.

பெண் பிள்ளைகளை வளர்க்கும் போது விஷேடமாக அவர்களது தன்னம்பிக்கையை வளர்பபதற்குத் தேவையான சுதந்திரம் பொறுப்பு, தொழிற்பாடு, ஆகிவற்றுக்கான சூழலைப் பெற்றுக் கொடுத்தல் ஆகியன தொடர்பாக தாய்மார்களைப் போலவே தந்தைமாரும் விஷேட கவனம் செலுத்துதல் இன்றியமையாததாகும். பெண் பிள்ளை எப்போதும் தந்தைக்கு அஞ்சிவாழத் தேவையில்லை. அவர்களது பிரச்சினைகளைச் சுதந்திரமாகக் கதைக்கக் கூடிய சூழ்நிலை வீட்டில் இருக்க வேண்டும். ஆண் பிள்ளைக்கும் பெண் பிள்ளைக்கும் சமமான சுதந்திரமும் உரிமையும் உண்டு அவர்களுக்கு பாதுகாப்பையும் வழிகாட்டலையும் வழங்குவதுடன் சுதந்திரமாக செயற்படத் தேவையான சூழ்நிலையை பிள்ளைக்கு உருவாக்கிக் கொடுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பப் பழக்க வழக்கங்கலும் சம்பிராதயங்களும்

எல்லாக் குடும்பங்களிலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட பழக்க வழக்கங்களும் சம்பிரதாயங்களும் உண்டு. தந்தைக்கு முன்னால் தம் பிள்ளைகள் நடந்து கொள்ளும் முறை, உணவு உட்கொள்ளும் முறை, சமூகத் தொடர்புகளை வைத்துக் கொள்ளும் முறை, பயணங்கள் மேற்கொள்ளும் முறை என்பன குடும்பத்துக்குக் குடும்பம் வேறுபடலாம்.

"நான் செவ்வாய்க்கிழமையில் குளிப்பதில்லை. எனது பிள்ளைகள் சிறுவர்களாயிருக்கையில் அவர்களை நான் செவ்வாய்க்கிழமை களில் குளிப்பாட்டவில்லை"

"வருடம் பிறக்கு முன் வீட்டைக் கழுவ வேண்டும்
வெள்ளிக் கிழமைகளில் பள்ளிக்கு கோயிலுக்குச் செல்ல வேண்டும்"
"ஜனவரி முதலாம் நாள் பணம் செலவு செய்யக் கூடாது"
"அப்பா சாப்பிட்ட பின்னரே நாங்கள் சாப்பிடுவோம்"

"எங்கள் குடும்பத்தைக் சேர்ந்தவர்கள் சுற்றாடலிலுள்ள மனிதர்களை ஒருநாளும் கணக்கெடுப்பதில்லை"

"இவை சில குடும்பங்கலில் காணப்படும் சில பழக்க வழக்கங்களாகும்"
"பல்லி கத்தியது பயணம் தடைப்படும். போக வேண்டாம்"

பெற்றோர்கள் தம் பிள்ளைகள் இந்தப் பழக்க வழக்கங்களை அவ்வாறே பின்பற்றுவார்கள் என்று எதிர்பார்ப்பது நியாமானதா?

சில பழக்கங்களை நாம் காலா காலமாக நடைமுறைப்படுத்தி வந்தாலும் இன்று பயனற்றவை என்று பிள்ளைகளுக்கு ேறான்றலாம். இந்தப் பழக்க வழக்கங்களில் தற்காலத்துக்குப் பொருத்தமானதெனக் கருதுவனவற்றை பாதுகாத்துக் கொள்ள பெற்றோர் முயற்சிப்பதில் தவறில்லை. எனினும் அவை பிள்ளைகளுக்கு எவ்வித பயனுமற்றவை என்று தென்படலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

-பல்லி கத்தியதென்பதற்காக ஒரு பயணத்தைப் போகாதிருப்பதை பிள்ளைகள் விரும்பாதிருக்கலாம்.

உணவுகளைப் பழைய முறையிலேயே தாயாரிக்க வேண்டும் என்று நினைக்கும் தாய்மாரும் உண்டு. மரக்கறி வகைகளை நன்றாக வேகவைத்துக் கொடுக்க வேண்டும் என்று கூறி தேவைக்கதிகமாக வேக வைத்து உணவுப் போஷனையை குறைக்கவும் இடமுண்டு.

"எங்கட குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் குறைந்த சாதிகளின் வீட்டில் சாப்பிடுவதில்லை அவர்களுடைய வீடுகளுக்குச் செல்வதுமில்லை"

"அவனுகள் எங்களுடைய வீடுகளில் வேலை செய்தவர்கள் நாங்கள் அவனுகளுடன் சரிக்குச் சரியாக உட்காருவதில்லை"

பெரும்பாலான பிள்ளைகள் இந்த விதமான கருத்துக்களை மதிக்க மாட்டார்கள் குலம் வகுப்பு என்பன அவர்களுக்குத் தேவையில்லை. அவற்றைப் பாதுகாத்துக் கொள்ள பெற்றோர்கள் முயற்சித்த போதிலும் பிள்ளைகள் அவற்றை வெறுப்பார்கள்.

"எங்கட பரம்பரையில் எவரும் காணிகளை விற்கவில்லை இளைய மகன் குடும்பத்தின் மானத்தையே போக்கி விட்டான். காணிகளை விற்று"

சில சமயம் இந்த இளைய மகன் காணியை மதிக்காதிருக்கக் கூடும். அவர் காணியை விற்று தன் கல்வியைத் தொடர்ந்திருக்கக் கூடும். அவருக்கு விட சிறியதாயினும் ஒரு வீடு தேவையாக இருக்கலாம். அல்லது வேறோர் வியாபாரத்தில் முடக்குவதற்கு பணத்தைத் திரட்டிக் கொள்வதற்காக விருக்கலாம்.

வீடுகளில் இந்நிலைமைகள் உருவாகின்ற போது பெற்றோர்கள் மன நோய்க்கு உள்ளாகின்றார்கள் இந்தப் பிள்ளைகள் குடும்ப சம்பிரதாயங்களை மதிக்கின்றார்கள். இல்லையெனக் கருதி விரக்தியடைகின்றனர். இறுதியில் பெற்றோர்களின் வாழ்நாள் குறைகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளின் இந்த நடவடிக்கைகளைப் பற்றிப் பெற்றோர்கள் தேவைக்கதிகமாக சிந்திப்பது புத்திபூர்வமானதல்ல. இயன்றளவு அவர்களை விளங்கிக் கொண்டு மோதலை ஏற்படுத்திக் கொள்ளாதிருத்தல் மிகச் சிறந்ததாகும்.

சவால்கள்

இன்று வாழ்க்கை ஒரு சவாலாக உள்ளது. பெற்றோரது வாழ்க்கை பெற்றோர்களுக்கு ஒரு சவாலாகும். பிள்ளைகளுக்கு பிள்ளைகளின் வாழ்க்கை ஒரு சவாலாகும். பிள்ளைகளுக்கு எதிர்காலம் ஒரு சவாலாகும்.

உணவு, உடை வீடு முதலிய அடிப்படைத் தேவைகளை நிறைவற்றிக் கொண்டு நன்றாக வாழ்தல் பெரும்பாலானோர்க்குச் சவாலாகும். வெள்ளம், வரட்சி, உண்ணாட்டு யுத்தம், நோய்கள் ஆகியவற்றுக்கு முகங்கொடுக்க நாம் ஆயத்தமாக வேண்டும். இவற்றுக்கு முகங்கொடுத்து எதிர்கொள்ளும் திறன் இலங்கையில் வதியும் எமக்குமட்டுமன்றி உலகில் வேறு பல நாடுகளிலும் வதியும் மக்களுக்கும் இருக்க வேண்டும். யப்பான் பொருளாதார ரீதியாக எவ்வளவு தான் அபிவிருத்தியடைந்த போதிலும் யப்பானிய மக்கள் எரிமலை வெடிப்பு முதலிய சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது. அபிவிருத்தியடைந்த நாடுகள் எனக் கருதப்படும் பல நாடுகளில் கூட இன்று தொழிலின்மை நிலவுகின்றது. இளைஞர் விரக்தி ஏற்படுவதற்கு மூல காரணம் தொழிலின்மையாகும்.

எயிட்ஸ் நோய் உலகில் மிக வேகமாகப் பரவுகிறது. இது உலகில் மக்களை விழுங்கிக் கொள்ளப் போகும் கொள்ளை நோயாகும். அறநெறி ஒழுக்கச் சீர்கேடு மோசமாகப் பரவுகின்றது. இச் சூழ்நிலையில் பயமின்றி தயக்கமின்றி உறுதியாக இருக்கக் கூடிய நிலையான ஒழுக்கக் கட்டுப்பாடுகளை பேணுகின்ற பிள்ளைகளை வளர்ப்பதுவும் ஒரு சவாலாகும்.

பெற்றோர்களே இந்த சவால்களுக்கெல்லாம் அஞ்சி களைத்து விட வேண்டாம். இந்த சவால்களை ஏற்றுக் கொள்ளுங்கள். இந்தப் பருவத்தில் இருந்தே சவால்களுக்கு முகங்கொடுக்கக் கூடிய பிள்ளைகளை உருவாக்க முயற்சி செய்யுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைப் பருவத்திலேயே பிள்ளைகளுக்குத் தேவையான அன்பு ஆதரவு இறக்கம் ஆகிவற்றைக் குறைவின்றி வழங்குங்கள் என மீண்டும் நினைவூட்டத் தேவையில்லை. எனினும் பிள்ளைகளுக்குச் சிறு வயது தொடக்கம் சிறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க சந்தர்ப்பம் வழங்குங்கள். பிள்ளைகள் பிரச்சினைகள் யாவற்றையும் பெற்றோரே தீர்த்து வைக்க முயல வேண்டாம். உடை அணிவித்துவிடல், உணவை ஊட்டுதல், பாடசாலையில் கொடுக்கும் வீட்டு வேலைகள் யாவற்றையும் செய்து கொடுத்தல் ஆகியவற்றையெல்லாம் நீங்களே செய்து கொடுத்தல் பிள்ளைக்குச் செய்யும் அநியாயமாகும். அவரது வேலைகளை அவருக்கே செய்ய இடமளியுங்கள். பழக்குங்கள் அவருக்கும் சவால்களை முன்வையுங்கள். காலம், நேரத்தைப் பற்றிய சிந்தனையை சிறு வயது முதலே பழகிக் கொண்ட ஒருவருக்கு காலம் நேரம் ஒரு சவால் அல்ல.

இலகுவான வேளைகள் மட்டுமல்ல கடினமான வேலைகளையும் அவர்களுக்கே செய்ய இடமளியுங்கள். அப்போது கஷ்டமான ஒரு பணி முன் வந்த போதும் பின்வாங்கிச் செல்லாது கையேற்று பொறுப்போடு அந்த வேலையை செய்வார்.

சில வளர்ந்தவர்கள் கூட பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ளத் தயங்குகிறார்கள். பொறுப்புக்களைத் தட்டிக் கழிக்கின்றவர்களும் உண்டு. எதிர் காலத்தில் ஒவ்வொரு பிள்ளைக்கும் ஏதேனும் ஒரு பொறுப்பை ஏற்கும் நிலை ஏற்படும். தன்னம்பிக்கையை அவர்களிடம் ஏற்படுத்துவதன் மூலம் இப்பண்பைப் பிள்ளைகளிடம் விருத்தியடையச் செய்யலாம். தன்னம்பிக்கை இல்லாதவிடத்தில் தோல்வி மனப்பான்மை ஏற்படும்.

தனது நிலையில் எதனைச் செய்யலாம்? எதனைச் செய்ய முடியாது? என்பதை விளங்கிக் கொள்ளும் திறன் பிள்ளைகளுக்கு வேண்டும். தனது வெற்றியை மதிப்பதற்கும் அதே போன்று மற்றவர்களது வெற்றியை மதிப்பதற்கும் பழக்குங்கள்.

தேவைகள் எவ்வளவு தான் இருந்த போதிலும் அவை எல்லாவற்றையும் நிறைவேற்றிக் கொள்ள முடியாது என்பதையும் பிள்ளைகள் விளங்கிக் கொள்ள வேண்டும். வெற்றியைப் போன்றோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோல்வியையும் ஒரே விதமாக ஏற்றுக் கொள்ளும் உளநிலையை பிள்ளைகளிடத்தில் ஏற்படுத்த முடியுமாயின் தற்கொலை புரிதல் முதலியன இச் சமுதாயத்திலிருந்து குறையும்.

குலம், சாதி, குடும்பம் ஆகியன காரணமாக நிலைமைகளை அடையாது சுயமுயற்சியினால் கருமமாற்றி நிலைமைகளைப் பெற்றுக் கொள்ள ஊக்குவியுங்கள்.

குழந்தைப் பருவத்திலிருந்தே சவால்களுக்கு முகங்கொடுக்கப் பழகிய பிள்ளை எதிர்காலச் சவால்களுக்கு இலகுவாக முகங்கொடுக்கும். சில குடும்பங்களில் ஆண் பிள்ளைகளுக்கு சவால்களுக்கு முகங்கொடுக்கும் சந்தர்ப்பம் கிடைக்கின்றது. எனினும் பெண் பிள்ளைகளுக்கு விவாகமாகும் வரை அத்தகைய சந்தர்ப்பம் கிட்டுவதில்லை. கூடிய பாதுகாப்புடனும், அன்புடனும் எவ்வித பொறுப்பும் வழங்கப்படாது வளர்க்கப்படும் சில பெண் பிள்ளைகளுக்கு விவாகமான பிறகு ஏற்படும் சவால்களுக்குப் பயமின்றி முகங்கொடுக்க முடியாதநிலை ஏற்படும். பெண் பிள்ளைகளுக்கு ஆண் பிள்ளைகளை விட எதிர்காலத்தில் பிரச்சினைகளுக்கும் சவால்களுக்கும் முகங்கொடுக்க வேண்டியேற்படுவதால் சிறுபராயத்தில் அதற்கான அநுபவத்தைப் பெற்றுக் கொடுத்தல் மிக முக்கியமாகும்.

சவால்களுக்கு வெற்றிகரமாக முகங்கொடுக்கும் பிள்ளைக்கு கிடைக்கும் மகிழ்ச்சியோ அளப்பரியது. ஆன்மிக வளர்ச்சிக்கு அது அவசியமாகும். குமரப்பருவத்தில் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க முடியாது தற்கொலை புரிவோர் இருக்கிறார்கள். உங்கள் பிள்ளையை அந்நிலைமைக்குள்ளாக்காதீர்கள்.

சிறு பிள்ளைப் பருவத்தில் எளிமையான சவால்களை அவர்களுக்கு முன் வையுங்கள். உணவை உட்கொள்ளள், உடை உடுத்தல், பாடசாலை வேலைகள் தொடர்பாக சகல சவால்களுக்கும் நீங்கள் முகங் கொடுக்காது பிள்ளைக்கு முகங் கொடுக்க இடமளியுங்கள். அது நீங்கள் அவர்களுக்குச் செய்யும் உப காரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிசும் தண்டனையும்

"இந்தச் சோறு எல்லாத்தையும் சாப்பிட்டால் சொக்கிளேற் தருவேன்"

"புலமைப் பரீட்சையில் பாஸ் பண்ணினால் சைக்கில் வாங்கித் தருவேன்"

"வகுப்பில் முதலாவதாக வந்தால், ஒரு சோடி காப்பு வாங்கித் தருவதாக அப்பா சொன்னார்"

பிள்ளைகளைக் கொண்டு சில வேலைகளைச் செய்து கொள்வதற்குப் பெற்றோர் இவ்வாறு பரிசு வழங்குவதற்குப் பழக்கப்பட்டிருகிறார்கள். அது சரியா? பிழையா? பெற்றோரின் இந்த நடவடிக்கை காரணமாகப் பிள்ளைகளின் எதிர்காலம் எவ்வாறு அமையும்? பரிசளிப்பதன் மூலம் பிள்ளைகள் செய்யவேண்டியவற்றைச் செய்விப்பதற்கு உற்சாகமூட்டுதல், அதனாலேற்படும் விளைவுகளைப் பற்றிய விளக்கமின்மையால் செய்கின்ற ஒரு செயலாகும். சிறு பிள்ளைகளின் முழு வாழ்க்கையும் இத்தகைய பழக்கத்திற்கு அடிமையாகி விடுவதனால் நாசமாகிவிடுவதற்கு இடமுண்டு. பரிசு கிடைக்கப்பெறாத எந்த ஒரு வேலையையும் செய்வதற்குப் பிள்ளை ஊக்கம் செலுத்தாதிருக்கலாம். பெற்றோருடைய எதிர்காலம் எவ்வாறு அமையும்? பரிசளிப்பதன் மூலம் பிள்ளைகள் செய்ய வேண்டியவற்றைச் செய்விப்பதற்கு உற்சாகமூட்டுதல், அதனாலேற்படும் விளைவுகளைப் பற்றிய விளக்கமின்மையால் செய்கின்ற ஒரு செயலாகும். சிறு பிள்ளைகளின் முழு வாழ்க்கையும் இத்தகைய பழக்கத்திற்கு அடிமையாகி விடுவதனால் நாசமாகிவிடுவதற்கு இடமுண்டு. பரிசு கிடைக்கப்பெறாத எந்த ஒரு வேளையையும் செய்வதற்குப் பிள்ளை ஊக்கம் செலுத்தாதிருக்கலாம். பெற்றோருடைய எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவதற்கு முடியாமற்போகின்ற சில பிள்ளைகள் அந்தப் பரிசு கிடைக்காமல் தோல்வியடைவதன் காரணணாக விரக்தியடையும் சந்தர்ப்பங்களும் உண்டு.

பிள்ளைகளுக்குப் பரிசளிப்பது கூடாதென்று இதனால் கருதப்படவில்லை. இடைக்கிடை வெற்றி பெறச் செய்யும் நோக்கத்தோடு பரிசளிப்பது நல்லது. எந்நேரமும் அல்லது அடிக்கடி பரிசு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்க முற்படுவது அவ்வளவு சிறந்தல்ல. பரிசுகளுக்குப் பழக்கப்படுவது அவ்வளவு நல்லதல்ல. படிப்படியாகப் பரிசுகளை அதிகரிக்கவும் நேரிடும். இளைஞராகின்றபோது கேட்கின்ற எல்லாவற்றையும் கொடுக்க வேண்டியும் நேரிடலாம். பிள்ளையினால் அடைய முடியாத நோக்கங்களுக்காகப் பரிசு வழங்குவதனால் உரு பயனும் ஏற்பட முடியாது. அதனால் பிள்ளையினுடைய எதிர்பார்ப்புக்கள் தோல்வியில் முடிவடையும். அதனால் அதிருப்தி ஏற்படும்.

சில பெற்றோர் குழந்தை பருவத்திலிருந்தே தமது பிள்ளைகளுக்கு இனிப்பு பண்டங்கள், ரொபி, சொக்ளேற் ஆகியவற்றைப் பரிசாகக் கொடுக்கப் பழக்கப்பட்டிருக்கிறார்கள் இனிப்புப் பண்டங்களைப் பரிசாகக் கொடுப்பதை விடப் பழ வர்க்கங்களை வழங்குவது சிறந்தது. அழுகின்ற பிள்ளைக்கு இனிப்புப் பண்டங்கள் கொடுப்பதை விட ஒரு தோடம்பழத்தை, வாழைப்பழத்தை, நாரத்தங்காயைக் கொடுத்தல் கூடாதா?

படிக்கின்ற பிள்ளைகளுக்கு உணவுப் பண்டங்கனப் பரிசாகக் கொடுப்பதை விட படிப்புக்குத் தேவையான உபகரணங்களைக் கொடுப்பது பொருத்தமானது. புத்தகங்கள், சஞ்சிகைகள், விளையாட்டுப் பொருள்கள், பேனை, பென்சில், நிறப்பெட்டி, கத்தரிக்கோல் ஆகியவற்றைப் பரிசாகக் கொடுப்பது பொருத்தமானது. அத்தகைய பொருள்கள் பிள்ளையின் கல்விக்கு மென்மேலும் உதவுவதுடன், கல்வியில் ஊக்கத்தையும் அதிகரிக்கச் செய்யும்.

பொருள்களைப் பரிசளிப்பதைவிட வாழ்த்துதல், ஊக்குவித்தல், அன்பு காட்டுதல் என்பனவும் பெறுமதி வாய்ந்த பரிசில்கள் ஆகும். இவற்றின் மூலமும் பெற்றோர் நல்ல விளைவுகளைப் பெற்றுக் கொள்ளலாம். நல்லதொரு வேலையைச் செய்தபோது, ஒரு பரிசை விட வாழ்த்துத் தெரிவிப்பதன் மூலமும் அதனை மதிப்பதன் மூலமும் பிள்ளைகள் அத்தகைய நல்ல வேலைகளைமென் மேலும் செய்வதற்குத் தூண்டப்படுவர். எனினும் இங்கு நினைவிருத்த வேண்டிய தாழ்வுணர்ச்சி ஏற்படக்கூடிய விதத்தில் வேறு பிள்ளைகளினுடைய வெற்றியை வாழ்த்துவது அல்லது கணிப்பது இங்கு செய்யப்படக்கூடாத ஒன்றாகும். மற்றைய மாணவர்களிடம் இருக்கின்ற திறமையை மழுங்கச் செய்வதற்கும் இந்த வாழ்த்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணமாக அமையலாம். பாலர் பாடசாலைப் பிள்ளைகளாயின் எல்லாப் பிள்ளைகளும் வாழ்த்துக்களை எதிர்பார்க்கும். அவர்களுடைய மட்டத்தில் செய்யப்படுகின்ற நல்ல வேலைகளுக்கு வாழ்த்துக் கிடைக்க வேண்டும்.

பரிசைப் போன்றே தண்டனை கொடுப்பதுவும் அடிக்கடி செய்யக்கூடாது. மிகவும் குறைந்த வயதுடைய பிள்ளைகலுலுக்கு உடல் தண்டனை கொடுப்பது பொருத்தமானதன்று. அவ்வயதுப் பிள்ளைகள் அந்தவிதமான விளக்கமுமின்றியே தவறு செய்கின்றனர். மிகச் சிறு வயதில் சில பிள்ளைகள் தன்னுடைய தாயாருக்கு அல்லது தகப்பனாருக்காயினும் அடிக்கக் கூடும். விளையாட்டுப் பொருள்களை உடைக்கின்ற பிள்ளைகளும் இருக்கிறார்கள். தன்னுடைய பால் போத்தலை தொட்டிலின் கீழே போட்டு உடைக்கவும் இடமுண்டு. விளையாட்டுக் காரினுடைய சக்கரங்கள் எல்லாவற்றையும் சுழற்றவும் கூடும். இத்தகைய நடவடிக்கைகள் எதுவுமே தெரிந்து செய்யப்படுவனவல்ல. இரண்டு வயதான போதிலும் கூட ஒரு குழந்தைக்கு சரி - பிழை, நல்லது தீயது என்பன விளங்க முடியாது. பிள்ளையினுடைய புத்தி விருத்தியடைந்த போதே இந்நிலைமைகள் படிப்படியாக வளர்ச்சியடைகின்றன. ஆரம்பப் பள்ளிக்கூடத்தில் சேரும்போது ஓரளவுக்குச் சிறு பிழைகள் விளங்கும். ஏன், ஓரளவு தர்க்கிக்கவும் முடியும்.

"தங்கைக்கு ஓர் அடி அடித்த நான்கு வயதுடைய அமலனுக்கு அம்மா நான்கு பிரம்படி கொடுத்தார்"

"சோறு சாப்பிடாவிட்டால் இருட்டு அறையிலே போட்டு மூடிவிடுவேன்"

'முற்றத்தில் இறங்கினால் ஒரு பூசை தருவேன்"

"யன்னலுக்குள்ளால் தலையை நீட்டி வெளியே பார்க்க வேண்டாம்"

பிள்ளைகள் செயற்படுபவர்கள். அவர்களுக்கு ஓரளவு சுதந்திரம் தேவை பிள்ளைகளினுடைய தேவைகளைப் பெற்றோர்கள் அறியாதிருக்கிறார்கள்.

UNIVERSITY ... PERADENIYA
15-12-1995
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்டனை கொடுத்துப் பிள்ளைக்கு உணவூட்ட முயற்சிப்பதனால் ஏற்படும் விளைவு என்ன? பிள்ளைக்கு உணவு தேவையாயின் உணவு ருசியாக அமைந்தால் பெற்றோர் அவ்வளவு கஷ்டப்படுவது அநாவசியமானது.

தங்கைக்கு ஓர் அடி அடிப்பது அவ்வளவு பாரதூரமான குற்றச் செயல் என்பது அமலனுக்கு விளங்கவில்லை.

பிள்ளைகளைப் பிள்ளைகள் உலகத்தில் வாழ விடாது தண்டனை கொடுத்து வளர்ந்தோர் உலகத்தில் சிறைப்படுத்தி வைப்பது அநீதியானது. பிள்ளைகளினுடைய தேவைகள் பெற்றோரினால் உரிய முறையில் நிறைவேற்றப்படுமாயின் தண்டனை கொடுக்க வேண்டிய அவசியமுல்லை.

சிறு பராயத்தில் சில பிள்ளைகள் பொய் சொல்வர்; களவெடுப்பர்; புகை பிடிப்பர். இவற்றை நிறுத்துவதற்குப் பெற்றோர் தண்டனை கொடுப்பார்கள். பிள்ளைகள் இந்நிலைமைகளுக்கு உள்ளாக முன்னர் அவற்றைத் தவிர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருந்தால் மிக நன்று. அந்த வகையில் பெற்றோருடைய முன்மாதிரிமிக முக்கியமானது. பெற்றோருடைய மனப்பாங்கு பெறுமானங்கள் ஆகிவற்றை, உதாரண புருஷர்களாகத் திகழ்வதன் மூலம் பிள்ளைகளுக்கு ஏற்படுத்த முயற்சிப்பது மிகச் சிறந்ததாகும்.

பிள்ளைகளின் சில நடவடிக்கைகளை மதிக்காதிருப்பதன் மூலமும் அனுமதிக்காதிருப்பதன் மூலமும் பிழையான நடவடிக்கைகளிலிருந்து பாதுகாத்துக் கொள்ளலாம். ஏழு - எட்டு வயது கடந்த பின்னர் படிப்படியாக நல்லவை யாவை, தீயவை யாவை? சமுதாயம் ஏற்றுக்கொள்கின்றவை யாவை சமுதாயத்தினால் வெறுக்கப்படுகின்றவை யாவை என்பவற்றை விளங்கிச் செய்யக்கூடிய விதத்தில் பெற்றோர் நடவடிக்கைகளை மேர்கொள்ளலாம்.

சிறு பிள்ளைகளைக் கைகளாலும் கால்களாலும் தாக்குவதை எவ்வகையிலும் அனுமதிக் முடியாது எனினும் ஒரு பிரம்பினால் அல்லது மெல்லிய தடியினால் அடிப்பதன் மூலம் சில பிள்ளைகள் பிழைகளைச் செய்வதிலிருந்து தவிர்த்துக் கொள்ளலாம். எல்லாப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளுக்கும் ஒரே தண்டனைமுறை பொருந்தாது. ஒவ்வொரு பிள்ளையினதும் இயல்புக்கேற்றவாறு தண்டனையும் அமைய வேண்டும்.

நூறு பிள்ளைகளில் ஒருவருக்கு ஒரு தண்டனை வழங்குவதன் மூலம் சரியான வழியில் இட்டுச் செல்லலாம். எனினும் ஏ!னைய தொண்ணூற்றொன்பது மாணவர்களுக்கும் அதுவே தண்டனையாக அமையக் கூடாது.

தம் பிள்ளைகளுக்குத் தண்டனை கொடுக்கும் போது கூட அந்தப் பிள்ளைகளினுடைய தனித்தன்மைபற்றிக் கவனிக்க வேண்டும். சில பிள்ளைகள் நோயாளர்கள் அவர்களுக்கு உடல் தண்டனையோ உளத் தண்டைனையோ கொடுத்தல் எவ்விதத்திலும் பொருந்தாது. தண்டிக்கும் சந்தர்ப்பங்கள் ஏ!ற்படாத வகையில் பிள்ளைகளை வளர்த்துக் கொள்ள முடியுமாகவிருந்தால் மிகச் சிறந்ததாகும்.

தண்டிப்பதற்கன்றித் தவறை உணர்த்துவதற்கு முயற்சி செய்யுங்கள். அப்போது, "நான் நிர்மாலாவுக்கு அடிக்க மாட்டேன். எனக்கு இருக்கும் ஒரே தங்கை அவளாகும்" என்று வசந்தி நினைப்பாள்.

"அம்மாவின் குடையை உடைத்தால் அம்மா நனைந்துகொண்டு வேலைக்குச் செல்ல வேண்டி வரும் -நாதன் தம்பிக்குச் சொன்னான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளின் எதிர்காலம்

பெற்றோர்களென்ற வகையில் பிள்ளைகளின் எதிர்காலத்தைப் பற்றித் திட்டமிடுதல் இயல்பானதாகும். மனிதர்கள் மட்டுமல்ல ஏனைய உயிரினங்களும் கூட தம் பிள்ளைகளைப் பற்றித் திட்டமிடுகினறன என்பது தெரிகிறது. பறவைகள் கூட குருவிக் குஞ்சுகளின் பாதுகாப்புப் பற்றி நடவடிக்கை எடுக்கின்றது. குருவி முட்டையை பாதுகாப்பதற்காக பாதுகாப்பான இடங்களிலேயே குருவி கூடுகளை அமைக்கின்றன. வேறு பிராணிகள் கூடத் தம் இளசுகளைப் பாதுகாப்பதற்கான முயற்சிகளைச் செய்கின்றன. மரப்பொந்துகள் கற்குகைகள் போன்ற பாதுகாப்பான இடங்களில் தம் குஞ்சுகளையும் குட்டிகளையும் பாதுகாத்துக் கொள்ளும் உயிரினங்கள் உபத்திரவமின்றி வாழ்வதற்குத் தம் இளசுகளுக்குப் பழக்குகின்றன. தாய்மை பற்றிய இயல்பான உணர்வு மனிதர்களுக்கும், ஏனைய உயிரினங்களுக்கும் இயல்பாக கிடைக்கின்றது. குரங்கு, நாய், முதலிய மிருகங்களின் நடத்தைப் பாங்கைப் பார்க்கையில் தாய்மை பற்றிய உணர்வு மனிதர்களிடம் போலவே ஏனைய உயிர்களிடத்தும் கூடுதலாகச் செல்வாக்குச் செலுத்துகின்றது என்பது தென்படுகின்றது. தாய்மை பற்றிய உணர்வைப் போன்றே தந்தையுணர்வும் மனிதர்களிடம் போன்றே ஏனைய உயிர்களிடத்தும் காணப்படுகின்றது.

பிள்ளைகளின் எதிர்காலப் பாதுகாப்புக்காகப் பெற்றோர் பெரு முயற்சி செய்கின்றனர். பௌத்த தருமத்தினடிப்படையிலும் ஏனைய சமயங்களினடிப்படையிலும் பிள்ளைகளைப் பாதுகாத்தல் பற்றிக் கூறப்பட்டுள்ளன. பிள்ளைகளைக் கவனித்தல் ஓர் நற்கருமம் என்றும் உன்னதமான பணி என்றும் அவை கூறுகின்றன. புராதன காலம் தொட்டு பெற்றோர் தம் பிள்ளைகளின் எதிர்கால முன்னேற்றத்திற்காக செயற்பட்டுள்ளார்கள். தற்கால சமூகத்தில் தம் பிள்ளைகளின் நன்மைக்காக பெற்றோர் பெரும் முயற்சி எடுக்கிறார்கள், அவற்றுள் முதலிடம் வகிப்பது பிள்ளைகளுக்கு கல்வியை வழங்குவதாகும். எமது சமூகத்தில் பிள்ளைகளுக்கு கல்வி வழங்குவதற்கு ஏராளமான வாய்ப்புக்கள் உள்ளன. பல்வேறு வகையான முன் பாடசாலை (சிறுவர் பாடசாலைகள்) உள்ளன. இலவசக் கல்வி அறிமுகப்படுத்தப்பட்டதால் ஆரம்ப பாடசாலையிலிருந்து பல்கலைக்கழகம் வரை இலவசமாகக் கல்வி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறுவதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. புத்தகங்களையும் உடையும் வழங்குதல் காரணமாக இச்சந்தர்ப்பம் மேலும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. பெற்றோரும் முன்னை விடக் கூடுதலாக கஷ்டப்பட்டு பிள்ளைகளுக்கு கல்வியை வழங்க முயற்சிக்கிறார்கள். முன் பாடசாலை பருவத்திலிருந்தே பிள்ளைகளை கல்வியில் ஈடுபடுத்துகின்ற பெற்றோர்கள் இருக்கிறார்கள். தொழில்களுக்குச் செல்லாத பெரும்பாலான தாய்மார்கள் கூட இன்று பிள்ளைகளைப் பாடசாலைக்கும் உதவி வகுப்புக்களுக்கும் அழைத்துச் செல்கிறார்கள். போட்டிப் பரீட்சைகளுக்குத் தம் பிள்ளைகளைத் தயார்ப்படுத்துதல் தம் கடமை என்று கருதுகிறார்கள். பிள்ளைகளின் எதிர்காலததை சுபீட்சமானதாக ஆக்குவதற்கு இன்று பெருமளவில் போட்டியிடுவது தாய்மார்களாகும்.

பிள்ளைகளின் எதிர்காலப் பாதுகாப்பிற்காக பெற்றோர் தம் பிள்ளைகளுக்கு எத்தகைய அறிவைப் பெற்றுக் கொடுக்க வேண்டும்? கல்வி என்பது பரீட்சைக்காகப் படிப்பது மட்டுமல்ல. நற்பிரசையாக வாழ்வதற்குப் பயிற்சியும் தகுதியும் பெறுவதாகும். அப்படியானால் நாம் எமது பிள்ளைகளுக்கு எத்தகைய கல்வியை வழங்க வேண்டும். சற்று ஆராய்ந்து பார்ப்போம்.

கல்வியென்பது புத்தகங்களைப் படிப்பதும் இலக்கங்களைப் பறறிக் கற்றுக் கொள்வதும் மட்டுமல்ல. என்பதை இங்கு வலியுறுத்த வேண்டும். உடல் உள வளர்ச்சிக்காக பிள்ளைகளுக்கு அறிவு வழங்கப்பட வேண்டும். அதற்கேற்ற விதமாக பாட ஏற்பாடு பொருத்தமான விதத்தில் அமைய வேண்டும். எழுத்தைக் கற்றுக் கொள்வது போன்றே விளையாட்டு, சங்கீதம், நடனம், சித்திரம், நடித்தல் முதலிய வெளி வேலைகளிலும் ஓர் ஈடுபாடு இருக்க வேண்டும். பூரண ஆளுமை வளர்சி பெற்ற ஒரு தனி நபரை உருவாக்குவதே கல்வியின் நோக்கமாகும். அறிவை மட்டும் பெற்றுக் கொள்வதையல்ல நாம் பாடசாலையிலிருந்து எதிர்பார்க்க வேண்டும். பிள்ளையின் அறிவு, திறமை, மனப்பாங்கு ஆகிய மூன்றும் ஒன்றாக வளர்ச்சியடைய வேண்டும். அதனால் பெற்றோராகிய நாம் பிள்ளையை பாடசாலையில் சேர்த்ததன் பின் பிள்ளையின் கல்வி பற்றிக் கவனம் செலுத்த வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி பற்றிய தத்துவங்களும் பிள்ளையை நற்பிரசையாக்குவது பற்றிய கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன. சோக்கிரடீஸ், பிளேட்டோ முதலிய கல்வித் தத்துவவியலாளர்கள் கருத்துப்படி மனிதன் கல்வியினால் தான் பூரண மனிதனாக்கப்படுகின்றான். பிள்ளைக்குச் சுதந்திரமாகக் கற்றுக்கொள்வதற்கு இடமளிக்க வேண்டும் என்பதே ரூஸோவின் கருத்தாகும். ஜோன் டூவீயின் கருத்துப்படி இயன்றளவு அனுபவங்களைப் பெற்றுக் கொடுக்க வேண்டும். இருதயம், தலை, கை ஆகியன வளர்ச்சியடைவதற்கு தொழிற்பாடுகளைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்று மகாத்மா காந்தி கூறினார். பௌத்தத்தினடிப்படையில் மனிதத் தன்மையைப் பெற்றுக் கொடுத்தல் கல்வியாகும்.

பெரும்பாலான பெற்றோர்கள் பிள்ளைகளின் நன்மைக்காகப் பல்வேறு பௌதிக வளங்களைச் சேகரிக்கின்றார்கள். சிலர் காணி, வீடு வாசல், தளபாடங்கள், தங்க ஆபரணங்கள், பித்தளைப் பொருள்கள் முதலிய பல்வேறு பொருள்களைச் சேகரிக்கின்றார்கள். இவற்றைப் பற்றி பெற்றோர்களாகிய நாம் யதார்த்தமாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். சில பெற்றோர் ஒரு வேளைச் சாப்பாட்டை உண்ணாது பருகாது நல்லதொரு உடையைக்கூட உடுத்தாது பிள்ளைகளுக்காக சொத்துக்களைத் திரட்டுகிறார்கள். இது புத்திசாலித்தனமானதல்ல. சமயங்களினடிப்படையில் நாம் ஒரு சிலதைச் சேமிக்க வேண்டும். எனினும் பேராசையுடன் அவ்வாறு செய்யக் கூடாது. பெற்றோர் இவ்வாறு உண்ணாது உறங்காது சம்பாதித்துச் சேமித்தவற்றைச் சில பிள்ளைகள் வீணே விரயம் செய்வர். அவநாவசியமான முறையில் சொத்துக்கள் பொருள்களைச் சேகரித்துக் குவித்து வைத்து பிள்ளைகளைப் பிழையான வழியிற் செலுத்தும் பெற்றோரும் உள்ளனர். போதுமான அளவுக்குப் பொருள்களைச் சேகரித்துக் கொள்ள வேண்டும். பிள்ளைகளின் எதிர்காலத்துக்காக அநாவசியமான அளவு பொருள்களையும் சொத்துக்களையும் குவித்து வைப்பதால் தம் பிள்ளைகளுக்கும் அவற்றை மதிக்கத் தெரியாத நிலையை உருவாக்குகிறார்கள். சில பிள்ளைகளுக்கு தம் பெற்றோர் சேர்த்து வைத்த காணி பூமிகளைப் பரிபாலனம் செய்வதும் கஷ்டமானதாகும்.

வேறு சிலர் தம் பிள்ளைகளுக்கு மிக உயர்ந்த பதவிகளை பெற்றுக்கொடுக்க முயற்சி எடுக்கிறார்கள். பிள்ளையின் இயல்பான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறமைக்கேற்ப அப்பிள்ளையினால் செய்யக்கூடியவை சிலவாகும். அதனால்பிள்ளைகளிடமிருந்து நாம் ஓரளவு வளர்ச்சியைத் தான் எதிர்பார்க்க வேண்டும். பெரும்பாலானவர்கள் அயலவர்கள், சுற்றத்தவர்கள், குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் ஆகியோரை விஞ்சிச் செல்லுமாறு பிள்ளைகளுக்குக் கூறுகிறார்கள். இந்த சுயநல போட்டி காரணமாக பிள்ளைகள் பெற்றோர் மீது மனவிரக்தியடைகிறார்கள். பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் இடையிலிருக்க வேண்டிய அன்பு சிதறிப் போகின்றது. எல்லாப் பிள்ளைகளுக்கும் ஒரு பொறியியலாளராகவோ அல்லது ஒரு வைத்தியராகவோ ஆக முடியாது. ஒவ்வொரு பிள்ளையும் அடையக் கூடிய ஒரு மட்டம் உண்டு. அதற்கு ஏற்ப அப்பிள்ளை கல்வித் தராதரத்தைப் பெறுவார். ஒரு தொழிலைச் செய்வார். வாழ்க்கையில் வெற்றி பெறுவார். எல்லோராலும் உயர் கல்வி பெற முடியாது. ஒவ்வொரு தொழிலுக்குமுள்ள பெறுமதியைப் பற்றி பெற்றோர்களாகிய நாம் பிள்ளைகளுக்கு காரணங்களை எடுத்துக் காட்ட வேண்டும். சமூகத்துக்கு உதவக்கூடிய பல தொழில்கள் உள்ளன. திறமைக்கும் ஆற்றலுக்கும் ஏற்ப அத் தொழில்களுக்கு செல்வதற்கு நாம் அவர்களுக்கு வழிகாட்ட வேண்டும். பெற்றோர்களுக்குத் தேவையான தொழில்களில் பிள்ளைகளைச் சேர்த்து விட சில பெற்றோர்கள் செய்யாத வேலை இல்லை. இறுதியில் பிள்ளை திருப்திப்படாத நிலைக்குல்ளாகலாம்.

அதற்கிடையில் சில பெற்றோர் தன்னால் பெற்றுக் கொள்ள முடியாமற் போன சில கல்வித் தராதரங்களை பதவிகளை, பதவியுயர்வுகளை பிள்ளைகள் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று முயற்சிப்பர். வைத்தியர், பொறியியலாளர், முகாமையாளர் முதலிய தொழில்கள் மேலைத்தேச சங்கீதம், கிறிக்கெற்று, டெனிஸ், நீந்துதல் போன்ற விளையாட்டுக்கள் ஆகியவற்றில் சிலர் தம் பிள்ளைகளை ஈடுபடுத்துவதற்குக் காரணம் அவற்றைத் தம்மால் அடைய முடியாமற் போனமையாகும். தற்போதைய சமூகத்தில் பெற்றோர் தம் பிள்ளை மீது காட்டும் மனப்பாங்குக்கு ஏற்ப பல்வேறு பிரச்சினைகள் தோன்றியுள்ளன. பிள்ளைகளின் எதிர்காலப் பாதுகாப்புக்காக பெற்றோர் எடுக்கும் நடவடிக்கைகளின் காரணமாக உருவாகியிருக்கும் பிரச்சினைகள் தீர்க்க முடியாத அளவு சிக்கல் வாய்ந்ததாக காணப்படுகின்றன. பெற்றோருக்கு எவ்வித ஆறுதலும் இல்லை. பிள்ளைகளுக்கும் எவ்வித ஆறுதலுமில்லை. மன உளைச்சல் உள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோதல்கள், விரக்தி ஆகியவற்றினால் எத்தனை இளைஞர்கள் எத்தனை வளர்ந்தோர் இன்று வேதனைப்படுகிறார்கள். கிடைத்ததைக் கொண்டு திருப்தியடைய வேண்டுமென்று சமயங்கள் கூறுகின்றன. எனினும் இன்று எத்தனை பேர் கிடைக்காதவற்றுக்காக போராடுகின்றார்கள்? வருந்துகின்றார்கள்.

பிள்ளைகள் சிறுவயதினராயிருக்கும் போதே பெற்றோர் பல சவால்களுக்கு முகங்கொடுக்கின்றனர். பல தாய்மார்கள் போசாக்குள்ள உணவை உட்கொள்கிறார்களில்லை. எதையாவது சிறிது வயிறு நிரம்பச் சாப்பிடுவர். முட்டை, இறைச்சி, கருவாடு, மீன் முதலிய புரத உணவை பிள்ளைகளுக்குக் கொடுப்பர். போஷாக்குள்ள உணவைப் பெறாததால் தாய்மார் அகாலத்தில் வயோதிபர்களாகின்றன. தன் உடல் நலத்தைப் பேனாததால் பலர் தலைமுடி, தோல் ஆகியவை அகாலத்தில் மாற்றமடைகின்றன. அதன் காரணமாக பிள்ளைகள் சிலசமயம் பெற்றோருடன் பயணம் செல்லக்கூட விரும்புவதில்லை. தாமும் வாழ்ந்து தன் பிள்ளைகளையும் வாழச் செய்யப் பெற்றோர் கவனமெடுப்பது உகந்ததாகும்.

சில பெற்றோர்கள் தம் முழுக் காலத்தையும் பிள்ளைகள் சார்பாகவே செலவழிப்பர். பெரும்பாலான தாய்மார்கள் பொழுது போக்கிற்காகவோ புத்தகம், பத்திரிகை வாசிப்பதற்கோ, படம், நாடகம் பார்ப்பதற்கோ காலத்தைச் செலவழிப்பதில்லை. கணவனுக்கும் மனைவிக்குமிடையில் பேச்சுவார்த்தை கூடக் குறைவான குடும்பங்கள் உள்ளன. நோய்க்கு ஒரு மருந்தை எடுக்கத்தானும் பெற்றோர்களுக்கு நேரமில்லை.

பிள்ளைகள் தொடர்பாக தேவைக்கதிகமாக கற்பனை செய்யும் பெற்றோர்கள் இன்று மிக அதிகம். உண்மையில் அது பெரும்பாலானோர்க்கு ஒரு பகற்கனவாகவே முடிகின்றது. பிள்ளைகளைப் பற்றித் தேவைககதிகமாக திட்டமிடுவதால் குடும்பங்களில் ஒற்றுமையின்மை ஏற்படுகின்றது. விரக்தி காரணமாக குடும்பத்தில் பெற்றோருக்கிடையில் உறவு பழுதடைகின்றது. பெரும்பாலும் தாய் பிள்ளைகளின் எதிராகாலம் பற்றித் தேவைக்கதிகமாக எதிர்பார்ப்புக்களை வைத்துக் கொள்வதையும் தந்தை அவற்றில் அதிகம் கவனம் செலுத்தாதிருப்பதையும் காண முடிகிறது. அப்போது பல பிரச்சினைகள் தோன்றுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய குடும்ப ஒற்றுமையின்மை காரணமாக பாதிக்கப்படுவது பிள்ளைகளேயாகும். சொத்துக்கள், சீதனம், பொருள்களைச் சேகரித்தல் ஆகியவற்றுக்காக சில தாய்மார் மத்திய கிழக்கு நாடுகளுக்குத் தொழில் பெற்றுச் செல்கிறார்கள். அப்போது பிள்ளைகளும், தந்தையும் தனிமையாக்கப்படுகின்றனர். வெளியே காதல் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளும் தந்தைமார் பிள்ளைகளைக் கவனியாது விடுவர். இதனால் பிள்ளைகளே கைவிடப்பட்ட நிலைக்குள்ளாகின்றனர். பிள்ளைகளுக்கு தாயுடைய அன்பு மட்டுமன்றி தந்தையின் அன்பும் கிடைப்பதில்லை. தேவைக்கதிகமாக பிள்ளைகளுக்காக சொத்துக்களைத் திரட்டச் செல்லும் தாய் தந்தையருக்கு ஏற்படும் விபத்துக்களுள் சில இங்கு கூறப்பட்டன. பெற்றோர் தம் பிள்ளைகளுக்காக தேவைக்கதிகமாக எதிர்காலத்துக்காக சொத்து சம்பத்துக்களைத் திரட்டச் செல்வதால் குடும்ப நிறுவனம் சிதைந்து விடுகின்றது. பெற்றோர் பிரிதல், திருமண முறிவு ஆகியவற்றால் கஷ்டத்துக்கு உள்ளாவோர் பிள்ளைகளாவர். விரக்தி காரணமாக அவர்களது கல்வியும் பாதிக்கப்படுகின்றது. வீட்டில் கிடைக்காததால் அவர்கள் சமவயதுக் குழுக்களுடன் தொடர்பு கொள்வர். இதன் விளைவாக மதுபாவனை, போதைப் பொருட் பாவனை, சமபால் தொடர்பு ஆகியவற்றுக்குப் பழக்கப்படுகின்றார்கள். இவற்றின் மூலம் இவர்களது வாழ்க்கையே இறுதியில் அழிவுக்குள்ளாகிறது. பிள்ளையின் திறமைக்கேற்ப அவர்களது எதிர்காலத்தை அமைத்துக் கொள்வதற்கு இடமளியுங்கள். பல பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு முடியாததை அவர்கள் மீது சுமத்துகிறார்கள். இதனால் மாணவர்கள் பெருமளவு உளத்தாக்கத்துக்குள்ளாகிறார்கள். கூடிய போட்டி காரணமாக பாதிக்கப்படுபவர்கள் பிள்ளைகளாவர். பல வீடுகளில் காணப்படுகின்ற துர்ப்பாக்கியங்களுள் ஒன்று திறமையான பிள்ளை நல்ல என விதந்துரைக்கப்படுவதாகும். நல்ல மகன், தங்கமகன், அச்சாப் பிள்ளை, வலு கெட்டிக்காரன், கெட்டிக்காரி, சுட்டிப் பிள்ளை நல்ல மகன், செல்லப் பிள்ளை, ராஜா, இராணி என்ற பொயர்களால் அதிஷ்டமான பிள்ளைகளை அழைப்பர். இதனால் மற்றவர்கள் தாக்கத்துக்குள்ளாகிறார்கள். இவ்வாறு நல்லது கெட்டது என்று தெரிவதால் பிள்ளைகளுக்கிடையில் போட்டி, சண்டை, சச்சரவு பேதம் ஏற்படுகின்றன. பிளைளையை சண்டியன், குறுப்புககாரன் முதலிய பெயர்களால் அழைத்தலும் பொருத்தமானதல்ல. இதனால் பிள்ளைகளுக்கு கெட்ட குணங்கள் சூட்டப்படுகின்றது. பிள்ளைகளுக்கு விசேட அன்பு காட்டுவதும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருத்தமானதன்று. குடும்பத்திலுள்ள பிள்ளைகளைச் சமமாக மதிக்க வேண்டும். சமமாக அன்பும் ஆதரவையும் காட்ட வேண்டும். தாயைப் போலவே தந்தையும் பிள்ளைகளிடத்தில் அன்பு காட்ட வேண்டும்.

வீட்டில் போலவே பாடசாலையிலும் விவேகமான மாணவர்களுக்குப் போன்றே திறமை குறைந்த மாணவருக்கும் ஒரு சந்தர்ப்பத்தை வழங்க வேண்டும்.

"எனது மகன் கெட்டிக்காரன்
காலையில் கொழும்புக்குச் செல்கிறான்
நான்கு பணம் சம்பாதிக்கிறான்
ஒரு பணத்தை எனக்குத் தருகிறான்"

என அன்றைய தாய்மார் பிள்ளையின் திறமையை மெச்சியே பாடினார்கள். திறமை குறைந்த பிள்ளைகளையும் ஊக்குவிக்க வேண்டும். சிறு வயது முதலே ஒவ்வொரு பிள்ளையின் மட்டத்தையும் தரத்தையும் அறிந்து அவர்களது வெற்றியை மதிக்கவும் போற்றவும் வேண்டும். பிள்ளைகளுக்கு இடையில் ஒற்றுமை வளரக் கூடிய விதத்தில் வீட்டு வேலைகளைப் பிரித்துக் கொடுக்க வேண்டும். வேலை செய்ய விருப்பம் காட்டாதவர்களுக்கும் சில பொறுப்புக்களை ஒப்படைக்க வேண்டும். அப்போது பிள்ளைகளுக்கு இடையிலாயினும் வேலையை பிரித்துக் கொண்டு செய்ய முற்படுவர். இது தாய் மாருக்கும், தந்தைமார்களுக்கும் இலகுவானதாகும். உறவினர்கள், அயலவர்கள் ஆகியோர்களுடன் ஒத்துழைப்போடு வேலை செய்வதற்கு பிள்ளைகள் முன்வருவர். கேடு விளைவிக்கக் கூடிய போட்டி காரணமாக பிள்ளைகளுக்கிடையிலான ஒற்றுமையின்மை குடும்பத்தினருக்கும் அயலவர்களுக்கும் பரவும்.

நாம் பிள்ளைகளின் இயல் திறன்களை இனங்கண்டு அதற்கேற்ப அவர்களுடைய எதிர்காலத்துக்காக நடவடிக்கை எடுப்பது குடும்பத்தினதும் பிள்ளைகளினதும் நன்மைக்கு உதவும். அதற்காக நாம் செய்ய வேண்டியதெல்லாம் அவர்களது இயல்பான திறன்களை வளர்ப்பதற்கு உதவுவதாகும். ஒரே குடும்பமாயினும் பிள்ளைகள் வேறுபடுவர். ஒத்த இரட்டையர்களாயினும் சுவை, நாட்டம் திறமை ஆகியவற்றில் பெரும் வேறுபாடுகள் காணப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றோர்களாகிய நாம் அவர்களது இயல்பான திறன்களுக்கு ஏற்ப அவர்களது ஆற்றல்களை விருத்தி செய்ய வேண்டும்.

நல்ல மனப்பாங்குடையவர்களாகப் பிள்ளைகளை வளர்த்துக் கொள்ள வேண்டுமென்பது பெற்றோரின் எண்ணமாக இருக்க வேண்டும். அத்துடன் பிள்ளைகளின் மனப்பாங்கு விருத்தி பற்றியும் பெற்றோர்களாகிய நாம் விசேட கவனம் செலுத்த வேண்டும். பொறுமை ஒத்துழைப்பு, மற்றவர்களுடைய திறமையை மதித்தல், மற்றவர்களின் வெற்றியை மதித்தல் ஏற்றுக் கொள்ளுதல், போன்ற நற்குணங்களை பிள்ளைகளுக்குப் பயிற்றுவிக்க வேண்டும். சில பெற்றோர்களும் வளர்ந்தோரும் பிள்ளைகளை கிண்டலுக்கும் கேலிக்கும் உள்ளாக்குகிறார்கள். அதனால் அவர்களது சுய கௌரவம் பாதிக்கப்படுகின்றது. எல்லாப் பிள்ளைகளையும் கௌரவிக்க வேண்டும். நிறம், உயரம், பருப்பம் ஆகியவற்றைப் பார்த்து பெயரிடுதல் பொருத்தமானதன்று. பிள்ளையின் தோலின் நிறம், சாயல் என்பன எப்படியிருந்தாலும் அவர்களது திறமையை அறிந்து கொள்ள வேண்டும்.

சிறந்த குணாதியங்களையுடைய பண்புடைய பிள்ளையை வளர்த்துக் கொள்வது எமது நோக்கமாதல் வேண்டும். பெற்றோர்களாகிய நாம் பின்பற்றும் எமது சமய போதனைக்கேற்ற ஒரு சூழலை அமைத்துக் கொடுக்க வேண்டும். அப்போது சமய பின்னணிக்கு ஏற்ப பிளளைகளின் வாழ்க்கை பயிற்றுவிக்கப்படும். சிறந்த நற்குணங்களை விருத்தி செய்ய வேண்டும். புராதன சமூகத்தில் பௌத்த பெற்றோர்கள் பிள்ளைகளுடன் விகாரைக்குச் சென்று மலர் விளக்கினை வைத்து வழிபட்டனர். சமயத்தை நினைவூட்டினர். கிறித்தவ குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் ஞாயிற்றுக்கிழமை காலை தேவன் கோவிலுக்கு அழைத்துச் சென்று வழிபட்டனர். இஸ்லாம் சமயத்தைப் பின்பற்றுவோரும் முஸ்லிம் பள்ளிகளுக்குச் சென்றனர். தற்போதைய சமூகத்திலுள்ள பிரச்சினை காரணமாக சமய நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக குடும்ப அங்கத்தவர்கள் ஒன்று சேருவது கஷ்டமாகிவிட்டது. ஞாயிற்றுக் கிழமை மேலதிக வகுப்புக்களுக்குச் செல்வதனால் ஞாயிறு சமய வகுப்பு பாட வகுப்புகளுக்குச் செல்வதற்கு நேரமில்லை. வீட்டில் காலையும் மாலையும் சமயத்தை பின்பற்றுவதற்கு ஊக்குவிக்க வேண்டும். அதே போன்று பெற்றோரை மதிக்கவும் பழக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். சிறு வயதில் பழகிய பழக்கத்தை பெரியவர்களான பின்னரும் அவ்வாறே செய்வர். கௌரவிப்பது கேவலம் என்று நினைக்கும் பிள்ளைகள் இன்று நம் சமூகத்தில் உள்ளனர். அமைதியான தன்மை, கீழ்ப்படிவு பெரியோரை மதித்தல் ஆகியவற்றை சமய நம்பிக்கை அடிப்படையில் வளர்க்க வேண்டும். பெற்றோர், ஆசிரியர், மூத்தோரை மதிப்பதற்கு பிள்ளையை பழக்குதல் மிக முக்கியமானதாகும்.

நாம் வாழும் குறுகிய காலத்தை சிறப்பாக வாழ வேண்டும் என்று பிள்ளைகளின் உள்ளத்தில் பதிய வைக்க வேண்டும். சிறந்த பண்புகளை விருத்தி செய்ய வேண்டும், போட்டி, பொறாமையில்லாது பொறுமை, கிடைத்ததைக் கொண்டு திருப்தியடைதல், சகஜீவனம், ஒற்றுமை முதலிய நற்குணங்களை விருத்தி செய்ய வேண்டும்.

நற்குண நல்லொழுக்கமுள்ள ஒரு பிள்ளையைத் தோற்றுவிப்பது எமது நோக்கமாகும். எனினும் சில பெற்றோர் எதிர்காலத்தில் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கும், சிக்கல்களுக்கும் சவால்களுக்கும் முகங்கொடுப்பதற்கு அது சவாலாக அமையுமா என்று ஐயப்படுகின்றனர். அறிவு விருத்தியினால் மட்டும் ஒரு வித்திலும் ஒரு முழுப்படியான மனிதனைத் தோற்றுவிக்க முடியாது. மனிதன் சமூகத்திலேயே வாழ வேண்டியவனாவான். அவன் ஒரு குழுவின் அங்கத்தவனாவான். அவன் தனது நன்மைக்காக மட்டுமன்றி குழுவின் நன்மைக்காகவும் உழைக்க வேண்டும். அப்படியானால் சமூகத்துக்குப் பொருத்தமான மனிதத்தன்மையைக் கொண்ட ஒருவன் உருவானால் எதிர்கால சவால்களுக்குப் பயமின்றி முகம் கொடுக்க அவனால் முடியும். தொடர்ச்சியாக மாறும் சிறு சமூக சக்திகளால் மாற்றமடையச் செய்ய முடியாத உறுதியான நபர்கள் எமக்குத் தேவை. அத்தகையவர்களினால் தான் மனித சமூகத்தின் நன்மைக்காக தன்னை அர்ப்பணிக்க முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலையின் எதிர்பார்ப்புகள்

"எனது பிள்ளையை ஒரு மாதிரியாக நல்லதொரு பாடசாலையில் சேர்த்துக் கொண்டேன். இப்பொழுது தான் எனக்கு கொஞ்சம் நிம்மதி. இத்தனை நாளும் எனக்கு சரியாக தூக்கம் கூட போகவில்லை".

உங்கள் மகனை / மகளைப் பாடசாலையில் சேர்த்துக் கொண்ட தினத்தில் உங்களுக்கும் இவ்வாறு சிந்தனை எழுந்திருக்கக் கூடும். சில வேளை ஒரு நண்பரிடம் இவ்வாறு சொல்லியிருக்கவும் கூடும். உங்கள் அறிவின்படி உங்கள் செல்வந்த நிலை காரணமாக உங்களுக்குக் கிடைத்த சந்தர்ப்பத்திற்கேற்ப நீங்கள் மிகச் சிறந்த பாடசாலையில் பிள்ளையை சேர்த்துக் கொண்டமைக்காக ஒரு நிம்மதிப் பெருமூச்சைக் கூட விட்டிருக்கலாம். பிள்ளை நன்றாக வளர்ந்து, கல்வியும் கற்று வாழ்வதற்குத் தேவையான எல்லாத் திறமைகளையும், ஆற்றல்களையும் பெற்றுக் கொண்டு என்றோ ஒரு நாள் பாடசாலையில் இருந்து வெளியேறுவான் என்று நீங்கள் சிந்திக்கக் கூடும். உங்கள் பொறுப்பு அத்துடன் முடிவடைந்து விட்டதா? இல்லை, பாடசாலையிலிருந்து நீங்கள் எதிர்பார்த்தவை கிடைக்க வேண்டுமென்றால் உங்கள் பொறுப்பு, கடமை என்பன குறைவின்றி நிறைவேற வேண்டும். உங்கள் எதிர்பார்க்கை போலவே ஆசிரியர்களின் எதிர்பார்க்கையும் முக்கியமாகும். எல்லா ஆசிரியர்களும் அவ்வாறு சிந்திக்கிறார்கள்.

"நோய் நொடிகலற்ற நல்ல உயரம் பெருப்பமுடடைய, சாந்த குணமுள்ள கற்க ஆர்வமுள்ள மாணவர் குழுவொன்று எனது விருப்பிற்குக் கிடைக்க வேண்டும்" என்பதுவே ஆசிரியர்களின் ஒரே பிரார்த்தனையாகும்.

அவர்களது எதிர்பார்க்கைகள் நூற்றுக்கு நூறு வீதம் நிறைவேறுவது எப்போதாவது ஒரு முறையாகும். சேர்த்துக் கொள்ளப்படும் சில பிள்ளைகள் நோயாளர்கள், பார்வை, கேட்டல் குறைபாடுடைய பிள்ளைகள் சேர்ந்திருக்கிறார்கள். மற்றவர்களைத் தொந்தரவு பண்ணும் பிள்ளைகள் இருக்கிறார்கள். எப்போதும் மற்றவரில் தங்கியிருக்கின்ற எதையும் செய்து கொள்ள சொல்லிக் கொள்ள முடியாத பிள்ளைகள் இருக்கலாம். பொய்யுரைப்போர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கலாம், மற்றவர் பொருள்களை களவெடுக்கும் ஆர்வமுள்ளவர்கள் இருக்கக் கூடும்.

இந்த குணங்களை படிப்படியாக மாற்றியமைக்க ஆசிரியர் முயற்சி யெடுப்பார். ஒரு குழுவாக வாழும்போது அந்தக்குண நெறிகள் தடையாக அமைவதால் ஆசிரியர் பொது நன்மையைக் கருத்திற் கொண்டு சில பிள்ளைகளின் சில பழக்கங்களை மாற்றியமைக்க முற்படுவார். இங்கு சில பெற்றோர் தம் பிள்ளைகளிடமிருக்கும் அத்தகைய தீய பழக்கங்களை ஏற்றுக் கொள்ளத்தயங்குவர். பாடசாலையின் நோக்கமும் எதிர்பார்க்கையும் எல்லாப் பிள்ளைகளிடத்தும் நல்ல குணங்களை வளர்ப்பதாயின் பெற்றோரும் பாடசாலை எதிர்பார்க்கைகளையும் நோக்கங்களையும் விளங்கி அதற்கு இயன்றளவு உதவுவது கடமையாகும்.

சில சந்தர்ப்பங்களில் ஆசிரியர்கள் பயிற்றுவிக்கின்ற சில பழக்க வழக்கங்கள் உதாரணமாக 'பங்கிட்டுச் சாப்பிடுதல்' "வளங்களைப் பங்கிட்டுக் கொள்ளல்" பெற்றோருக்கு பழக்கமில்லாத, பரிச்சயமில்லாத ஒன்றாக இருக்கக் கூடும். பாடசாலையில் பழக்கும் இந்த பழக்கத்தை வீட்டில் ஒரு கூடாத பழக்கமாக பெற்றோர் கருதினால் அச்சந்தர்ப்பத்தில் அதே சிறு பிள்ளைகளுக்கு ஒரு பிரச்சினையைத் தோற்றுவிக்கும். யார் சரி என்பது பிள்ளைக்கு ஒரு பிரச்சினையாகும்.

"அடுத்த வீட்டு சமனுக்கு 'அடிமட்டத்தைக்' கொடுக்க வேண்டாம் என அம்மா சொன்னாலும் எங்களது டீச்சர் கொடுக்கிறது நல்லதென்று சொன்னா" அம்மாவா டீச்சரா சரி? இது கமலுக்கு ஏற்பட்ட பிரச்சினையாகும்.

பாடசாலையில் சொல்லுகின்ற செய்கின்றவற்றில் காணப்படும் உண்மையை பெற்றோர் விளங்கிக் கொள்ள வேண்டும். அப்போது பிள்ளை செல்ல வேண்டிய வழியை தேர்ந்தெடுப்பது மிக இலகுவாகும். பாடசாலை உருவாக்க முற்படும் சில பழக்கங்களை பெற்றோர் மதிப்பவர்களாகவும் வீட்டில் அந்தப் பழக்கத்தைப் பற்றி கவனிப்பவர்களாகவும் இருந்தால் மிக நன்று.

எல்லாப் பிள்ளைகளினதும் திறன்களையும், ஆற்றல்களையும் ஆசிரியர்கள் விளங்கிக் கொள்ள முயல்வர். எல்லாப் பிள்ளைகளினதும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவைகளைப் பற்றி அவர்கள் கவனமாயிருப்பார்கள். படிப்பதற்கு மிகச் சிறந்த மாணவர் மீதும் மிகவும் திறமை குறைந்த மாணவர் மீதும் ஆசிரியர் ஒன்று போல அன்பையும் கருணையையும் ஆதரவையும் காட்டுவர், உண்மையான ஆசிரியர்கள் இனம், குலம், சமயம், சமூக வகுப்பு, நிறம், சொத்து, உயர்வு தாழ்வு என்பவற்றுக்கு ஏற்ப பிள்ளைகள் மீது விசேட கவனம் செலுத்த மாட்டார்கள்.

தனது வகுப்பிலுள்ள எல்லாப் பிள்ளைகளையும் ஒன்றுபோல் கவனிக்கும் ஆசிரியர்தான் உண்மையான ஆசிரியர் தனது பிள்ளை மீது ஆசிரியர் கூடிய கவனம் செலுத்த வேண்டும் என இன்று பெற்றோர் பல நடவடிக்கைகளை மேற்கொள்கிறார்கள் என்பதைக் காணக் கூடியதாயுள்ளது.

"நான் நல்லதொரு ஸாரியை இந்த முறை பரிசாக வழங்க வேண்டும் அப்போது தான் என் பிள்ளைக்கு டீச்சருடைய கூடிய கவனிப்பைப் பெற்றுக் கொள்ளலாம்."

இவ்வாறு சிந்திக்கும் பெற்றோரும் இருக்கிறார்கள். ஆசிரியரின் தனிப்பட்ட பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க வலோற்காரமாக முன்வருவதும், ஆசிரியருக்கு அன்பளிப்புக்களையும் பரிசுகளையும் வழங்கி தம் பிள்ளைகளுக்குக் கூடுதலான அன்பைப் பெற்றுக்கொள்ள முயற்சிப்பதும் உகந்ததா நியாயமானதா? உங்களது இத்தகைய நடவடிக்கைகளால் சில சமயங்களில் ஆசிரியர் சங்கடமான நிலைக்குள்ளாகின்றனர்.

"எனது பிள்ளை நேற்று குமார் அடித்திருக்கிறான். நான் இன்று பாடசாலைக்குச் சென்று டீச்சரைக் கொண்டு அவனுக்கு இரண்டு அடிப்பிக்க வேணும்."

ஆரம்ப பாடசாலைகளில் படிக்கும் பிள்ளைகள் ஒருவரோடு மற்றொருவர் சண்டைபிடிப்பது ஏதேனுமொரு காரணத்துக்குமாகவல்ல. அவர்களுடைய கோபம் சில நிமிடங்களில் இல்லாமல் போய்விடும். ஒரு வகுப்பில் நாற்பது பேர்கள் அளவில் கற்கும் போது அவர்களுக்கிடையில் கருத்து வேற்றுமை கோபித்துக் கொள்ளல், சண்டை, சச்சரவுகள் ஏற்படுவது இயல்பானதாகும். அவற்றை பெற்றோர் பெரிதாகக் கொள்ளத் தேவையில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பருவத்தில் அவர்களிடம் ஏற்படும் உணர்ச்சிகள் தற்காலிகமானவை. கோபித்துக் கொண்டவருடன் சில நிமிடங்களுக்குள் நட்புக் கொள்வார்கள். ஆகவே பிள்ளைகளினால் ஏற்படும் சிறு தவறுகளுக்காக கோபப்பட்டுப் பாடசாலைக்குச் சென்று மேலும் பிரச்சினைகளை அதிகரித்துக் கொள்வது உகந்ததல்ல. கற்றலின் போது பிள்ளைகளுக்கு பெற்றோர்களிடமிருந்து கிடைக்கும் உதவியும் ஒத்துழைப்பும் மிக முக்கியம் என்பது உளவியல் ஆய்வுகளின் மூலம் தெரிய வந்துள்ளது.

பிள்ளையின் வளர்ச்சிக்கும், விருத்திக்கும் ஏற்றதாக பிள்ளையின் விருப்பு வெறுப்புக்களுக்கு ஏற்ப கற்றற் செயற்பாடுகளை தயாரிக்கும் போது பெற்றோர்களுக்கு ஆசிரியர்களிடமிருந்து கிடைக்கும் ஒத்துழைப்பு மிகப் பெறுமதி வாய்ந்ததாகும்.

ஆரம்ப பாடசாலை, பாலர் பாடசாலை என்பன கற்றல் சூழ்நிலைகளைக் கொண்டிருக்க வேண்டும். கணிதச் செயற்பாடுகள், மொழித் தொழிற்பாடுகள், சுற்றாடற் செயற்பாடுகள், ஆகியமுற்றுக்காக வகுப்பறைச் சூழல் நன்றாக அமைய வேண்டும். இங்கு கற்றல் உபகரணங்களைத் தயாரித்தல் தனி ஆசிரியரால் செய்வது கஷ்டமாகும். கற்றல் உபகரணங்கள் சில பணத்துக்காக கொள்வனவு செய்யப்படுபவையல்ல. சுற்றாடலிலிருந்து பெற்றுக் கொள்ளக் கூடியவையாகும். அவற்றைப் பெற்றோர்களால் கொள்வனவு செய்து கொடுக்க முடியுமாயின் ஆசிரியர்களின் வேலை இலகுவாகும். ஆரம்ப பாடசாலை பிள்ளைகளின் ஆக்கங்களை காட்சிக்கு வைத்தலும் முக்கியமாகும். இவ்வாக்கங்களை முறையாக காட்சிக்கு வைப்பதற்கு ஆசிரியருக்கு பெற்றோர் ஒத்துழைப்பு அவசியமாகும்.

வகுப்பறை நன்றாக சுத்தமாக அலங்காரமாக வைத்துக் கொள்ளவும் வேண்டும். அதற்காக கதிரைகள் மேசைகள், இராக்கை கபட் ஆகியவற்றை ஓர் ஒழுங்கில் வைக்க வேண்டும். இன்று இலங்கையிலுள்ள ஆரம்பப் பாடசாலைகள் மற்றும் பாலர் பாடசாலைகள் பலவற்றிலும் இந்த வசதி திருப்தியற்றதாக உள்ளது. ஆரம்பப் பாடசாலைக்குத் தேவையான எல்லா உபகரணங்களும் கற்றலுக்குத் தேவையான பொருள்கள் முதலியன அரசினால் கிடைக்கப் பெறாதிருக்கக் கூடும். அவற்றை முழுமையாக்கிக் கொள்ள பெற்றோர் உதவுவார்களாயிருந்தால் பாடசாலையின் வேலை இலகுவாகும். தத்தம் வசதிக்கேற்ப அவ்வுதவியைச் செய்ய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியும். பாடசாலைக்கு உதவி செய்வதற்கு பெற்றோர் போட்டியிடத் தேவையில்லை. என்ன தேவையென்றால் பெற்றோர் குழுவாகச் சேர்ந்து ஒன்றுபட்டு பாடசாலை விருத்திக்கு நடவடிக்கை எடுப்பதாகும்.

பாடசாலைத் தோட்டத்தை கல்விக்கு உதவக் கூடியவாறு அமைத்தல் பாடசாலையின் வேலை என்று உங்களுக்குத் தோன்றக் கூடும். ஆனால் உங்களது பிள்ளை கட்டிடத்தினுள் சிறைப்பட்டு ஆசிரியரிடத்தில் மட்டும் கற்றுக் கொள்ளும் ஒருவரல்ல என்பதை நீங்கள் அறிவீர்கள். பாடசாலைத் தோட்டம் மரம் செடி கொடிகளையும் கொண்டிருக்குமளவுக்கு உங்கள் பிள்ளைக்குக் கற்பதற்கு உள்ள வசதி அதிகமாகும். பாடசாலை தோட்டத்திலுள்ள விளையாட்டு உபகரணம் உங்கள் பிள்ளையை விளையாடத் தூண்டும். ஊஞ்சலைக் காணும் பிள்ளை ஊஞ்சலாட தூண்டப்படும். மீன் தொட்டியைக் காணும் பிள்ளை மீன்களின் நிறத்தை அறிந்து கொள்ள முயற்சிக்கும். பாடசாலைத் தோட்டத்தை நன்றாக வைத்துக் கொள்வதற்கும் பெற்றோர் தமது லீவு நாட்களில் வந்து தம் உழைப்பை பெற்றுக் கொடுப்பதன் மூலம் உதவிபுரியலாம்.

பாடசாலையின் எதிர்பார்க்கை உங்கள் பிள்ளையின் அறிவை விருத்தி செய்வது மட்டுமல்ல. சிறந்த நற்பிரசையை உருவாக்குவதற்கு ஆசிரியர்கள் மிகவும் முயற்சி செய்வர். பாடசாலையில் பழக்கின்ற நற்பழக்கங்களை வீடுகளிலும் அவ்வாறே செயற்படுத்தப்படுவதைக் காண்பது அவர்களது எதிர்பார்க்கையாகும்.

உங்கள் பிள்ளையின் வகுப்பிலுள்ள ஏனைய பிள்ளைகளையும் அறிந்து கொள்ள முயற்சி செய்யுங்கள். பெற்றொர்களைச் சந்தித்து பெற்றோர்களை அறிந்து கொள்வதற்கு உங்களுக்குச் சந்தர்ப்பம் பெற்றுத் தரப்படும் பெற்றோர்களைச் சந்திக்கச்செல்லும் போது ஆசிரியர்களுடனும் ஏனைய பெற்றோர்களுடனும் கதைத்துப் பேசுங்கள். சமவயதுப் பிள்ளைகளின் பிரச்சினைகளை விளங்கிக் கொள்வதற்கு உங்கள் அனுபவங்களுடன் ஏனைய பெற்றோர்களின் அனுபவங்களையும் ஒன்று சேர்த்துக் கொள்ளுங்கள். உங்கள் பிள்ளையை நன்றாக விளங்கிக் கொள்ள வேண்டுமாயின் நீங்கள் மற்றப் பிள்ளைகளையும் ஓரளவுக்கேனும் அறிந்து விளங்கிக் கொள்ள வேண்டும்.

உங்கள் பிள்ளைக்குக் கல்வியூட்டும் ஆசிரியரிடமும் சில வேளை நீங்கள் முன்மாதிரியாகக் கொள்ளக்கூடியவை இருக்கக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடும். ஆசிரியர்களின் குறைபாடுகளைச் சுட்டிக்காட்ட பெற்றோர் அவசரம் காட்டுகின்ற சந்தர்ப்பங்கள் அநேகம் உண்டு. சில ஆசிரியர்கள் தம் குறைபாடுகளை அறிந்து வேலை மதிக்கப்படுவதை விரும்புவர். பாடசாலை உங்கள் பிள்ளைக்காகச் செய்யும் வேலைகளை தேவையான போது பாராட்டுங்கள். ஆசிரியர்களும் பாராட்டப்படுவதை விரும்புகிறார்கள். ஆசிரியர்களுக்கும் ஒரு பாதுகாப்பு உணர்வு அப்போது தான் தென்படும். ஆசிரியர்களும், பிள்ளைகளும் பெற்றோரும் ஒரே குடும்பத்தின் அங்கத்தவர்களாவர்.

நீங்கள் பாடசாலையிலிருந்து எதனையெல்லாம் எதிர்பார்க்கின்றீர்களோ அவற்றையே பாடசாலை உங்களிடமிருந்தும் எதிர்பார்க்கின்றன. நற்குண நல்லொழுக்கமான ஒரு பிள்ளையை உருவாக்குவதே இரு சாராரதும் நோக்கமாகும். அதற்குத் தேவையான சூழலை அமைத்துக் கொள்வதற்கு இரு சாராரும் ஒன்றுபட்டுச் செயலாற்ற வேண்டும்.

UNIVERSITY ...
15-12-1995

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகள் எங்களுடையவர்கள். நாம் பிள்ளைகளுக்குரியவர்கள். எனினும் பெற்றோர்களென்ற வகையில் எமது பிள்ளைகளை நாம் அறிந்து கொண்டுள்ளோமா என்று சற்று சிந்தித்துப் பார்ப்போம். குழந்தைகளாயிருக்கையில் அழுகிறார்கள். அவர்கள் அழுவது பசியை போக்கிக் கொள்வதற்கு மட்டுமல்ல சில சமயங்களில் அவர்களுக்கு அன்பும் ஆதரவும் தேவைப்படுகின்ற காரணத்தினாலாகும். எட்டு மாதம் அல்லது ஒரு வருடமாகின்ற போது குழந்தைகள் பெற்றோர்கள் வெளியே செல்லும் போது விசேடமாக தாய்மார் தொழிலுக்காக வெளியேறும் போது அழுவார்கள். சில பிள்ளைகள் முன் பாடசாலைக்கு அல்லது ஆரம்பப் பாடசாலைக்கு போகமுடியாது என்று அழுவர். பின் ஆரம்பநிலை வகுப்புகளில் சிலர் பாடசாலையை விட்டு நீங்குவர். குழநதைப் பருவத்திலிருந்து பெற்றோர்களால் சில சமயங்களில் பிள்ளைகளை விளங்கிக் கொள்ள முடியாமை காரணமாக பெற்றோருக்கும் பிள்ளைகெளுக்குமிடையில் இடைவெளி அதிகரிக்கின்றது. ஆகவே சிறுவயது முதல் விளங்கிக் கொள்வது அத்தியாவசியமாகும். இதற்காக நாம் பெற்றோர்கள் என்ற வகையில் வேறு என்னதான் வேலைகள் இருந்த போதிலும் மாலையில் ஓய்வு நேரத்தையாவது பயன்படுத்த வேண்டும். அவர்களது பிரச்சினையை நாம் விளங்கிக் கொள்ள அத்தியாவசியமானதாகும்.

சிறு பராயத்தில் பிள்ளைகளை இடுக்கி வைத்து கொஞ்சுங்கள். சில பெற்றோர்கள் இது தாய்மாருக்கு மட்டும் உரியது என்று கருதுகிறார்கள். கிராமப் புறங்களில் மாலை வேளைகளில் குடும்பத்திலுள்ளவர்கள் ஒன்று சேர்ந்து பாட்டா வீசுதல், நெருஞ்சி இழுத்தல் முதலிய விளையாட்டுக்களில் ஈடுபட்டனர். இதற்கிடையில் வயலில் அல்லது வேலைத்தலத்திலிருந்து வந்த தந்தைமார் பிள்ளைகளுடன் பேசி கதைத்து மகிழ்ந்தனர். விண்ணிலிருக்கும் தாரகை பற்றியும் இயற்கை அழகு பற்றியும் கதைகள் சொன்னார்கள்.. குழந்தைகளை இடுப்பில் வைத்துக்கொண்டு கொஞ்சினார்கள். தற்கால சமூகத்திலுள்ள சிக்கல் காரணமாக இன்று பெற்றோர்களுக்கு ஓய்வு குறைவு. எனினும் சிறு வயது முதல் சிறுவர்களுக்குத் தேவையான அன்பையும் ஆதரவையும், பற்றையும் பாசத்தையும் பெற்றுக் கொடுக்க வேண்டும். அதே போன்று ஒரு பிள்ளை முன் பாடசாலையில் அல்லது ஆரம்ப பாடசாலையில் இன்றேல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடைநிலைப் பாடசாலை வகுப்புக்களில் சேர்த்துக் கொண்டதன் பின்னரும் பிள்ளையின் நலனைப் பற்றி பெற்றோரின் கவனம் கட்டாயமாக செலுத்தப்படல் வேண்டும். ஆசிரியர்களுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருத்தல் மிக முக்கியமாகும். பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகள் பற்றி மட்டுமல்ல உடலியல், உளவியல் குறைபாடுகள் பற்றியும் கூட அறிந்து கொள்வதற்கு அவர்களுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருக்க வேண்டும். அதே போன்று பிள்ளைகளின் கல்விநிலை பற்றி மட்டுமன்றி அவர்களது நடத்தைப் பாங்கு பற்றியும் நல்ல விளக்கத்தைப் பெற்றுக் கொள்ள இது ஆதாரமாகின்றது.

தற்கால சமூகத்தில் பெரும்பாலான பெறறோர்கள் தமது பிள்ளைகளைச் சுற்றாடலிலிருந்து தனிமைப்படுத்துகிறார்கள். அதற்குப் பிரதான காரணம் இன்று நிலவும் போட்டி சமூகமாகும். பிள்ளையைப் பாடசாலையில் சேர்த்துக் கொள்வதற்காக ஒரு பெரும் போராட்டத்தில் ஈடுபட வேண்டியுள்ளது. சில சமயங்களில் பொய் முகவரியைக் கொடுத்து வதிவிடத்தை உறுதிப்படுத்திக் கொள்கிறார்கள். மூன்றாம் ஆண்டிலிருந்து பிள்ளைகளை புலமைப் பரீட்சைக்காக மேலதிக வகுப்புகளுக்கு அனுப்புகிறார்கள். ஆறாம் ஆண்டிலிருந்து க.பொ.த. (சா.த.) வகுப்புக்காக ஆயத்தப்படுத்துகிறார்கள். அந்தத் தடையை தாண்டியதும் க.பொ.த.ப. (உ.த.) போட்டியாகும். இந்த விதமாக பிள்ளை பாடசாலையில் காலடியெடுத்து வைத்த நாளிலிருந்து கடினமான போட்டிக்கு ஆயத்தம் செய்யப்படுகிறார்கள். உண்மையில் இது ஒரு பிள்ளையினால் தாங்கிக் கொள்ள முடியாததாகும். பலர் இதனால் விரக்திக்கு உள்ளாகிறார்கள். தற்போதைய சமூகத்தில் காணப்படும் உள நோய்களுக்கு பெரும்பாலும் இந்த விரக்தியே காரணமாகின்றது. இதைத் தவிர குடும்ப நிறுவனம் உடைந்து வருவதும் விரக்திக்கு மற்றொரு காரணமாகும். தாய்மார் மத்திய கிழக்கு நாடுகளுக்குத் தொழில்களுக்காகச் செல்வதாலும் சில பிள்ளைகள் வழி தவறுகிறார்கள். பிள்ளைகள் கட்டுப்பாடின்றி அங்குமிங்கும் திரிவதற்குப் பிரதான காரணம் பெற்றோரோடும் முதியவர்களுடனும் தொடர்பு முறிந்து போனமையாகும். ஆகவே சிறு வயது முதல் இயன்றளவு சுற்றாடலுடன் தொடர்புபடுத்தி பிள்ளைகளை கண்காணித்துப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

நவீன சமூக சக்திகள் சக்திவாய்ந்த அலைபோன்று பரந்து எமது விழுமியங்களை பாழாக்குகின்றன. இந்த அலைக்குள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகப்படாது அலையை அணைத்துக் கொண்டு தனிமைப்படுத்தப்படுகின்ற சங்குகளையும் ஓடுகளையும் போன்று தனிமையாகுவதற்குரிய சக்தியை நமது பிள்ளைகளிடம் ஏற்படுத்த வேண்டும். அதற்காக சிறு வயதுதொடக்கம் தாங்கிப் பிடிக்கக் கூடிய எளிமைத் தன்மையை ஏற்படுத்துவது முக்கியமாகும். தாயின் இடுப்பில் இருக்கும் காலம் தொடக்கம் பிள்ளைக்குச் சில நற் பழக்கங்களைப் பழக்க வேண்டும். வணங்குதல் முதியோரை அறிந்து கொள்ளல் ஆகியவற்றைப் பழக்குதல் நன்று. அதனை விளங்கி உணர்வோடு செய்வதற்கு கற்பிக்க வேண்டும். இயந்திர ரீதியான வணக்கம் உணர்வோடு செய்யப்படுவதல்ல. பெற்றோரையும் கவனிக்க பழக்குதல் நன்று. புத்தாண்டு, நத்தார், தீபாவளி, ரம்ழான் முதலிய பெருநாட் தினங்களில் முதியோரைக் கவனிக்கவும் முதியோருக்கு கௌரவம் செலுத்தவும் பழக்குவது நல்லது. மங்கள, அவமங்கள் தினங்களிலும், வணக்கத்தலங்களிலும் நடக்கும் முறையை சிறுவர்க்கு சிறு வயது முதலே பழக்க வேண்டும். இவற்றை இலகுவாக முன்மாதிரி மூலம் செயற்படுத்தலாம்.

பெற்றோர்களாகிய நாம் நல்ல விளக்கமுடையவர்களாக இருக்க வேண்டும். அதற்காக நூல்களை வாசித்தல், சஞ்சிகைகள் வாசித்தல், வானொலி, தொலைக்காட்சி ஆகியவற்றின் செய்திகள், கலந்துரையாடல்கள், பேச்சுக்கள் ஆகியவற்றுக்கு செவிமடுத்தலும், பார்த்தலும் என்பன அவசியமாகும். நவீன சமூகம் பல்வேறு கருத்துக்களும் வந்து ஒன்று சேர்ந்து மீண்டும் மீண்டும் புதுப்பிக்கப்படுகின்ற சமூகப் பிரவாகமாகும். இந்த புதிய அறிவைப் பற்றி திறந்த மனதோடு இருப்பது முக்கியமானதாகும். பிள்ளைகளின் உரிமைகளைப் பற்றிப் பேசப்படுகின்ற இந்த யுகத்தில் போன்று பிள்ளைகளின் பிரச்சினைகள் மலிவடைந்து காணப்படும் ஒரு யுகம் வேறில்லை. பர்ல்யதுஷ் பிரயோகம், போதைப் பொருள்கள், காமக் குற்றச் செயல்கள், சமபாற் தொடர்பு, சமூக நோய்கள், எய்ட்ஸ், உடற்குறைபாடுடையவர்கள் ஆகிய பல பிரச்சினைகள் பால்ய வயதினரைப் பாதிக்கின்றன. பெற்றோர்களாகிய எமது முக்கிய கடமை எமது பிள்ளைகள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் மீது அனுதாபத்தோடு பார்ப்பதாகும். அத்துடன் இப்பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரம்பரை இடைவெளி தொடர்பான பிரச்சினை நவீன உலகை பெருமளவில் பாதிக்கின்றது. இது வயது வந்தோருக்கு இளைஞர் சமூகத்தை விளங்கிக் கொள்ள முடியாமையினால் ஏற்பட்டிருக்கும் பிரச்சினையாகும்.

பிள்ளை வளர்ந்தவர்களை விட வேறுபட்டவர். பிள்ளைகளுக்கிடையில் உள்ள வேறுபாடுகள் ஏராளம். பிள்ளைகளின் தேவைகளும் ஏராளம். அவர்களுக்குத் திறமைகளும், ஆற்றல்களும் உண்டு. பிள்ளைகளுக்கு உணவு வழங்குவதன் மூலமும் பாடசாலையில் சேர்த்து விடுவதன் மூலம், நோய்களுக்குச் சிகிச்சை செய்வதன் மூலமும் மட்டும் பெற்றோர்கள் திருப்தியடைந்து விட முடியாது.

பிள்ளைகளின் திறமைகளை விளங்கிக் கொள்ளுங்கள். அவர்களது விருப்பு வெறுப்புகளை அறிந்து கொள்ளுங்கள்.

பிள்ளைகளை கட்டுப்படுத்துவதை விட பிள்ளைகளுக்கு உதவுதல் முக்கியம் என்பதை கவனியுங்கள்.

சமூகத்தின் நன்மைக்காக சேவை செய்யக்கூடிய ஒரு பிள்ளை உருவாக்குவதற்கு பங்களிப்புச் செய்யுங்கள்.

பெற்றோர்களே நாட்டின் எதிர்காலம் உங்கள் கைகளிலே இருக்கின்றது. இயன்ற அளவுக்கு உங்கள் கடமையை நிறைவேற்றுங்கள்.

UNIVERSITY ...
15-12-1995
471502

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
15-12-1995
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலை ரூபா 75.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

OFFSET BY THE PACIFIC PRESS (PVT) LTD, COLOMBO - 13.